
வைர
பொம்மை
இந்திரா சௌந்தர்ராஜன்

## பொருளடக்கம்


அத்தியாயம் 1

அத்தியாயம் 2

அத்தியாயம் 3

அத்தியாயம் 4

அத்தியாயம் 5

அத்தியாயம் 6

அத்தியாயம் 7

அத்தியாயம் 8

# 1

வைரம் என்கிற ஒரு சொல்லுக்கு உண்மையான, சரியான பொருள் என்ன தெரியுமா?

'விலை மதிப்பற்ற, காலங்களை வென்ற, புதைந்தும் அழிந்துவிடாத, மகா சிரஞ்சீவியான, நிகரில்லாத சக்தி படைத்த ஒரு பொருள்...' என்பதே ஆகும்! விலை மதிப் பற்றது அது என்பது எல்லோருக்கும் தெரியும். இல்லா விட்டால் ஒரு செண்ட் வைரமெல்லாம் ஐயாயிரம், பத்தா யிரம் என்று விற்குமா?

காலங்களை வென்ற, புதைந்தும் அழிந்து விடாத... என்று தொடர்கின்ற மற்ற விஷயங்கள்தான் பலரும் அறிந்திருக்காத ஒன்றாகும்!

விமான நிலையம்! மும்பையில் இருந்து பறந்து வந்தி ருந்த அந்த விமானம், சென்னை மீனம்பாக்கம் விமான நிலையத் தரையை முத்தமிட்டு ஓடத் தொடங்கியிருந் தது. ஆவலாக, அதன் வருகைக்காக காத்துக் கொண் டிருந்தான் ஸ்ரீதரன்

பைஜாமா, குர்தா என்கிற வட இந்திய உடை, நெற்றியில் விபூதிப் பந்தல், கழுத்தில் ஸ்படிக மாலை. காலில் துளி யும் அழுக்கில்லாதபடி ஸ்லிப்பர் செருப்பு... மொத்தத்தில் ஏதோ ஒரு ஆஸ்ரமத்தில், ஒரு பெரிய ஸ்வாமிஜிக்கு சிஷ்யனாக இருப்பது போல ஒரு தோற்றம்.

அவன் முகத்தில் ஒரு மெல்லிய பரபரப்பு நிலவிக் கொண்டே இருந்தது.

அடிக்கடி பயணிகள் வெளியேறி வரும் பகுதியின்மேல் ஒரு பார்வையும் சுற்றுமுற்றும் ஒரு பார்வையுமாகவே இருந்தான். யார் யாரோ வந்தார்கள்.

உலகில் எத்தனை விதமான சூட்கேஸ்கள் உள்ளன, எத்தனை விதமான ப்ரீஃப் கேஸ்கள் உள்ளன என்பதை, அங்கே கொஞ்ச நேரம் நின்றால், பார்த்தே தெரிந்து கொண்டு விடலாம்.

உருண்டையாக ரோலர் போலவெல்லாம் பயணப் பெட்டிகள். நாயை சங்கிலிகட்டி இழுத்துப் போவது போல இழுத்தபடி ஒரு ஆப்பிரிக்காகாரன் வந்து கொண்டிருந்தான். காத்திருப்பவர்களின் தரப்பில் பலவித உணர்வுகள்... அது அவரவர் முகங்களில் நன்றாகவே எதிரொலித்தது.

உலகில் மனிதனாய்ப் பிறந்து கண்டம் விட்டுக் கண்டம் போய்ப் பிழைப்பது ஒரு விதம் என்றால், அப்படி பிழைத்து விட்டுத் திரும்பி தாய் மண்ணுக்கு வருவது இன்னொரு விதம். அப்போது காத்திருக்கும் உறவுகளைப் பார்ப்பதும், அவர்களோடு கலப்பதும் காலம் காலத்துக்கும் மனதில் நின்றுவிடப் போகும் ஒரு விஷயமாகும்.

அம்மட்டில் ரயில்வே ஸ்டேஷன், பஸ் ஸ்டாண்டைவிட ஏர்போர்ட் மிகவே மாறுபட்ட ஒரு இடமாகும். இங்கேதான் ஆயிரக்கணக்கான மைல்களுக்கு அப்பால் இருந்தும், வருடக்கணக்கான பிரிவை ஒரு முடிவுக்குக் கொண்டு வந்தும் இறங்குபவர்கள் அதிகம்.

ஸ்ரீதரன் அப்படி யாருக்காக காத்திருக்கிறான் என்று தெரியவில்லை. ஆனால் அவனிடமும் அந்த மாதிரி ஒரு தவிப்பு. அவன் கையில் ஒரு சந்தன மாலை கூட இருந்தது. அப்படியானால் நிச்சயம் அவன் மரியாதைக் குரிய ஒருவருக்கு அதை அணிவிக்கப் போகிறான் என் பதுபோல் தோன்றியது. உறவுகளுக்கு எதற்கு மாலை? அவர்களைப் பார்க்கும்போது ஏற்படும் நெகிழ்வும், கன் னத்தில் புரண்டு விழும் கண்ணீரும்தான் பெரிய மாலை.

ஸ்ரீதரன் பயணிகளையும், வரவேற்க வந்தவர்களையும் ரசித்தபடியே பயணிகள் வரும் டொமஸ்டிக் தடத்தைப் பார்த்தபடியே இருந்தான். சட்டென அவன் முகத்தில் ஒரு மாற்றம். ஒரு பரபரப்பு. அவன் யாருக்காக காத்தி ருந்தானோ, அவர் வந்து கொண்டிருந்தார். பட்டு பஞ் சக்கச்சம், மேலே ஷெர்வாணி கோட், தலையில் எம்ஜி யார் தொப்பி... கைவிரல்களில் நவரத்னங்கள் மின்னும் மோதிரம், கழுத்தில் கூட பெரிய சங்கிலி, அதில் மரகதப் பதக்கம். நெற்றியில் கோபி சந்தனம்.

அச்சு அசல் ஒரு குஜராத்தி சேட்டின் தோற்றம்! அவர் ஸ்ரீதரனைச் சமீபிக்கவும், ஸ்ரீதரன் வேகமாய் அவர்முன் வந்தான்.

"ஜீ..."

"வா ஸ்ரீதரா... வந்து ரொம்ப நேரமாச்சா? அவர் கேட்கும் போதே அவர் கழுத்தில் சந்தன மாலையைப் போட்டு அப்படியே அந்த இடத்திலேயே அவர் காலைத் தொட்டு வணங்கினான். அவரும் அவன் தோளைத் தொட்டு பாசமாக பக்கவாட்டில் அணைத்தார். அப்படியே இருவ ரும் நடந்தனர். வழவழப்பான மார்பிள் தரையில் அவரது

வீல் சூட்கேஸ் அவர் பின்னால் ஒரு சேவகன் போல தொடர்ந்தது.

"எப்படி இருக்கே?"

"நல்லா இருக்கேன் ஜீ... என்ன ஜீ இப்படி திடீர்னு புறப் பட்டு வந்திருக்கீங்க...?"

"காரணமாத்தான்... ஆமா, நீ ஃப்ரீயாதானே இருக்கே?"

"ஆமாம் ஜீ! நீங்க வரப்போறீங்க, ஒரு வாரம் ஆபீசுக் கும் லீவு போடுங்கன்னு மும்பையில் இருந்து விட்டல் ஃபோன் பண்ணிச் சொன்னார். அதுவும் ஒரு இரண்டு மணி நேரத்துக்கு முன்னாலதான்.

"நானே இன்னிக்கு காலைலதான் சென்னை கிளம்ப ணும்னு முடிவு செய்தேன். அதனாலதான் யாருக்கும் தகவல் தரமுடியல. உன்னைத் தவிர, யாருக்கும் நான் இப்ப சென்னை வந்திருக்கறது தெரியாது. தெரியவும் கூடாது." அவர் அப்படிச் சொன்னது ஸ்ரீதரன் முகத்தில் ஒருவித ஆச்சரிய அதிர்வாய்ப் பரவியது.

"ஏன் ஜீ... நீங்க வந்திருக்கிறது தெரிஞ்சா, எவ்வளவு கூட்டம் ஏர்போர்ட்டுக்கு வந்திருக்கும் தெரியுமா?"

"நான் ஒரு முக்கியமான வேலையாக வந்திருக்கேன் ஸ்ரீதர். இந்த மாணிக்லால் எப்பவும் எதையும் திட்டம் போட்டுதான் செய்வான்கறது உனக்குத் தெரியாதா?"

அவர் கேட்டபடியே, ஊர்ந்து வந்து நின்ற டாக்சியில் ஏறி னார். ஸ்ரீதரனும் உடன் ஏறிக்கொண்டான். டிரைவர் சூட்

கேஸை வாங்கி பின்னால் வைத்து விட்டு வந்து காரைக் கிளப்பினான்.

காரும் சீற ஆரம்பித்தது.

அவர்களுக்குள்ளும் பரிமாற்றங்கள். "ஜீ உங்களை இப் படி சாதாரண சந்தன மாலையோடு வரவேற்றதுலே எனக்கு உடன்பாடே இல்லை. கொஞ்சம் முன்னால தெரிஞ்சிருந்தாலும் நல்லா ஏற்பாடு செய்திருப்பேன்.

"நல்ல ஏற்பாடுன்னா எப்படி ஸ்ரீதரா?"

"என்ன ஜீ அப்படிச் சொல்லிட்டீங்க.... இன்னிக்கெல் லாம் இந்த இந்தியாவுல உங்க அளவு ரத்னக் கற் கள். பற்றித் தெரிஞ்சவங்க யார் இருக்கா? ரத்னங்கள் பற்றி மட்டும் இல்லாம, நவக்கிரகங்கள், யந்திரங்கள், மந்திரங்கள்னு உங்களுக்குத் தெரியாத விஷயமே இல் லையே.

எத்தனை பேர் வாழ்க்கையைத் தலைகீழா மாத்தியி ருக்கீங்க! பல பேருக்கு இங்க நீங்கதானே கடவுள்.... அப்படிப்பட்ட உங்களை பூப்பல்லாக்குலையே வெச்சிக் கூட தூக்கிட்டுப் போகலாமே... தப்பில்லையே?"

"நீ என் மேல இருக்கிற அன்பினால இப்படி எல்லாம் பேசறே. உன் அன்பு போதும் ஸ்ரீதரா, எனக்கு... எதுக்கு பூப்பல்லாக்கு எல்லாம்?"

"நான் என் ஆசையைச் சொன்னேன் ஜீ"

"அதுசரி... இப்ப உன் மகன் எப்படி இருக்கான்?" மாணிக்லால் என்னும் அந்த மனிதர் தொப்பியைக்

கழட்டி மடிமேல் வைத்தபடியே கேட்ட கேள்விக்கு ஸ்ரீதர னிடம் உற்சாகமான பதில்.

"ஜீ... அவன் மனநிலை இப்ப ரொம்ப தெளிவா இருக்கு. முன்ன மாதிரி போட்டுக் குழப்பிக்கற வேலையெல்லாம் சுத்தமா அவன்கிட்ட கிடையாது. பேச்சிலையும் பதட் டமோ படபடப்போ இல்லை. காலேஜ்ல எல்லா சப் ஜெக்ட்லையும் எண்பதுக்கு மேல் மதிப்பெண் எடுத்தி ருக்கான். இதை எல்லாம் பார்த்த என் மனைவி அப் படியே பிரமிச்சுப் போய் உங்க போட்டோவை பூஜை அறைல மாட்டி அதுக்கும் கற்பூரம் காட்டறான்னா பார்த் துக்குங்களேன்."

ஸ்ரீதரன் கையைக் கட்டிக்கொண்டு சொல்ல, மாணிக் லால் என்கிற அந்த மனிதர் மிதப்பாக நிமிர்ந்தார்.

"அதுக்குத்தான் அவனுக்கு முத்து மோதிரம் போடச் சொன்னேன். அவன் ஜாதகத்துல சந்திரன் நீச்சம். போதாக்குறைக்கு லக்னத்துல சனி வேற... சூரியனும் நீச்சம்... ஒரு சுபகிரகம் கூட ஆட்சியோ உச்சமோ பெறாத ஒருவிதமான ஜாதக அமைப்பு. நல்லவேளை... சந்தி ரன் நீச்சப் பட்டாலும், குரு மூன்றாம் பார்வையா பாக்கற ஒரு அமைப்பு இருக்கறதை வெச்சு முத்து மோதிரம் போடச் சொன்னேன்... நீச்ச சந்திரன் இதனாலே பலப் பட்டு செயல்பட ஆரம்பிச்சான். சர்க்கரை சத்து சமப் படாத உடம்புக்கு எப்படி இன்சுலினோ அப்படித்தான் முத்தும்... உன் மகன் வரையில் முத்துதான் சந்திரன். அந்த மோதிரம் பத்திரம். அது தொலைஞ்சி போக வாய்ப்பு அதிகம். ஏன்னா, விதியை எதிர்த்து என் மதி யைக் கொண்டு நான் செய்யற செயல் எது. உன் மகன் பயந்தவனா, குழப்பக்காரானா இருந்து கஷ்டப்படணும்

கறதுதான் விதி. அந்த விதி தன்னை நிலைப்படுத்திக்க எந்தக் கிரகத்தை எப்படிப் பயன்படுத்தும்னு சொல்ல முடியாது. ஆகையால மோதிரத்தைப் பத்திரமா, பாது காப்பா வெச்சுக்க சொல்..."

"ஜீ... ஒருவேளை அது காணாமலே போனாலும் இன் னொரு மோதிரம் செய்து போட்டா பிரச்சனை தீராதா?"

"எவ்வளவு மோதிரம் வேணும்னாலும் செய்து போட லாம். ஆனா 108 பௌர்ணமிக்குப் பூஜை செய்த ஒரு நல்முத்து அவ்வளவு சுலபமா கிடைக்காது. சந்திர னோட சக்தியை முத்துக்குள்ள புகுத்தி, பூஜை செய்து கொடுத்தது அது. அப்படி ஒருமுத்து வேணும்னா நீ சுமாரா 9 வருடம் காத்திருக்கணும். அதுக்குள்ள உன் மகன் வாழ்க்கையே தலைகீழா மாறினாலும் மாறிவி டும்..."

அவர் சொன்னது அவன் முகத்தில் பயமாக எதிரொலித் தது.

காரும் ஹோட்டல் முன் தேங்கி நின்றது.

வேகமாக காரை விட்டு இறங்கி, அவருக்கு கதவைத் திறந்துவிட முயன்றவன் ஒரு வினாடி அப்படியே விக் கித்து நின்று விட்டான். அவன் மட்டுமல்ல... அந்த டாக்சி டிரைவரும்தான்.

கார் முழுக்க ஒரே பூ அலங்காரம். அது கிட்டத்தட்ட ஒரு பல்லக்கு போல இருந்தது. ஏர்போர்ட்டில் சாதாரணமா கப் புறப்பட்ட கார் எங்கும் நிற்கவில்லை. ஹோட்டல் முன்பு தான் நிற்கிறது.

எப்படி இது?

மாணிக்லால் ஸ்ரீதரனைப் பார்த்து ஒரு மெல்லிய சிரிப்பு டன் கண் சிமிட்டினார்.

"இதுக்குப் பேர்தான் மகேந்திர ஜாலம்", என்றார்.

"மகேந்திர ஜாலமா?" அவன் சூட்கேஸை எடுத்தபடியே கேட்டான்.

"ஆமாம்... மாயவித்தைகள் இந்த உலகத்துல எவ்வ ளவோ இருக்கு. வடக்க ஷிமோகான்னு ஒரு ஊர்ல இந்த மாதிரி வித்தைங்க கத்துத் தர்றதுதான் வேலையே... அங்க ஒரு சின்ன பையன் இந்த மாதிரி வித்தையைச் சாதாரணமா செய்வான்.

"தென் ஆப்பிரிக்காவில 'உடும்பே'ன்னு ஒரு மாயாவி அங்க இருக்கற ஒரு மலையையே மறைச்சு வெற்றிட மாக்கி காட்டியிருக்கார். ஒரு விதத்துல இதை மேஜிக் னும் சொல்லலாம். நானும் இதைப் பழக ஆரம்பிச்சிருக் கேன்", என்றார்.

அப்படியே நடந்து ரிசப்ஷனில் பெயரையும் முகவரியை யும் கொடுத்துவிட்டு லெட்ஜரில் கையெழுத்துப் போட்ட போது, கையெழுத்து போட வேண்டிய இடத்தில் கை விரலை வைத்து மறைத்தவர், ஒரு சிரிப்பு சிரித்துவிட்டு விரலைத் திரும்ப எடுத்தார். எடுத்த இடத்தில் அவர் கையெழுத்து!

ரிசப்ஷனிஸ்ட்டும் வாயைப் பிளந்து விட்டாள். பின் அறையை அடைந்து கதவைத் தாழிட்டுக் கொண்டு

வந்து சோபாவில் அமர்ந்தார். எதிரில் பிரமிப்பு விலகியி ராத நிலையில் ஸ்ரீதரன்.

"என்ன ஸ்ரீதரா... ஓடிட்டு இருக்கற கார் எப்படி பூப்பல் லக்கா மாறிச்சுங்ற கேள்வில இருந்து நீ இன்னும் மீள லையா?"

"ஆமாம் ஜீ... எப்படி ஜீ... அது கண்கட்டா, இல்லை ஏதா வது குறளி வித்தையா?"

"உனக்கு குறளி வித்தைன்னா என்னன்னு தெரியுமா?"

"அது... அப்படி சொல்லக் கேட்டு இருக்கேன்"

"இந்த உலகத்துல ஒரு விஷயம் பத்தித் தெரியாமலே தெரிஞ்ச மாதிரி பேசறவங்க ரொம்ப பேர். ஆமா, குற ளின்னா என்னன்னாவது தெரியுமா?"

"தெரியாது ஜீ."

"ஒரு விஷயத்தை நல்லா தெரிஞ்சுக்கோ. இந்த உலகம் ஒண்ணே ஒண்ணுதான். ஆனா அது இரவு, பகல்னு இரண்டா பிரிஞ்சு கிடக்கு. இந்த உடம்பு கூட ஒண்ணு தான். ஆனா அது முதுகு, வயிறுன்னு இரண்டா இருக்கு. எந்த ஒரு விஷயத்தை வேணும்னாலும் எடுத்துக்கோ. அது ஒண்ணுதான். ஆனா அதுக்குள்ள இரண்டு இருக் கும். மனித இனம்கறது ஒண்ணுதான். ஆனா அதுல ஆண், பெண்ணுன்னு இரண்டு பிரிவு. அதே போல தான் இருள்னு இருந்தா ஒளி... இனிப்புன்னு இருந்தா கசப்பு... உயரம்னு இருந்தா குட்டை.... அப்படியே நல்ல சக்தின்னு ஒண்ணு இருந்தா, கெட்ட சக்தின்னும் ஒண்ணு..."

மாணிக்லால் எதற்காக இவ்வளவு பீடிகை போடுகிறார் என்று முதலில் ஸ்ரீதரனுக்குப் புரியவில்லை. பிறகுதான் மெல்ல புரிந்தது. குறளி என்பது ஒருவித அசுர சக்தி. ஆனால், எந்த தேவசக்திக்கு எதிரானது என்பதுதான் ஸ்ரீதரனுக்குத் தெரியவில்லை. அந்த எண்ணம் ஸ்ரீதரன் மனதில் ஓடவும், அதையும் அறிந்தவர் போல சிரித்த மாணிக்லால், "குறளிங்கறது ஒருவித துஷ்ட சக்தி. இன்பம் தருவது இஷ்ட சக்தி, துன்பம் தருவது துஷ்ட சக்தி. எப்பவும் துஷ்ட சக்திகளைத் தள்ளியே வைக்கறதுதான் சமூகத்துல பழக்கம்... அதனால அது ஒதுங்கி மறைவா இருக்கு. நான் காரை அலங்கரித்தது அந்த மாதிரி சக்தியை வெச்சு அல்ல. நான் செய்தது கண்கட்டு. மேல் இந்த கண்ணாடி ஜன்னல் வழியா கீழே நிக்கற காரை இப்பப் பார்... அது இப்ப உனக்கு பழைய காரா தெரியும்..." என்று கூற, ஸ்ரீதரனும் அறை ஜன்னல் வழியாக வெளியே பார்க்க, கார் சாதாரணமாக காட்சி அளித்தது.

அதன் காரணமாக மீண்டும் மனதில் ஒருவித விக்கிப்பு.

"ஜீ... எப்படி ஜீ... கண்கட்டுல இப்படி எல்லாம் கூடவா பண்ண முடியும்?" என்று கேட்டான்.

"ஸ்ரீதரா! நான் சும்மா விளையாடினேன். உடனே நீ கேள்விகளா கேட்டு என்னை உரசாதே. நான் இங்க வந்திருக்கிறது, உன்கூட இப்படிப் பேசவோ, விளையாடவோ இல்லை. வேற ஒரு விஷயத்துக்காக..."

"அது என்ன விஷயம் ஜீ"

"உனக்கு கல்யாணி மலை இந்திராட்சி அம்மன் பற்றித் தெரியுமா?"

மாணிக்லால் பேச்சு அப்படியே திசை மாறியது.

"கல்யாணி மலை இந்திராட்சியா?"

"ஆமாம். ஏன் கேள்விப்பட்டதில்லையா?"

"கேள்விப்பட்ட மாதிரியும் இருக்கு... படாத மாதிரியும் இருக்கு.... சரி ஜீ... இப்ப அந்த அம்மனுக்கு என்ன?"

"அம்மனுக்கு ஒண்ணுமில்லை... அவ வைரத்துக்குத் தான் ஆபத்து வந்திருக்கு..."

"என்ன சொல்றீங்க...? வைரத்துக்கு ஆபத்தா?"

"ஆமா... இந்திராட்சி அம்மன் கிரீடத்துல ஒரு வைரக் கல் இருக்கு. அந்தக் கல் சாதாரண வைரம் கிடையாது. நவரத்ன வியாபாரம் செய்யற என்கிட்ட வந்து ஒரு வெளி நாட்டுக்காரன் அந்த வைரம் பற்றிக் கேட்டான். அதுக்கு விலை மதிப்பே கிடையாதாம். அது கைல இருந்தா உலகத்தையே திரும்பிப் பார்க்க வைக்கற ஒரு கவர்ச்சி அம்சம், வெச்சிருக்கறவருக்கு உண்டாகும்னு அவன் பேசியதைக் கேட்டு நான் அதிர்ச்சியடைஞ்சேன்.

"அப்படியா?"

"ஆமாம்... வைரம்ங்கறது சுக்ரனோட அம்சம், சுக்ரன் தயவு இருந்தாதான் கவர்ச்சி, அழகு, யோகம், போகம் எல்லாம். குறிப்பா கலைத்துறையில சாதிக்க அது ரொம்பவே வேணும். ஆகையால் அவன் பேசினதுல தவறு இருக்கறதா எனக்குத் தெரியலை. ஆனா அவ னுக்கு எப்படி இதெல்லாம் தெரிய வந்ததுங்கறதுதான் என் கேள்வி..."

"என்னென்னமோ சொல்றீங்களே ஜீ... எனக்கு இதெல்லாமே புதுசு. எனக்கு கல்யாணி மலையே எங்க இருக்குன்னு தெரியாதே...

ஸ்ரீதரன் முனங்க, மாணிக்லால், "எனக்குத் தெரியும்... இன்னும் கொஞ்ச நேரத்தில் நாம் கிளம்பறோம்." என்றார்.

"இன்னும் கொஞ்ச நேரத்துலையா?"

"ஆமாம்... நாளைக்கு காலைல மலைல சாமி முன்ன நாம இருந்தே தீரணும். நான் அந்த வைரக்கல்லைப் பார்க்கணும்."

"பார்த்து...?"

"ஸ்ரீதரா... இனி எதுவும் கேட்காதே. என்கூட புறப்படத் தயாராகு..." என்ற மாணிக்லால் உடை மாற்றுவதற்காக சூட்கேஸைத் திறந்த போது உள்ளே இரு துப்பாக்கிகள் இருந்து, அவை ஸ்ரீதரன் கண்ணிலும் பட்டன.

ஸ்ரீதரனுக்கு லேசாக உதறல் எடுத்தது!

# 2

உலகில் எவ்வளவோ வைரக் கற்கள் உள்ளன. அவை காலத்தால் முந்திய வையா, பிந்தியவையா என்பதை அதன் எடையை வைத்தோ, ஒளியை வைத்தோவெல்லாம் கூறிவிட முடியாது. அதன் சக்தியைச் சோதித்து அறிய வேண்டும்.

வைரம் வாங்க முதலில் ஜாதகம் ஒத்துழைக்க வேண் டும். அடுத்து நேரம் ஒத்துழைக்க வேண்டும். வைரங் களில் தோஷமுள்ள, கறுப்பு புள்ளிகளும், பல காற்றுக் குமிழிகளும், உள் விரிசல்களும், நீண்ட கோடுகளும், ரேகைகளும் உள்ள வைரங்களும் உண்டு. அவைக ளைச் சரியாகக் கண்டறியத் தெரிய வேண்டும்.

சுத்த வைரம் அவ்வளவு சுலபத்தில் வசப்பட்டு விடாது. அப்படியே வசப்படாலும் அது செயல் படுவதை அறிய, கூர்மையான கவனம் வேண்டும். சிலர் வைரம் வாங்கி வந்தது முதலே உடல்நலம் பாதிக்கப் படுவார்கள். சிலருக்கோ தொடர்ச்சியாக தீய செய்திகளாக வரும். இதெல்லாம் வைரத்தின் விளைவால் வந்ததா அல்லது யதார்த்தமாக நடந்ததா என்பதைப் பிரித்துப் பார்க் கத் தெரிய வேண்டும். ஆப்பிரிக்காவில் ஒருவர் ஒரு வைரத்தைத் தன் வீட்டு பீரோவில் பாதுகாப்பாக வைத் திருந்தார். தினம் ஒருமுறை அதை எடுத்துப் பார்ப் பதை வழக்கமாகவும் வைத்திருந்தார். சிறிது நாளில் அவரது பார்வை முற்றாகப் போய்விட்டது. வைரத்தி னால்தான் அப்படி ஆனதாக பின்பு அவருக்குத் தெரிய வந்தது. அதேசமயம் கண்பார்வை இழந்த அவருக்கு

வைரத்தைப் பார்க்க முடியாத நிலையில் வேறு மாற்றங்கள் அவர் வாழ்வில் ஏற்பட ஆரம்பித்தன. ஆபரேஷன் செய்து கண் பார்வை பெற்றுத் திரும்பிய அவர், வைரத்தைச் சோதனை செய்ய விரும்பி, அதைத் தன் உறவினர் ஒருவருக்குக் கொடுத்து அதைத் தினமும் பார்க்கும்படி கூறினார். சிறிது காலத்தில் அவரது உறவினருக்கும் கண் பார்வை போனதாம்!

கல்யாணி மலை!

ஊட்டி, கொடைக்கானல் போல உயரமான மலையாக இல்லாமல் பழனி, திருத்தணி போல நினைத்தால் நடந்தே போய்விட முடிந்த ஒரு உயரத்தில் இருந்தது கல்யாணி மலை. தரை மார்க்கத்தில் தார்ச்சாலையில் பயணிக்கும் போதே மலை மேல் உள்ள கோபுரமும், மலைப்படிகளும் பார்க்கும்படியாக, பளிச்சென்று தெரிந்தன. செவ்வாய், வெள்ளியென்றால் நிறைய கூட்டம் வரும். மற்ற நாட்களில் கோவில் பட்டர்தான் இருப்பார். அவரோடு சில குரங்குகளும் மலையில் இருக்கும்.

அதிலும் வெள்ளிக்கிழமையில் எங்கிருந்துதான் அப்படி ஒரு கூட்டம் வருமோ தெரியாது... கூட்டம் கட்டி ஏறும். உச்சி வேளையில் இந்திராட்சி அம்மனுக்கு அபிஷேகம் நடைபெறும். அவ்வேளையில் அவளைப் பார்க்க கண் கோடி வேண்டும். கிழக்கு நோக்கி நின்று அருள்பாலிப்பவள் அவள். காலைச் சூரியனின் கதிர்கள் தடையில்லாமல் முன்வாசல் வழியாகவே அவள் மேல் விழும்.

அப்போது அவளது கிரீடத்தில் உள்ள வைரத்தின் மீது சூரிய ஒளிக் கதிர்கள் பட்டு, அப்படியே ஒரு லாரியின்

ஹெட்லைட் வெளிச்சம் போல அந்த இடமே வெளிச்சக் கோட்டையாகி விடும்.

அப்படி ஒரு தருணத்தில் அந்த வைர ஒளியைக் கண் குளிரக் கண்டு பரவசப்படுவதற்கென்றே ஒரு கூட்டம் வரும்... ஜாதகத்தில் சுக்ரன் நீச்சமானவர்கள், கலைத் துறையில் வெற்றி பெற நினைக்கும் கலைஞர்கள் என்று பலருக்கும் இந்திராட்சிதான் அனுக்ரஹ தேவதை.

பல ஜோதிடர்கள் அப்படித்தான் சொல்லி அவர்களை இந்திராட்சியிடம் அனுப்பி வைக்கிறார்கள். அதே போல கல்யாணிமலைக்கு வந்து திரும்பியவர்களுக்கும் விமோசனம் ஏற்பட்டு விடுவதுதான் ஒரு ஆச்சரியம். குறிப்பாக அவளது வைரக்கிரீட ஒளியைப் பார்ப்பதற் கென்றே ஒரு கூட்டம் தினம் தினம் வரும். ஐந்தரை மணிக்கு மலை ஏறினால் ஆறு மணிக்கெல்லாம் சன் னதி முன் போய் அமர்ந்து விடலாம். சூரியனும் கிழக்கு வானில் புறப்பட்டிருப்பான்.

ஜிகுஜிகுவென்று மேகமூட்டங்களை விலக்கிக் கொண்டு அவன் இந்திராட்சியின் கருவறைப்படியைத் தீண்டும் போது ஆறரையிலிருந்து ஆறே முக்கால் ஆகி விடும்.

உத்தராயன, தட்சிணாயன காலங்களுக்குத் தகுந்தாற் போல இதில் நிமிடங்கள் மாறுபடும். எப்படி இருப்பினும் வருடத்தில் மூன்று மாதங்கள் நெட்டுக்குத்தாய் ஒளி விழும். அப்போதுதான் அந்த வைர ஒளியின் பிரகாசம் எல்லோராலும் பெரிதும் பார்க்கப்படும்.

இந்த வைரத்தை அபகரித்துச் செல்ல காலம் காலமா கவே முயற்சிகள் நடந்திருக்கின்றன. மொகலாயர்கள் காலத்தில் மலையையே சுற்றி வளைத்து விட்டனர். அப்படியே மேலேறி வந்து சன்னதியைப் பார்த்தபோது, கிரீடம் இல்லாத இந்திராட்சியின் விக்ரகமே இருந்தது. கோவில் பட்டர் இந்திராட்சியின் கிரீடத்துடன் மலை மேல் உள்ள கோயிலின் சுனைக் கிணற்றுக்குள் மூழ்கி இறந்தே போனார். அதன் பிறகு சில காலம் கிரீடம் இல் லாத இந்திராட்சிக்குத்தான் பூஜை நடந்தது.

அந்தச் சந்தர்ப்பத்தில் பெரு நோய் பிடித்த ஒரு சித்தர் இந்திராட்சியை வணங்க வந்து பெருநோயில் இருந்தும் மீண்டார். தன் நோயை நீக்கிய இந்திராட்சியை விட்டுப் பிரியாமல் அப்படியே அங்கேயே தங்கி விட்டவர் கன வில் ஒருநாள் இந்திராட்சி தோன்றி, கோயில் கிணற்றில் கிரீடம் இருப்பதையும் சொல்ல, மறுநாளே கிணற்றுக் குள் இறங்கிப் பார்த்த போது காற்றுக்கூட புக முடியாத இரும்புப் பெட்டிக்குள் வைரக்கிரீடம் இருந்தது. அன்றே அது இந்திராட்சி தலையில் ஏறிக் கொண்டது.

அதன் பிறகும் அந்த வைரக் கிரீடத்தைத் திருட பலப் பல முயற்சிகள். ஆனால் அவைகளை இந்திராட்சியே ஏதோ ஒரு வகையில் தடுத்து விடுகிறாள். கோயிலுக் குக் காவலாக ஒரு குறிப்பிட்ட இனத்தவர்கள் மலைக்கு மேலேயே ஒரு பக்கமாக குடிசை போட்டுக் கொண்டு தங்கி இருக்கின்றனர். ஈட்டி, அம்பு என்று எறிவதில் கில் லாடிகள். பாதுகாப்புக்கு அவர்களுக்கு துப்பாக்கியும் கொடுக்கப்பட்டிருக்கிறது. இன்று அவர்களது காவலில் தான் இந்திராட்சி உள்ளாள். ஆட்சிக்கு யார் வந்தாலும் சரி... இந்தப் பக்கமாக வந்து காலை வேளையில் இந் திராட்சியைப் பார்த்து வணங்கிவிட்டு, அப்படியே அந்த

வைர ஒளியிலும் நனைந்து விட்டுப் போவார்கள். இந் திராட்சியின் அந்த வைரத்தை குபேரன் கொடுத்ததாக ஸ்தல புராண வரலாறு சொல்கிறது. சுக்கிரனுக்கு உரிய தலமாகவும் அந்த கல்யாணி மலை பார்க்கப்படுகிறது. பார்ப்பதற்கு கல்லால் ஆன யானை ஒன்று படுத்திருப் பது போல தோற்றம் தருவதால் ஆதி காலத்தில் கல் யானை மலை என்றுதான் அது வழங்கப்பட்டது. காலப் போக்கில் அதுவே மருவி கல்யாணி மலை என்றாகி விட்டதாகச் சொல்வார்கள்.

அப்படிப்பட்ட கல்யாணி மலை அடிவாரத்தில் உள்ள கல் மண்டபத்தை ஒட்டி நின்றது அந்த வாடகைக் கார். உள்ளிருந்து இறங்கியது மாணிக்லாலும், ஸ்ரீதரனும் தான்....

மாணிக்லால் தன் தொப்பியைத் தூக்கிப் போட்டு விட்டு, தலைமுடியை இழுத்துக் கட்டி பெண்பிள்ளை களின் போனிடைல் சடை போல விட்டிருந்தது அவர் வடிவத்தையே மாற்றிவிட்டிருந்தது. தூய வெண்ணிறத் தில் ஜிப்பா பைஜாமா! ஸ்ரீதரன் சாதாரணமாய் வேஷ்டி கட்டி முழுக்கை சட்டை போட்டிருந்தான். தோளில் ஒரு துணிப்பை தொங்கிக் கொண்டிருந்தது

காலை மணி சரியாக ஆறு!

அண்ணாந்து கல் படிகளின் வழியாக மலையைப் பார்த் தபோது, வெகு அழகாக இருந்தது. வானத்திலும் சற்று மேகமூட்டம். பலர் படுவேகமாக மேலேறிக் கொண்டி ருந்தனர். அன்று செவ்வாய்க்கிழமை வேறு.

"ஜீ... நாமளும் ஏறலாமா?" என்று கேட்டான் ஸ்ரீதரன். மாணிக்லாலிடம் பதிலில்லை. மாறாக மலையை ஒரு பார்வையும் அடிவாரத்தை ஒரு பார்வையுமாகச் சுற்றிச் சுற்றிப் பார்த்தார்.

"ஜீ..."

"என்ன ஸ்ரீதரா?"

"போகலாம். அரை மணி நேரத்துலே மேலே போனாத் தான் சூரிய ஒளி பட்டு அந்த வைரக் கிரீடம் ஜொலிக்கற தைப் பார்க்க முடியும்..."

"இன்னிக்கு அது ஜொலிக்காது ஸ்ரீதரா..."

"ஜீ..."

"ஆமாம்... வானத்தைப் பார். இந்த மேகங்கள் இன்னும் பத்து நாளைக்கு இப்படித்தான் இருக்கும். இது கார்த் திகை மாசம் வேற. பார்த்திப வருஷத்து கார்த்திகை மாசம் கொஞ்சம் ஆபத்தான மாசம்."

"எந்த வகைல ஜீ?"

"பார்த்திபன்னா அர்ஜுனன். அர்ஜுனன்னா அம்பு மழை தான் ஞாபகத்துக்கு வரும். அர்ஜுனனோட பேரால வந்திருக்கற பார்த்திப வருஷத்தின் இந்த கார்த்திகை மாசத்துல அந்த அம்பு மழை போல வான் மழை பெய் யணும். அதனால் இயற்கையே குலுங்கிப் போகும். எங் கபார் வெள்ளக்காடு... முப்பது வருஷத்துக்கு குறையாம நீரே காணாத வறண்ட கிணறு, குளமெல்லாம் கூட இந்த மாசத்துல நிரம்பும். இந்த மாதம் சூரிய சந்திரர்களுக்கு

இந்த மண்ணுல பெருசா வேலை இல்லை..." என்றப டியே முதல் படியைத் தொட்டு வணங்கிவிட்டு ஏற ஆரம் பித்தார் மாணிக்லால்.

"ஜீ... ஒரு வருஷத்தின் பேருக்குப் பின்னால இவ்வளவு தகவல்கள் இருக்கறதை இப்பத்தான் கேள்விப்பட றேன்..." என்று அவரைப் பின்தொடரத் தொடங்கினான் ஸ்ரீதரன்.

"இன்னும் இருக்கு... சித்திரை, வைகாசியில கடுமை யான வெப்பம்... அப்புறம் ஆனி, ஆடியில் காற்று வீச்சு... அடுத்து புரட்டாசி, ஐப்பசியிலே அடை மழை ஆரம்பம். இந்த போக்குல பல புதிய உயிரினங்கள் பூச்சியா உரு வாகி தாவரங்களை அழிக்கப் பார்க்கும். அதைத் தடுக்க நம் முன்னோர்கள் கண்டுபிடிச்ச ஒரு வழிமுறைதான் தீபாவளி அன்னிக்கு பட்டாசு வெடிக்கற ஒரு நடை முறை!

பட்டாசுங்கறது கந்தகத்தால் ஆன நெருப்பு. அதன் புகை விஷப்பூச்சிகள் உருவாகாம தொடக்கத்துலையே தடுத்துடும். வானவெளியில சிதர்ற மத்தாப்பும் வெடிச் சப்தமும் காற்று மண்டலம் முழுக்கப் பரவி ஒரு எதிர்ப்பு விசையை நுண்ணுயிர்கள் கிட்ட உருவாக்கும். பொது வில எந்தத் தீபாவளி சிறப்பா கொண்டாடப்படுதோ, அந்த வருஷம் மழை சிறப்பா இருக்கும்.

வானம் முழுக்க பரவும் பட்டாசுப் புகைக்கு மழை மேகங் களை இழுக்கற சக்தி உண்டு. அவ்வளவு ஏன்? காற்றுல சில மாற்றங்களை உருவாக்கி கடல் மேலே காற்றழுத்த தாழ்வு மண்டலத்தையே அது உருவாக்கும்..."

மாணிக்லால் புதுப்புது தகவல்களைச் சொல்லிக் கொண்டே போனார். அவர் மேல் ஸ்ரீதரனுக்குப் பெரிய அளவில் மதிப்பும் மரியாதையும் இருந்ததால் அவனும் அதைக் கேட்டுக் கொண்டே படியில் ஏறினான்.

காவிச் சாயம் பூசப்பட்ட படிகள்! படிகளுக்கு மஞ்சள் பூசி, சந்தன குங்குமப் பொட்டு வைக்கப்பட்டிருந்தது. ஒரு படிகூட தவறாமல் பொட்டுகள் காட்சியளித்தன. ஒரு இடத்தில் ஒரு வயதான பெண்மணி கூடை யில் சந்தனம், குங்குமம் என்று இரண்டையும் வைத்துக் கொண்டு படிகளுக்குப் பொட்டு வைத்தபடியே மேலே றிக் கொண்டிருந்தாள்.

ஸ்ரீதரன் கண்ணில் அந்தக் காட்சி படவும் வியப்பு.

படிகளுக்குப் பொட்டு வைப்பது, மைல்கற்களைக் கட வுளாகக் கருதுவது, மரங்களைச் சுற்றுவது என்று எல் லாமே அவன் வரையில் முட்டாள்தனமான செயல் கள். ஒருவர் செய்வதைப் பார்த்துவிட்டு துளியும் சிந்த னையின்றி மற்றவர்கள் செய்வது... அப்படிதான் அவன் நினைத்துக் கொண்டிருந்தான். முகம் பார்த்தே உள் ளுக்குள் நினைப்பதை உணரத் தெரிந்த மாணிக்லால், அதற்கும் பதில் சொல்லத் தொடங்கினார்.

"ஸ்ரீதரா.. இங்க இந்த அம்மா படிக்குப் பொட்டு வைக்க றது உனக்கு அனர்த்தமா தெரியுது. ஆனா இது எவ்வ ளவு பெரிய பரிகாரம்கறது உனக்குத் தெரியாது. எப்பவும் எங்கேயும் படிதான் ஒருவருக்கு எல்லாத்தையும் தரக் கூடியது. படி இல்லேன்னா சௌகர்யமா மேல ஏற முடி யாது. படிதான் வழுக்கி விழுந்துடாம எல்லாரையும் மேல கூட்டிக்கிட்டுப் போற ஒண்ணு... படிதான் மளிகைக்

கடைல அளந்து போடவும் பயன்படுது. படியலைன்னா... அதாவது பணிவு இல்லைன்னா ஒருத்தரை யாருக்குமே பிடிக்காது. அதே போல படிக்கலைன்னா வாழ்க்கைல மேலேற முடியாது. படிங்கற சொல் ஒரு மந்திரச் சொல். அதுக்கு ஒவ்வொரு இடத்துல ஒவ்வொரு பொருள். அப்படிப்பட்ட படியைப் பொட்டு வெச்சு வணங்கறது ஒரு உன்னதமான செயல். அதுலையும் மலைப்படிகளை வணங்குவது ரொம்ப ரொம்ப விஷேசம். ஏன் தெரியுமா?

ஒரு வட இந்தியரான மாணிக்லால் தமிழ்ச் சொல்லான படிக்குக் கொடுத்த விளக்கமும் தொடர்ந்து அது குறித்து ஏன் தெரியுமா? என்று கேள்வி கேட்கவும் அப்படியே பிரமித்துப் போனான் ஸ்ரீதரன்.

"இந்த மலைக்கு பலரும் வருவாங்க. அப்படி வர்றவங்கள்ல ஞானிகளும் இருப்பாங்க, விஞ்ஞானிகளும் இருப்பாங்க. நல்ல விதி உள்ளவர்களும் சரி, கஷ்டப்படறவர்களும் சரி... பலரும் இருப்பாங்க. ஆனா ஒண்ணு! எல்லோராலையும் மலை ஏறி சாமி கும்புட்டுட முடியாது. மலை ஏற கால்னு ஒண்ணு வேணும். மனசும் வேணும். அதுல பக்தியும் இருக்கணும். எல்லாத்துக்கும் மேல உடம்புல தெம்பு ரொம்ப முக்கியம். அடுத்தது முயற்சி, ஆக அஞ்சு விஷயம் ஒண்ணு சேர்ந்தாதான் ஒருத்தன் மலை ஏற முடியும். இதுல ஒண்ணு குறைஞ்சாலும் அவனால மேல ஏற முடியாது. இப்படி மேல ஏற விதி உள்ளவங்க கால்கள் பட்ற இந்தப் படிகள்ல அவங்க சுமக்கப் போற அருள் அலைகள் நிறையவே இருந்து அதுவும் இதுல படிஞ்சிருக்கு.

உலகத்துல காந்தத்துக்குப்பிறகு சப்தத்தை வாங்கி வெச்சுக்கற சக்தி கருங்கல்லுக்கு மட்டும்தான் இருக்கு.

அதனாலதான் கோயில் கருவறைகள் கருங்கற் சுவர்க ளால் படி அமைச்சாங்க. அங்க சொல்லப்பட்ற மந்திரங் கள் அந்த சுவத்துல பட்டு எதிரொலிச்சுக்கிட்டே இருக் கும்.

கரையாத தன்மை, உறுதி, எவ்வளவு மிதிச்சாலும் தாங் கிக்கற பொறுமை, வெட்டும் போது வளஞ்சு கொடுத்து சிற்பமாகற தன்மை, காலத்தை எதிர்த்து வாழற நீண்ட ஆயுள் தன்மையுடன் ரொம்ப மேன்மையானது கருங் கல்.

அப்படிப்பட்ட படிக்கு வணக்கம் சொல்றது எவ்வளவு உயரிய செயல்.

மலைப் படிகளுக்கு ஒரு அபிஷேகமே செய்தது போல் இருந்தது மாணிக்லாலின் விளக்கம். ஸ்ரீதரனுக்கும் மலைப் படிகள் என்பவை எவ்வளவு மகத்துவமானவை என்பது விளங்கியது. பிரமித்துப் போனான். மாணிக் லால் சொன்னது மனதில் நிரம்பி விட்டதால் படிகளை மிதிப்பது கூட பாவமான ஒரு செயலாகத் தோன்றியது. அது அவன் முகத்தில் அப்பட்டமாக எதிரொலித்தது.

"இப்பத்தான் ஜீ புரியுது... இப்படிப்பட்ட படிகளை வணங் கறது ஒரு உயர்ந்த செயல்தான். அதுல சந்தேக மில்லை..." என்றான்.

"இது ஒரு பரிகாரச் செயல். எந்த ஒரு செயலுக்கும் ஒரு பதில் விளைவு உண்டு. பதில் விளைவு இல்லாத ஒரு செயல், இந்த உலகத்துல இருக்கவே முடியாது. வெறும் ஒருத்தர் படுத்து தூங்கறதாகவே வெச்சுக்கோ... அதுக்கு கூட ஒரு பதில் விளைவு உண்டு. அந்த தூங்கற

நேரத்துல அவர் செய்ய வேண்டிய செயல் தடைபட்டுப் போய் ஒரு தேக்க நிலை உருவாகியிருக்கும். அதேசம யம் தூங்கினதால உடம்புல ஓய்வு ஏற்பட்டு களைப்பு நீங் கியிருக்கும். இப்படி ஒரு செயலுக்கு இரு விளைவுன்னு ஒண்ணு எல்லா செயலுக்கும் உண்டு.

படிக்கு வணக்கம் செலுத்தற செயலோட பதில் விளைவு, மதிக்க வேண்டிய விஷயங்களை மதிக்கத் தவறியதால் ஏற்பட்ட பாவங்களுக்குப் பரிகாரமாக மாறி அவர்களுக்குள்ள இருக்கற தடையை நீக்கிக் கொடுக் கும்..."

- என்று அது ஒரு பரிகாரம் என்பதற்கான விளக்கத்தை யும் மாணிக்லால் சொல்லி முடிக்க, மலை உச்சியும் வந் துவிட்டது.

ஆனால், மாணிக்லால் முன்பே கூறியது போல வானில் சூரியனைத்தான் பார்க்க முடியவில்லை. அடப்பமாக மேகப்பந்தல், மழை வருவதற்கான அறிகுறிகள் வேறு....

"ஜீ... ஒரு அதிசயமான இந்தக் கோயிலுக்கு உங்க ளால நான் வந்திருக்கேன். ஆனா நான் துரதிஷ்டசாலி. அந்த வைரத்தோட ஒளியைப் பார்க்க முடியாது போல இருக்கே..."

ஸ்ரீதரன் வருத்தத்தோடு சொன்னபோது, மாணிக்லால் பார்வை கோயில் கோபுரம் மேல் ஒரு பருந்து வந்து கன் னிமூலையாகப் பார்த்து அமர்வதைப் பார்த்தது. அதன் கால்களில் எலியோ தவளையோ சிக்கியிருந்தது. அது கோபுரச் சருக்கத்தில் அமர்ந்த நிலையில் அதைக் கொத்திக் கிழித்து சாப்பிடத் தொடங்கிவிட்டது.

மாணிக்லாலின் முகத்தில் உடனேயே ஏராளமான மாற்றங்கள்.

"ஜீ..."

"கொஞ்சம் பொறு ஸ்ரீதரா..." என்றவர் சட்டென்று கைக் கெடிகாரத்தைப் பார்த்து, நேரத்தை மனதில் குறித்துக் கொண்டவராக கையை ஒரு உதறு உதறினார்.

"என்ன ஜீ..."

"என்னன்னு சொல்வேன். ஒரு தப்பான சகுனத்தை பார்த்துட்டேன்."

"தப்பான சகுனமா?"

"ஆமா, அந்தக் கோபுரத்துல, அந்த தென்மேற்கு மூலையைப் பார், ஒரு கழுகு."

"ஆமா, அது எதையோ சாப்பிட்டுக்கிட்டு இருக்கு."

"அதுதான் என் வரைல சகுனம்..."

"அந்தச் சகுனம் என்ன ஜீ சொல்லுது?"

"இந்தக் கோயில்ல ஒரு நடக்கக் கூடாத சம்பவம் நடக்கப் போகுது ஸ்ரீதரா. சொல்லப்போனா நீயும் நானும் அதைப் பார்க்கத்தான் வந்திருக்கோம்."

"என்ன ஜீ சொல்றீங்க?"

"எவ்வளவோ இடம் இந்த மலை மேல இருக்க, அந்தக் கழுகு ஏன் சரியா கன்னிமூலைல போய் உக்காரணும்?

அங்க ஒரு உயிரை அது கொன்னு, தனக்கு உணவாக வும் ஆக்கிக்குது. இதன்படி பார்த்தா இங்க ஒரு உயிர் போய், தீட்டு இந்த இடத்தை சூழப் போகுதுன்னு அர்த் தம்."

"கோபுரத்துல ஏதோ ஒரு இடத்துல பறவைகள் அடை யறது சகஜம்தானே?"

"ஏதோ ஒரு இடத்துல, எந்த இடம்கறதுலதான் செய்தி இருக்கு."

"என்ன ஜீ... இந்த நாட்டுல எல்லா இடத்துலையும் ஏதா வது ஒரு நல்லதும், ஏதாவது ஒரு கெட்டதும் நடந்து கிட் டேதான் இருக்கு. அப்ப அங்க எல்லாமும் இப்படி செய்தி இருக்குமா என்ன?"

"நிச்சயமா... ஒவ்வொரு சின்ன அசைவுக்கும் ஒரு பதில் அசைவும் ஒரு செய்தியும் உண்டு. நமக்கு அதை படிக் கத் தெரியணும். என் வாழ்க்கைல நான் இதுக்காக ஒதுக்கியிருக்கற காலம் மிக அதிகம். எங்கையாவது நாய் அழுதா, துக்கச் செய்தி வரப்போகுதுன்னு சொல் வாங்க. இந்த மாதிரி ஒருசில விஷயங்கள்தான் சமுதா யத்துக்குத் தெரியும். ஆனா எனக்கு பல நூறு விஷயங் கள் தெரியும். ஒரு நவரத்னக் கல் வியாபாரியும், ஆராய்ச் சியாளனுமான நான், இந்த மலைல உள்ள வைரத்தைப் பார்த்து அதப்பத்தி தெரிஞ்சுக்கிட்டுப் போக வந்தேன். இன்னும் சொல்லப்போனா, ஒரு கனவுதான் காரணம். மேல் நாட்டுக்காரர் சொன்ன செய்தி ஒரு பக்கம் - மறு பக்கம் இந்திராட்சி 'எப்ப நீ என்னைத் தரிசனம் செய்ய வரப்போறே?'ன்னு கேட்ட கேள்வி ஒருபுறம்... எல்லாம்

தான் அவசர, அவசரமாக என்னை இங்க தள்ளி விட்டது.

இந்த மலைல நான் உன்னைப்போல ஒரு சாதாரண பக்தன். என்னோட எந்தச் சக்தியையும் நான் பயன்படுத்த மாட்டேன். பயன்படுத்தவும் கூடாது. மொத்தத்துல இந்த மாதிரி ஒரு இடத்துக்கு வரும் போதுதான் என்னைப் போன்ற வித்தைக்காரர்கள் வெறும் சாதாரண மனிதர்களாகிறோம். இப்ப நானும் ஆயிட்டேன்."

"எழுதிக்கோ... இன்னும் சில நிமிடம்தான். இந்தக் கோயில்ல சில விபரீதங்கள் நடக்கப் போகுது."

மாணிக்லால் சொல்லி வாய் மூடுமுன், அங்கே ஒருவர் நெஞ்சைக் கையில் பிடித்துக் கொண்டு கீழே விழுந்தார்.

ஸ்ரீதரன் நிமிர்ந்தான்.

# 3

ஒருவர் பாலுணர்வில் துளியும் நாட்டம் இல்லாமல் இருந்து வந்தார். அவரது வேலைப் பளுவும் அதற்கு ஒரு காரணம். அவரது மனைவிக்கு இதனால் பெரிதும் மன உளைச்சல். வாழ்க்கையில் பிடிப்பே இல்லாமல் இருக்கத் தொடங்கி விட்டார். இந்த நிலையில் அவர்களது நண்பர் ஒருவர் குடும்பத்துடன் சுற்றுலா புறப்பட்டார். அப்படிச் செல்லும்போது, அவரிடம் உள்ள விலை உயர்ந்த நகைகளை இவர்களிடம் கொடுத்து பத்திரப்படுத்திவிட்டு சென்றார். அவை ஒன்றும் லட்சக்கணக்கான ரூபாய் மதிப்புள்ள நகைகளும் அல்ல. அதில் ஒரு வைர மோதிரம் இருந்தது.

அந்த நகைகள் வீட்டுக்கு வந்த நாளில் இருந்து அந்த நபரும் வெகுவாக மாறிவிட்டார். மனைவியுடன் மகிழ்வாகக் கூடி வாழ்ந்தார். சுற்றுலா சென்றவர்கள் திரும்பி வந்து நகைகளைக் கேட்கவும் கொடுத்து விட்டனர். மீண்டும் அவருக்கு இல்வாழ்வில் நாட்டம் குறைந்து போனது. இரண்டு மூன்று முறை இப்படி ஆகவும், அவரது மனைவி நகைகள் வரும்போது எல்லாம் இல்வாழ்வு இன்பமாவதைக் கண்டு கொண்டு அதற்கான காரணம் வைர மோதிரம் என்பதை மிகவும் ஆராய்ச்சி செய்து கண்டறிந்தார். அதன்பின் அவளே ஒரு நல்ல வைர மோதிரத்தை வாங்கி வந்து கணவனுக்கு அணிவிக்க மீண்டும் இல்வாழ்க்கை இன்பமாகியது.

வைரம் குறித்து ஆய்வு செய்வோர்கள் கண்டறிந்த ஒரு சம்பவம் இது! வைரம் சுக்ரனின் அம்சம். அது மன

அமைப்பில் காமத்திற்குத் தொடர்பான சுரப்பிகளைத் தூண்டுவதில் பெரிய பங்காற்றுவதே காரணம்.

நெஞ்சைப் பிடித்துக் கொண்டு விழுந்தவரைச் சுற்றி ஒரு கூட்டம் கூடிவிட்டது. அவருக்கு வியர்த்துக் கொட்டவும் செய்தது. கூட்டத்தில் ஒரு டாக்டரும் இருந்தார். அவருக்குத் தெரிந்துவிட்டது. அந்த நபருக்கு ஹார்ட் அட்டாக் என்று....

கூட்டத்தை வேகமாக விலக்கி விட்டவர், நாடியைப் பிடித்துப் பார்த்தார். முகத்தில் அலாதி பரபரப்பு. சட்டென்று ஒரு சோர்வு....

"என்ன சார்... எப்படி இருக்கு?"

"நோ... ஹார்ட் பீட் நின்னு போச்சு. இட் ஈஸ் அ மாசிவ் அட்டாக்..."

'நீங்க?"

"நான் ஒரு டாக்டர். எஸ்பெஷலி நான் ஒரு கார்டியாலஜிஸ்ட். பாவம் இவர் இப்படி மலை மேல வந்து சாகணும்னு இருக்கு. இட் ஈஸ் அ வெரி பேட் டைம்..."

டாக்டர் அலுத்துக் கொண்டார். கூட்டம் அப்படியே பின் வாங்கி சில அடிகள் தள்ளி நின்றது.

"இவர் மட்டும் தனியா வந்திருக்கார் போல இருக்கு. ஆள் யார்ன்னும் தெரியலியே..." சிலர் கேள்விகளோடு முணுமுணுக்க, கோயிலுக்குள் சன்னதி வரை தகவல் போய் குருக்களும் மற்றவர்களும் ஓடி வந்தனர். குருக்கள் சட்டென்று துண்டால் வாயைப் பொத்திக் கொண்

டார். பல அடிகள் தள்ளி நின்று கொண்டே, கோயில் ஊழியர் ஒருவரைப் பார்த்து, "பாடியை செத்த சீக்கிரமா கீழே எடுத்துண்டு போங்கோ. இது நேமமான கோயில், இங்க இப்படி உடம்பு இருக்கறது கோயில் ஆச்சாரத் தைப் பாதிக்கும். இப்பவே நடையைச் சாத்தி புண்யாவ சனம் பண்ணி சுத்தி கரிக்கணும். அப்புறம்தான் நடை திறக்க முடியும்..." என்றார்.

"இவர் யாரு? எந்த ஊர்னே தெரியலியே சாமி..."

"முதல்ல கீழே கொண்டு போங்கோ. போலீஸுக்கும் தகவல் தாங்கோ. அவா வந்து பார்த்துப்பா..."

"அதான் சரி. ஆனா என் ஒருத்தனால சுமக்க முடியாது. ஒரு மூங்கில்ல தூளி கட்டி, அதுல பாடியைத் தூக்கிப் போட்டு அப்படியே இரண்டு பேர் தோள்ல சுமந்துகிட்டு கீழே போக வேண்டியதுதான்..." என்று கோயில் காவ லில் இருப்பவர்கள் சொல்லிக் கொண்டே அதற்கான ஏற்பாடுகளிலும் மளமளவென்று இறங்கினார்கள்.

பார்த்துக் கொண்டே இருந்தார் மாணிக்லால்.

ஸ்ரீதரன் ஒருமாதிரி உறைந்தே போயிருந்தான்.

அவர்கள் இருவரும் நின்று கொண்டிருந்த இடத்துக்குப் பக்கத்தில் ஒரு கல் தொட்டி! அதில் நேர்த்தியாக கொட் டப் பட்ட உப்பு நிரம்பியிருந்தது. அதற்குப் பக்கத்தில் இன்னொரு தொட்டி. அதில் குழந்தை வரம் வேண்டி அதற்காக வாங்கிப் போடப்பட்ட குழந்தை மண் பொம் மைகள்.

அடிவாரத்திலேயே இந்த பொம்மைகள் விலைக்குக் கிடைக்கின்றன. ஒரு பொம்மை விலை ஆளைப் பொறுத்து மாறும். பத்து, பதினைந்து, முப்பது, ஐம்பது என்று வாங்குபவர் நடந்து வருபவரா, காரில் வருகிற வரா என்பதைப் பொறுத்தது அது. இந்த பொம்மைக ளிடம் ஒரு சிறப்பம்சம், அதன் தொப்புள் பாகத்தில் ஒரு ஓட்டை இருக்கும். அதற்குள் வேண்டிக் கொள்பவர்கள் தங்கள் பெயர், நட்சத்திரத்தை எழுதி, தங்களுக்கு ஆண் அல்லது பெண் குழந்தையில் எது வேண்டும் என்பதை எழுதிப் போட்டு பின் தொப்புள் ஓட்டையைச் சந்தனத் தால் மூடிவிட வேண்டும். அப்படி சந்தனத்தால் மூடப் பட்ட பொம்மைகள் அந்தத் தொட்டியில் எராளமாகக் கிடந்தன.

ஸ்ரீதரனும் அவைகளைப் பார்த்து ஒரு பொம்மையைக் கூட தொட்டுத் தூக்கினான். ஒரு சாண் உயரம்தான். காவிச் சாயம் பூசப்பட்டிருந்தது. அதைப் பார்த்துக் கொண்டிருக்கும் போதே கோயிலின் சன்னதிக் கதவு களை இழுத்து மூட ஆரம்பித்தார்கள்.

அதே போல ஒரு மூங்கில் வந்திட, அதில் ஒரு துப்பட் டியைத் தொட்டில் போல கட்டி, அந்த இறந்து விட்ட வர் உடலைத் தூக்கில் போட்டு விட்டு அப்படியே மேல் இருந்து கீழ் இறங்க ஆரம்பித்தனர்.

தரிசனத்துக்காக வந்திருந்தவர்கள் முகங்களில் எல் லாம் ஏமாற்றம்.

"தீட்டு கழிச்சு புண்யாவசனம் பண்ணி முடிக்க எப்படியும் சில மணிகள் ஆகும்.... என்று குருக்கள் சொன்னதாக ஒருவர் சொல்ல, அதைக் கேட்டுவிட்டு பலர் கீழ் இறங்க

ஆரம்பித்திருந்தனர். ஸ்ரீதரன், மாணிக்லாலைப் பார்த்தான்.

"என்ன ஸ்ரீதரா... நாம என்ன செய்யப் போறோம்ன்னு பாக்கறியா?"

"ஆமாம். முதல் முதலா வந்த சமயத்துல இப்படி எல்லாம் நடக்கறத நினைச்சா, ரொம்ப வருத்தமா இருக்கு ஜீ"

"எதையும் சம்பவமா மட்டுமே பார்... இப்படி எல்லாம் நடக்க ஒரு சரியான காரணம் இருக்கு. ஒரு அபூர்வ வைரம் இருக்கற ஒரு கோயில்ல இப்படி நடக்குதுன்னா அதுக்கு வைரத்தோட சக்தியும் ஒரு காரணம்..."

"புரியலையே ஜீ..."

அந்த வைரம் ஏதோ ஒரு வகைல தன் வேலையைக் காட்டத் தொடங்கி இருக்கு. நான் முன்பு சொன்ன பலன்கள்ல ஒரு பாதி இனிதான் நடக்கப் போகுது..."

"ஜீ... எனக்குப் பயமா இருக்கு..."

"பயப்படாதே... வைரம்கற ஒண்ணை எல்லாரும் புரிஞ்சுக்க, சில திருவிளையாடல்கள் நடக்கப் போறதா என் உள்ளுணர்வு சொல்லுது..."

"நீங்க சொன்னா சரியாத்தான் இருக்கும். எனக்கு அதுல சந்தேகம் இல்லை. ஆனா இவ்வளவு நாள் இல்லாம இப்ப மட்டும் ஏன் இப்படி நடக்கணும்?"

"சில கேள்விகளுக்கு விடை உடனே தெரியாது. ஆனா போகப் போக நிச்சயமா தெரியவரும். பொறுத்திருந்து

பார்ப்போம். எந்த சக்தி என்னை இங்க போகச் சொன் னதோ, அந்த சக்திக்குத் தெரியும்..."

மாணிக்லால் நிமிர்ந்து திரும்ப கோபுரத்தைப் பார்த்தார். அந்தக் கழுகு அங்கிருந்து பறந்து விட்டிருந்தது.

மாணிக்லால் ஒரு சிரிப்பு மட்டும் சிரித்துக் கொண்டார்.

அடிவாரம்!

மூங்கில் தூளியோடு கீழே இறங்கியவர்கள் துப்பட்டியி லிருந்து பிணத்தை விலக்கி ஒரு மரத்தடியில் போட்டு, அந்த துப்பட்டியாலேயே மூடினர். அப்படியே அவர் சட் டைப் பாக்கெட்டில் கையை விட்டு அவர் பற்றி ஏதாவது தடயம் தெரிய வருகிறதா என்றும் தேடினர். அதற்குள் ஒருவர் போலீசுக்கு தகவல் சொல்ல ஓடினார்.

பிணத்தைத் தூக்கி வந்த இருவரும் மலைமேல் காவ லுக்காக குடியிருப்பவர்கள். அவர்களைச் சுற்றி கூட்டம் கூடி விட்டது. அந்தக் கூட்டத்தில் ஒருவன் இருந்தான். கூர்மையாக அவ்வளவையும் பார்த்துக் கொண்டிருந் தான். பின் மெல்ல அங்கிருந்து ஒதுங்கியவன் மலைப்ப டியில் போய் அமர்ந்து, தன் செல்போனை எடுத்து யாரு டனோ பேசத் தொடங்கினான்.

"அண்ணாத்தே... நாம போட்ட பிளான் கரெக்டா வேலை செய்யுது. சாமி கும்புடப் போன டிரைவர் சண்முகத் துக்குக் கொடுத்த மாத்திரை வேலை செய்து, ஆள் மலை மேல சுருண்டு விழுந்து அங்கேயே செத்துட் டான். அதை ஒரு டாக்டரும் ஹார்ட் அட்டாக்னு சொல் விட்டார். இப்ப மலைக்கோயிலை இழுத்து மூடிட்டாங்க. எல்லார் கவனமும் இப்ப இங்க பொணத்து மேலதான்

இருக்கு. போலீஸ் வந்து பொணம் வேன்ல ஏற எப்படி யும் இரண்டு, மூணுமணி நேரம் ஆயிடும். நாம் போட்ட பிளான்படி நடந்துக்கிட்டா சாமி வைரம் கைக்கு வந்து விடும்..." அவன் பேசி முடித்துவிட்டுப் பதிலுக்கு மறுமு னையில் பேசியவர் சொன்னதைக் கேட்டவனாக விறு விறுவென்று மேலே ஏறினான்.

பாதி வழியில் மலைப்பாதைக்குப் பக்கவாட்டு புதர் ஒன் றுக்குள் நுழைந்து வேட்டி, துண்டு, மார்பில் ஒரு பூணூல், நெற்றியிலும் விபூதிப் பட்டை என்று உருமாறியவனாகத் திரும்பித் திரும்பிப் பார்த்தபடி மேலே ஏற ஆரம்பித்தான்.

மோடம் போட்ட மூட்டமான வானம் அவன் வேகத்துக்கு நன்றாகவே கை கொடுத்தது. மேலே சமதளத்தை அடைந்தவன் கோபுரம் நோக்கிச் சென்றான். அதன் மரக்கதவு தாழிடப்பட்டு திட்டிவாசல் கதவு திறந்திருந் தது. அதனுள் நுழையப் போனான். முன்னால் இருந்த குருக்களைப் போன்ற ஒருவர் தடுத்தார்.

"யார் தம்பி நீ? உள்ள போகக்கூடாது..."

"தெரியும்ணா... நான் புண்யாவசனம் பண்றதுக்கு முந்தி கோயிலை அலம்பிவிட சாஸ்திரிகள் அனுப்பி வந்தி ருக்கேன்..."

"ஓ... சாஸ்திரிகள் அனுப்பியிருக்காரா? பரவால்லியே, விஷயம் தெரிஞ்சு வேகமா அனுப்பிட்டாரே..." என்றவர் திட்டிவாசல் கதவைத் திறந்துவிட்டார். அவன் தாண் டியவனாக உள்ளே நுழைந்தான். நேராக கொடிமரம்! கொடி மரத்தைக் கடந்து சன்னதிக்குள் நுழைய உத வும் கதவு. அதையும் தொடர்ந்து ஒரு நீண்ட பிராகா

ரம். அந்த பிராகாரத்தில் இரு பக்கமும் பக்தர்கள் பிரிந்து நிற்க வசதியாக ஒரு குழாய் தடுப்பு. நடுவில் அம்பாளின் வாகனமான சிம்ம வாகனம். அந்த சிம்மத்தின் மேல் ஏராளமாய் குங்குமம் கொட்டிக் கிடந்தது.

குருக்கள் சன்னதிக்குத் துணித்திரையைப் போட்டு மறைத்திருந்தார்.

அவன் நேராக அந்த சிம்மவாகனம் வரை வந்து விட் டான்... குருக்கள் அங்கே எங்கிருக்கிறார் என்றே தெரி யவில்லை. அவன் பார்வை துழாவியது. இடுப்பு மடிப் பில் ஸ்ப்ரே ஒன்று இருந்தது. அதைத் தொட்டுப் பார்த் துக் கொண்டபோது, குருக்கள் குரல் கேட்டது. கையில் சொம்புடன் குருக்கள் மடப்பள்ளியில் இருந்து வந்து கொண்டிருந்தார்.

"யாரது, அங்க?" என்று சற்று காட்டமான குரல் வேறு.

"நான்தான் மாமா... சாஸ்திரிகள் அனுப்பினார். கோயில் மொத்தமா ஜலம் விட்டு அலம்பி விடணுமாமே...? என் றான்.

"சாஸ்திரிகள் அனுப்பினாரா... நான் இன்னும் அவருக்கு தகவலே சொல்லிவிடலையே... ஆமா, நீ யார்? உன்னை நான் பார்த்ததேயில்லையே..."

"நான்... நான் என் பேர் பிச்சுமணி. சாஸ்திரிகள் கிட்ட வேதம் கத்துக்க வந்திருக்கேன்."

"அதுசரி... உன்னை யார் உள்ள விட்டா... நான் யாரை யும் விடக்கூடாதுன்னு சுப்பண்ணாகிட்ட சொல்லிட்டுத் தானே வந்தேன்."

"நானும் அவர்கிட்ட சொல்லிட்டுதான் வந்திருக்கேன்."

"சரி! முதல்ல இடத்தைக் காலி பண்ணு. ஏற்கெனவே தீட்டு. இதுல காவக்காரா அவ்வளவு பேரும் கீழ வேற போயிருக்கா. இப்ப போய் யார்னே தெரியாத நீ உள்ற வந்தா என்னத்துக்கு ஆகறது?"

குருக்கள் புலம்பும் போதே, அவன் இடுப்பு மடிப்பில் இருந்து ஸ்ப்ரேயரை எடுத்துவிட்டான். அப்படியே துண் டால் முகமூடி போல் தன் முகத்தை மூடிக் கொண்ட வனை, அதிர்ந்து போய் பார்த்தார் குருக்கள்.

"சாரி சாமி... உங்ககிட்ட இனி பேச்சு கூடாது. கொஞ்ச நேரம் நல்லா மயங்கித் தூங்குங்க..." என்று ஸ்ப்ரேயரை அவர் முகத்துக்கு நேரே நீட்டி அடித்தான்.

ஸ்ஸ்ஸ்ஸ்.....!

ஒரு பாம்பு சீறுவது போல இருந்தது. அவரும் அடுத்த நொடியே சுருண்டு கீழே விழுந்துவிட்டார். அவன் வேக மானான். வெள்ள நீர் போல அப்படி ஒரு வேகம். ஓடிப் போய் சன்னதி முகப்புத் துணியை விலக்கினான். விலக் கிய நொடியில் கருவறைக்குள் கம்பீரமாய் இந்திராட்சி அம்மனின் நெடிய உருவம். தலையில் அந்த கிரீடமுடன் கழுத்தில் மாலை சகிதம் சன்னதி குத்துவிளக்குகளின் ஒளி வெள்ளத்திற்கு நடுவில் வரமளிக்க விரும்புவது போல உயர்த்திய கரத்துடன்.... ஒரு வினாடி நின்று உற் றுப் பார்த்தவனுக்கே அம்பிகை தோற்றம் என்னவோ செய்தது.

தயக்கமெல்லாம் சில நொடிகள்தான்.

பாய்ந்து தலை கிரீடத்தை எடுத்தவன் நடுநாயகமாக ஒரு பலாக்கொட்டை அளவுக்கு சற்று சிறிய அளவில் இருக்கும் அந்த வைரத்தை கிரீடத்தில் இருந்து நெம்பி எடுத்தான். அது கைக்கு பெயர்ந்து வராமல் கஷ்டப் படுத்தியது. சரி என்று கிரீடத்தை அப்படியே எடுத்துக் கொண்டவன், அதை வேட்டிக்குள் மறைத்த போது வீங் கிக் கொண்டு தெரிய வரவும், கிரீடத்தை சுவரில் மோதி வைரம் மட்டும் பெயர்ந்து விழும்படி முயன்றான். இந்த முறை வைரம் அவனை ஏமாற்றவில்லை. பெயர்ந்து அம்பாளின் காலடியில் போய் விழுந்தது. காலடியில் ஏராளமான அர்ச்சனை குங்குமம் வேறு. வைரம் அந் தக் குங்குமத்தில் புரண்டது. அப்படியே அள்ளி எடுத்துக் கொண்டவன், அந்த கிரீடத்தைத் தூக்கி வீசிவிட்டு ஓட ஆரம்பித்தான்.

மயங்கிக் கிடந்த குருக்களைக் கடந்து ஓடும்போது, அவர் கையை மிதிக்கவும், மயக்கத்திற்கு நடுவிலும் அவர் ஐயோ என்று புரண்டு படுத்தார். வெகு வேக மாக சூரியக் கதிர்கள் நுழையும் கருவறை வாயில் கதவு அருகே வந்தவன், சட்டென்று வேகத்தைக் குறைத் துக் கொண்டு வைரத்தை வெளிச்சத்தில் ஒரு பார்வை பார்த்தான். ஏராளமாய் குங்குமம் ஒட்டிக் கொண்டிருக்க, கிட்டத்தட்ட அது செந்நிறக் கல் போலவே காட்சி தந் தது. அதை அப்படியே இடுப்பு வேட்டி மடிப்பில் இறுக்க மாகக் கட்டி முடிந்து கொண்டான். சடாரென்று முகத்தை மாற்றிக் கொண்டு மிக இயல்பாக வைத்துக் கொண் டான்.

குருக்கள் கையில் இருந்த செம்பு உருண்டு போய் ஒரு மூலையில் கிடந்தது. அதைப் போய் எடுத்துக் கொண் டவன் அதோடு வெளியே நடந்து கோபுர வாசல் கதவ

ருகே சென்று சாத்தப்பட்டிருந்த திட்டிவாசல் கதவைத் திறந்து வெளியே பார்த்தான். யாரும் இல்லை. மெல்ல சொம்போடு காலை வெளியே வைத்தவன் விறுவிறு வென்று நடக்கத் தொடங்கினான். அவன் அங்கிருந்து நகர்ந்த சில நொடிகளிலேயே ஒருவர் வந்து திறந்து கிடந்த திட்டி வாசல் கதவு வழியாக உள்ளே பார்த்தார்.

நேராக திரை விலகி அம்பாள் உருவம் தெரிந்தது. அந்த அம்பாளின் சிறப்புக்குக் காரணமான கிரீடம் இல்லாமல் ஆச்சரியம், அதிர்ச்சி எல்லாம் அவரை ஆட்கொள்ள உள்ளே வேகமாக நுழைந்தவர் குருக்கள் மயங்கிக் கிடக்க கிரீடம் ஒரு மூலையில் நசுங்கிக் கிடப்பதையும் பார்த்தவர் யூகித்து விட்டார்.

அப்படியே திருடன்... திருடன்... திருடன் என்று கத்திக் கொண்டு ஓடிவரத் தொடங்கினார்.

சப்தம் எல்லாப் பக்கமும் எதிரொலித்தது. குறிப்பாக கோபுரத்துக்கு எதிரில் மலை மேல்தளத்தில் பிரசாத ஸ்டாலை ஒட்டியுள்ள ஒரு தங்குமிடத்தில் அமர்ந்தி ருந்த மாணிக்லாலையும், ஸ்ரீதரனையும் கூட அந்தக் குரல் திரும்பிப் பார்க்க வைத்தது.

மாணிக்லாலிடம் ஒரு மர்மப் புன்னகை. அவரோ மேல்த ளத்தில் இருக்கும் கோயில் அலுவலக கட்டடத்துக்குள் நுழைந்து போன் செய்யத் தொடங்கியிருந்தார்.

"ஜீ... என்ன இது?"

"நடக்க வேண்டியது நடந்துடுச்சு..."

"அப்படின்னா?"

"எந்த வைரத்தைப் பார்க்கணும், அதோட சக்தியை எடை போடணும்னு நான் தூண்டப்பட்டு வந்தேனோ, அது நான் பார்க்க தன் சக்தியை நிரூபிக்கத் தொடங்கி டுச்சு..."

"புரியலை ஜீ..."

"இப்ப உனக்கு எதுவும் புரியாது ஸ்ரீதரா... இந்த மரணம், இதைத் தொடந்து ஏற்பட்ட கதவடைப்பு, எல்லாமே திட்டமிட்ட சதி வேலை. என்னடா இவ்வளவு நாளா எப் படி இப்படி ஒரு வைரத்தை விட்டு வெச்சுருக்காங்கன்னு ஒரு ஆச்சரியம் எனக்கு இருந்துகிட்டே இருந்தது. அது இப்ப சரியா போச்சு..."

"ஜீ... திருடினது யார்? அவங்க வைரத்தைத்தான் திருடி னாங்களா?"

"இங்க வேற எதுவும் பெருசில்லையே... ஒருத்தன் கைல செம்போட போனானே... நீ பார்க்கலை?"

"ஆமாம்..."

"அவன் திருவிளையாடலாத்தான் இருக்கணும். என் ஜால வித்தையை இங்க நான் காட்டினா, அவன் யார்ன்னு தெரிஞ்சுடும். ஆனா இந்த மாதிரி புனிதமான இடங்கள்ல நான் என் சக்தியைக் காட்றதில்லை..."

"இப்ப என்ன ஜீ... பண்ணப் போறோம்...?"

"வா... முதல்ல நாமளும் கீழ போவோம். என் திருஷ்டி கீழே வேலை செய்யும். அவனை நாம பிடிப்போம்..." என் றபடியே எழுந்து படிகளை நோக்கினார் மாணிக்லால்.

அடிவாரத்தில் ஒரே போலீஸ் கூட்டம். மேலே வைரம் கொள்ளை அடிக்கப்பட்ட தகவல் வேறு கீழே வந்து விட்டதில் ஏகப்பட்ட பரபரப்பு. அடிவாரத்தைச் சுற்றி போலீஸ் வட்டம் கட்டி நிற்கத் தொடங்கி விட்டது. மலைப் படிகளைப் பார்த்தபடி ஒரு நான்கு பேர்.

அந்த சண்முகம் என்பவனின் பிணம் துப்பட்டிக்குள் அப்படியே கிடந்தது. பிணத்தை விடவும் வைரத் திருட்டு இப்பொழுது முந்திக் கொண்டுவிட்டது.

"கமான் அலர்ட்... திருடன் மலையை விட்டு இன்னும் வெளிய போகலை. ஈ, காக்காய் நமக்குத் தெரியாம போயிடக் கூடாது..." என்று இன்ஸ்பெக்டர் ருத்ரா காட்ட மாய் கட்டளை பிறப்பித்துக் கொண்டிருந்தார். அவரிடம் ஒருவிதமான படபடப்பு.

அவனோ பாதி வழியில் முன்பு நுழைந்த புதருக்குள் புகுந்தவனாக பழையபடி பேண்ட், சட்டைக்கு மாறி னான். அப்படியே மேல் இருந்து கீழே பைனாகுலர் ஒன் றின் வழியாகப் பார்த்தான். போலீஸ் தலைகள் தெரிந் தன. அவனுக்கும் ஏராளமாக நிற்கும் போலீஸ்காரர்க ளைப் பார்க்கவும் சந்தேகம்.

செல்போனை எடுத்து யாருக்கோ ஃபோன் செய்தான்.

"டேய்.. கீழே வந்தா மாட்டிக்குவே, மேல் திருட்டுப் போன விஷயம் தெரிஞ்சு போலீஸ் படு ஸ்பீடா வந் துருக்கு. வைரம் கைல இருந்தா, அதை எங்காயாவது ஒளிச்சு வெச்சுடு. மலைல எந்தத் தடயத்தையும் விட் டுடாதே. எப்படியும் நாய் வரும். அந்த வேட்டி, துண்டு, பூணூல்னு அவ்வளவையும் நெருப்பு வெச்சு எரிச்சுடு.

புகை அதிகம் வராதபடி எரி. இல்லாட்டி அதுவே காட் டிக் கொடுத்து விடும்..."

மறுமுனை அவனுக்கு அழகாக வழியைக் காட்டியது. அப்படியே செல்ஃபோனைப் பாக்கெட்டில் போட்டுக் கொண்டான். வைரத்தை எடுத்து ஒரு பார்வை பார்த் தான்.

பிரமிப்பாக இருந்தது. தினம் தினம் காலை வேளைக ளில் ஒளி வெள்ளத்தைப் பாய்ச்சிக் காட்டிய வைரம்.

"அந்த வைரம் மட்டும் கிடைச்சா, அதோட மதிப்பு அம் பது கோடி..." என்று அதற்குச் சொல்லப்பட்ட விலை ஒரு வினாடி காதில் ஒலித்து அடங்கியது. 'ஐம்பது கோடி...' அவன் வாயைப் பிளந்தான்.

ஒரு பெரிய நெட் ஒர்க்கே இந்த வைர வேட்டைக்குப் பின்னால் இருக்கிறது. அவ்வளவு பேரும் பங்கு போட் டுக் கொண்டாலும் கூட அவன் பங்காகவே இரண்டு, மூன்று கோடி தேறும். அதை எண்ணியவன் அப்படியே வைரத்தைக் கண்ணில் ஒற்றிக் கொண்டான். பின் எச் சரிக்கையாக திரும்பி நாலாபுறமும் பார்த்தான். சற்றுத் தள்ளி மலைப் பாறைகளுக்கு இடையே மேலே பயன்ப டுத்தப்படும் தண்ணீர் ஒரு மலை அருவி போல் ஓடி வந் தபடி இருந்தது. சற்று தூரத்தில் அந்த மலையின் பிரதா னமான சுனைக்கு போகும் வழியும், அது பற்றிய அம்புக் குறியிடப்பட்ட போர்டும் அவன் கண்ணில் பட்டது. அவ னுக்குள் உடனே ஒரு புதிய தீர்மானம். மிக வேகமாக அந்த வழித்தடத்தில் நடக்கத் தொடங்கினான். கீழி ருந்து சில போலீஸ்காரர்களும் அப்படியே மலை மேல்

ஏற ஆரம்பித்திருந்தனர். அவனும் கவனித்தான். அசுர வேகத்தில் சுனையை நோக்கி ஓடினான்.

அது ஒரு சிறிய சுனைதான்.

பச்சையாய் அதில் நீரின் தேக்கம்.

வெகு ஆழத்தில் பாறைகளுக்கு நடுவே இருந்தது. எனவே மிருகங்களால் கூட உள் இறங்கி நீர் அருந்த முடியாதபடி ஒரு பள்ளத்தில் கிடந்தது அந்த சுனை. மனித நடமாட்டமே துப்புரவாக இல்லாத பகுதி வேறு. மிருகங்களாலும் அங்கே நீர் அருந்த முடியாது. அதை எல்லாம் நொடியில் எடை போட்டவன், தன் வசம் உள்ள வைரத்தை எடுத்துப் பார்த்தான். உள்ளங்கை யில் அது ஜொலித்தது. அப்படியே அதைத் தன் பேண்ட் பாக்கெட்டில் உள்ள கர்ச்சீப்பில் இறுக்கமாக கட்டினான். பின் கீழே கிடக்கும் ஒரு கல்லை எடுத்து அதோடு சேர்த்து அந்த கர்ச்சீப்பை கட்டி ஒரு பந்து போல் ஆக்கியவன் அந்த சுனைக்குள் அதைப் போடத் தயாரானான். ஆனால், மனம் வரவில்லை. சுனையின் அடிப்பாகத்தில் சேறு இருந்து இது அப்படியே புதைந்து விட்டால் என்னாவது என்கிற பயம் மனதில் முண்டி அவ னைச் சற்று சங்கடப்படுத்தியது.

அப்போது அந்தப் பக்கமாய் யாரோ வரும் சப்தம்... சில போலீஸ்காரர்கள்தான் மலைமேல் ஏறி வந்து கொண் டிருந்தனர். ஒரு வினாடி சுருக்கென்றது. இனியும் தாம திக்கக் கூடாது என்று கருதியவன், அதை அப்படியே சுனைக்குள் போட்டுவிட்டு நிமிர்ந்தான். சுனை நீர் வைரத்தை வாங்கிக் கொண்டு குமிழி விட்டது. அதற் குள் "யாரது?" என்கிற குரலுடன் ஒரு போலீஸ்காரர் லட்

டியை ஊன்றிக்கொண்டு அவன் அருகே வந்துவிட்டார். அவனோ துளியும் பதட்டப் படவில்லை. போலீஸ்கார ரைப் பார்த்து, "வாங்க சார்.... என்ன சார் யாராச்சும் கண் ணுல பட்டாங்களா..." என்று கேட்டான். அவரிடம் ஒரு மெல்லிய திகைப்பு.

"நீ யாருய்யா.. இங்க என்ன பண்றே?"

"இந்த சுனையைப் பாருங்க. இதுக்குள்ளே ஒருத்தன் இறங்கி ஒளிஞ்சுக்கலாம் இல்லையா?" அவன் திருப்பி எதிர்க் கேள்வி கேட்டான்.

"நீ யாருன்னு சொல்றியா?"

"நான் தினம் இந்த கோயிலுக்கு வர்றவன் சார். சாமி கும்புட வந்த இடத்துல வைரம் திருட்டுப் போயிடுச் சுன்னு காதுல உழுந்துச்சு. அதான் அந்த திருட்டு நாயை நானும் தேட ஆரம்பிச்சுட்டேன்." கொஞ்சமும் பதட்டம், நடுக்கம் எதுவுமின்றி, அவன் சொன்ன விதம் அந்த போலீஸ்காரரையே சற்றுக் குழப்பியது. அவனை ஒரு மாதிரி ஊன்றிப் பார்த்தார்.

"என்ன சார்... என்னையே சந்தேகப்படறீங்களா? எதுக்கு சார் வம்பு? என்னை நல்லா செக் பண்ணிக் குங்க... உம், பண்ணுங்க சார்..." படுவேகமாய் அவர் முன் சென்று நின்றான். அவனது தோரணை, பேச்சு எல்லா வற்றிலும் ஒரு தேர்ந்த அனுபவம். அவரும் அரைமன தாக அவனைச் சோதித்தார். உடம்பு முழுக்க தடவிப் பார்த்தார். ஒரு முறைக்கு இருமுறை... அப்படியே அவன் தலைமுடியை கலைத்துப் பார்த்தார்.

"சார்... என்னை ஸ்கேன்கூட பண்ணிக்குங்க, ஒரு வேளை நான் வைரத்தை விழுங்கி இருக்கலாம். இல்லையா? என்று அடுத்த கட்டத்துக்கும் அவனே போனான். அந்த போலீஸ்காரரர் அப்படியே திணறிப் போனார். அப்படியே அவருக்கு அடுத்த கட்ட இன்ப அதிர்ச்சியும் கொடுக்கத் தொடங்கினான்.

"சார்... அங்க பாருங்க. அந்த புதருக்குள் வேட்டி, துண்டெல்லாம் கிடக்கறத..." என்றான். அவர் உடனே அந்த புதர் நோக்கி ஓடினார். அங்கே அவன் அவிழ்த் துப் போட்டிருந்த வேட்டி, துண்டு. அவனும் அவரோடு அதை நெருங்கினான்.

"சார் திருடன் இங்கதான் உடை மாத்தியிருக்கான். இது நிச்சயமா அவனோட டிரஸ்தான். இது ஒரு எவிடன்ஸ். விடாதீங்க..." என்று அவரைத் தூண்டினான். அவர் உடனே எரிச்சலாகி அவனை ஒரு மாதிரி பார்த்தார்.

"சார்... நான் நிறைய மர்மக் கதைங்க படிச்சிருக்கேன். சினிமா படம் பார்த்திருக்கேன். அதுல பார்த்ததை வெச்சு சொன்னேன் சார். உங்களுக்குத் தெரியாத தில்ல..." என்று சற்று வழியவும், அவர் அதை அப்படியே ஒரு குச்சியைக் கொண்டு தொட்டு எடுத்தார். சில அடி களிலேயே மலைப் படி இருந்தது. அதைத் தன் ஷூ கால்களோடு நெருங்கிக் கீழே இறங்க ஆரம்பித்தார். அவனையும் பார்த்து, நீயும் கூடவா..." என்றார்.

"கட்டாயமா சார்... கொடுங்க சார் அந்தக் குச்சியை நான் தூக்கிக்கிட்டு வரேன்..." என்றான்.

"பேசாம வாய்யா..." என்றபடி படிகளில் இறங்கினார். அவனும் ஒரு சிறு புன்னகையுடன் அப்படியே சுற்றி ஒரு பார்வை பார்த்தான். ஏராளமான போலீஸ்காரர்கள். துளியும் எதிர்பார்த்திராத ஒரு காட்சி... எவ்வளவுதான் வேகமாக தகவல் தந்தாலும் இரண்டு, மூன்று போலீஸ் காரர்கள் வந்தால் அதுவே அதிகம் என்றுதான் அவன் கணக்குப் போட்டிருந்தான்.

ஆனால், இப்படி எப்படி வந்து குவிந்தார்கள் என்பது தான் அவனுக்கே புரியாத புதிர்... அந்த போலீஸ்கார ரோடு கீழே இறங்கியவன் காதில் அங்கே ஒருவர் பேசிக் கொண்டிருப்பது காதில் விழுந்தது.

"ஏங்க.... இப்படி ஒரு திருட்டுப் போன சமயத்துலதானா மந்திரி வரணும்? அவருக்கு தகவல் தந்தாச்சா?" என்று கேட்டுக் கொண்டிருந்தார். அவனுக்கு உடனேயே விளங்கி விட்டது.

"இவ்வளவு போலீஸும் மந்திரிக்காக வந்திருக்கும் போலீசா?" வேட்டி, துண்டை ஒரு குச்சியால் பிடித்தபடி வரும் போலீஸ்காரர்களுக்கு நடுவில் மாணிக்லாலும், ஸ்ரீதரனும் கூட இருந்தனர்.

"என்னய்யா இது... என்ன இது?"

"வேட்டி சார்... இது மலைப்படிங்க கிட்ட புதர் ஒண்ணுல கிடைச்சது. அனேகமா திருடன் கட்டிக்கிட்டு இருந்ததா இருக்கலாம்..."

"அத அப்படி போடுய்யா... ஆமா, இது யார் கூட?"

"வழில பார்த்தேன் சார்.... சாமி கும்புட வந்தேங்கறான். ஆனா ரொம்ப பேசறான் சார்..."

"சோதனை போட்டியா?"

"ஸ்கேன் கூட பண்ணிக்குங்கறான்..."

அந்தப் பதிலைத் தொடர்ந்து ஆறடி உயரமிருந்த அந்த போலீஸ் ஆபீசர் அவன் அருகே சென்றார்.

"உன் பேர் என்ன?"

"பி... பிச்சமுத்துசார்..."

"எங்க இருக்கே?"

"இங்கதான் சார்... பக்கத்துல தேவனூர்..."

"என்ன பண்றே?"

"பால் வியாபாரம் சார்..."

"யோவ் கான்ஸ்டபிள்... இங்க வா! இவனைக் கூட்டிக் கிட்டு ஜீப்புல தேவனூருக்குப் போ. இவன் இப்ப என் கிட்ட சொன்னதெல்லாம் சரியான்னு விசாரிச்சுகிட்டு வா..."

அவர் அப்படி ஒரு முடிவெடுப்பார் என்று அவன் துளி கூட எதிர்பார்க்கவில்லை. மிரள மிரள அவரைப் பார்த் தான். அந்த நொடி அருகில் இருந்து கூர்மையாகக் கவனித்துக் கொண்டிருந்த மாணிக்லாலிடம் ஒரு வேக மான முடிவு.

"இன்ஸ்பெக்டர்! அவரை எனக்கு நல்லா தெரியும். மாடு வாங்க அவருக்கு வட்டிக்குப் பணம் கொடுத்த சேட்டு நான்... நம்பாட்டி தாராளமா தேவனூர் அனுப்புங்க உங்க ஏட்டை..." என்றார். இன்ஸ்பெக்டரிடம் உடனே லேசான தடுமாற்றம். அந்த நொடிகளை மாணிக்லால் நன்கு பயன்படுத்திக்கொண்டு, அவரது நெற்றிப் புருவ மையத் தையே பார்த்தார். அது நன்றாகவே வேலை செய்யத் தொடங்கியது.

"ஓகே.. ஓகே... நீங்க சொன்னா சரியாதான் இருக்கும்..." என்று கூறிவிட்டு, அங்கிருந்தும் விலகி வேறு யாரு டனோ பேசச் சென்றுவிட்டார்.

அவன் பதிலுக்கு மாணிக்லாலை நன்றியோடு பார்த் தான். அவர் அருகே மிகவும் நெருங்கியவன் கிசுகிசு குர லில் கேட்டான்.

"சேட்டு... விஷயம் தெரிஞ்சு தலைவர்தான் உன்னை அனுப்பினாரா?"

"ஆமாம் பிச்சமுத்து... பயப்படாதே! உன்னை யாருமே இங்க சந்தேகப்பட முடியாது..." என்றார். ஸ்ரீதரனுக்கு அப்போதே விஷயம் புரிந்து விட்டது.

"ஜீ... இவனா அந்தத் திருடன்?" என்று கையைப் பிசைந் தான்.

"ஆமாம் ஸ்ரீதரா... யார் கண்ணுல இருந்து வேணா தப்ப லாம். ஆனா என்கிட்ட இருந்து தப்ப முடியுமா?"

"அப்ப வைரம்...?"

"சும்மா அதைக் கண்குளிரப் பார்க்கணும். அதோட குணத்தைச் சோதிக்கணும்னு தான் வந்தேன். அதே சமயம் வைரத்துக்கு ஒரு ஆபத்துங்கறதும் தெரிஞ்சு தானே வந்தேன். இப்ப அதை அடையவே ஒரு மார்க்கம் பிறந்திருக்கு. வைரத்தை இவன் எங்கேயோ பதுக்கிட்டான். இவனை மடக்கினா வைரத்தை மடக்கின மாதிரிதான்..." மாணிக்லால் ஸ்ரீதரனிடம் முணுமுணுப்பாகப் பேசிவிட்டு பிச்சமுத்து என்கிற அவன் அருகில் வந்தார்.

"வா பிச்சமுத்து... நாம கிளம்புவோம்..." என்று அவனோடு அப்படியே காரை நோக்கி நடந்தார்.

அவனும் அந்த சூழலில் இருந்து தப்பித்தால் போதும் என்று அவருடன் புறப்பட்டான்.

# 4

வைரத்தின் கதிர்களுக்கு ஒரு மனிதனின் உடம்பை ஊடுருவவும் அவனது கோள்களின் கதிர்வீச்சுக்கு நடுவில் புகுந்து அந்தக் கதிர்வீச்சை குழப்பவும் முடியும். இந்த மாதிரியான வினைபுரியும் வைரங்கள்தான் சிலருக்கு மகிழ்ச்சியையும் சிலருக்குத் துன்பத்தையும் தருகிறது.

நமது இந்தியா மன்னர்களால் ஆளப்பட்டபோது, எல்லா மன்னர்களிடமும் ஏதோ ஒரு வைரம் இருந்தது. அந்தந்த வைரங்களின் சக்திக்கு ஏற்ப அவர்கள் அதிகார பலத்துடன் திகழ்ந்தார்கள். இந்த நிலையில் தான் இந்தியாவில் இருந்து விலை மதிக்க முடியாத வைரம் ஒன்று பிரிட்டிஷாரால் லண்டனுக்குக் கொண்டு செல்லப்பட்டது. அந்த வைரம் அங்கே சென்ற நேரம் பிரிட்டிஷ் சாம்ராஜ்யமே தன் பதவி பலத்தை இழக்கத் தொடங்கியது. அதேசமயம் இந்தியாவில் பிரிந்து கிடந்த மாநிலங்கள் அவ்வளவும் ஒன்றுபட்டு ஒரே நாடாக உருமாறியது.

இதைக் காலத்தால் நேரிட்ட ஒரு சம்பவம் என்று சிலரும், வைரம் இங்கிருந்து சென்றதுதான் காரணம் என்று சிலரும் கூறி வருகின்றனர். ஆனால், பல மேல்நாட்டினர் வைரத்தை ஒரு விலைமதிப்பில்லாத பொருளாக மட்டுமே பார்க்கவில்லை. அதை அவர்கள் அதிர்ஷ்டத்துக்கும் முன்னேற்றத்துக்கும் காரணமான ஒன்றாகவே கருதினார்கள்.

தேவகி வழக்கம்போல பூஜை முடித்துவிட்டு ஸ்ரீ ராம ஜெயம் போல 'ஓம் இந்திராட்சி நமஹ' என்று பக்கம் பக்கமாக எழுதிக் கொண்டிருந்தாள். அவள் அமர்ந்து எழுதிக் கொண்டிருந்ததும் பூஜை அறையில்தான்.... மடி மேல் நோட்டை வைத்துக் கொண்டு முத்து முத் தான கையெழுத்தில் அவள் எழுதிக் கொண்டிருந்ததை அவள் கணவன் சங்கரநாராயணனும் கவனித்தான். குளித்துவிட்டு தலை துவட்டிக் கொண்டே கவனித்த வன், 'இப்பதான் எழுத ஆரம்பிச்சிருக்கா. இன்னிக்கு கணக்குக்கு எழுதி முடிக்க எப்படியும் இன்னும் ஒரு மணி நேரம் ஆகும்...' என்று முணுமுணுத்தவன் அப்ப டியே சமையல்கட்டு நோக்கி நடந்தான். அடுப்பில் பால் பொங்கி அடங்கியிருந்தது. பக்கத்தில் ஃபில்டரில் டிகா க்ஷன் இறங்கிக் கொண்டிருந்தது. அவனே தனக்கான காப்பியைப் போட்டு கலக்கத் தொடங்கினான். அப்ப டியே ஒரு டம்ளரில் காபியை நிரப்பிக் கொண்டு சூப்பிய படி வெளியே வந்தான்.

"அப்பா..." என்று ஒரு மழலைக் குரல்! அது அவனை அப்படியே குழைந்த சோறு போல ஆக்கிவிட்டது. குரல் பக்கத்து அறையில் இருந்துதான் வந்தது. அவனும் காலி டம்ளரை அப்படியே பிடித்தபடியே அந்த அறைக் கதவைத் திறந்து கொண்டு உள் நுழைந்தான். அந்த அறை உள்ளே இருண்டு கிடந்தது. ஒரு ஜீரோ வாட்ஸ் பல்ப் மட்டும் ஒரு மூலையில் எரிந்து கொண்டிருக்க, அந்த அறைக்குள் ஒரு கட்டில். கட்டிலின்மேல் ஒரு பிஞ்சு பெண் குழந்தை!

"அப்பா..."

"வந்துட்டேண்டா கண்ணு..."

"ஆமாம்..."

"எனக்குப்பா..."

"அது... அது... நீ காபியெல்லாம் குடிக்க கூடாதும்மா. டாக்டர்தான் சொல்லியிருக்காரே... இரு, இதை நான் வெளிய போய் வெச்சுட்டு வந்துட்றேன்.

"இல்லப்பா... நீங்களாவது குடிங்க. ஆமா, பொழுது விடிஞ்சுடுச்சாப்பா?"

"உம்... விடிஞ்சிடுத்து, ஆமா உங்கம்மா உனக்குக் காலைல கொடுக்கற ஜூஸைக் கொடுத்தாளா?"

"கொடுத்துட்டுதான் பூஜை செய்யப் போனாங்கப்பா..."

"சரிப்பா... நீ படுத்துக்க, நான் இதோ வந்துட்றேன்..."

"அப்பா! எவ்வளவு நாளுப்பா இப்படி இருட்டு அறை லயே நான் இருக்கணும்... போரடிக்குதுப்பா!. என்னை வெளிய கூட்டிகிட்டுப் போங்கப்பா..."

"அது... அது.... கொஞ்சம் பொறுத்துக்கடா கண்ணு. இன்னும் கொஞ்ச நாள்தான். பிறகு நீயே தினம் எங்க வேணா போகலாம்..."

"எப்ப கேட்டாலும் இப்படியேதான் சொல்றீங்க. ஆனா நான் இந்த ரூமை விட்டு வெளிய வந்தே மூணு மாசத் துக்கு மேல ஆச்சு. ஸ்கூல்ல எவ்வளவு பாடம் நடத்தியி ருப்பாங்க தெரியுமா?"

"தெரியுதும்மா... நான் என்ன பண்றது? வரக்கூடாத வியாதி வந்துடுச்சு. சரியான பிறகுதானே நீ வெளிய வர லாம். அவசரப்பட்டு வெளிய வந்தா அப்புறம் அன்னிக்கு நடந்த மாதிரிதான்... தோலெல்லாம் உரிஞ்சு புண்ணாகி தண்ணியா வடிய ஆரம்பிச்சிடும்."

அவன் பேச, அவள் அதைக் கேட்டு மெல்ல கண்ணீர் வடிக்க, அறைக்குள் இருந்த பெண்டுல கடிகாரமும் ஆமோதிப்பது போல் சப்தமிட்டது.

சங்கரநாராயணன் எழுந்து வெளியில் வந்தான். அவன் முகத்தில் ஏராளமான சலனம். கண்களிலும் கலக்கம். அருகில் கிடந்த சோபாவில் அப்படியே மரம் போல விழுந்தான்.

அப்படியே நெடுநேரம் கிடந்தான்.

பூஜை அறையில் தேவகியும் எழுதி முடித்திருந்தாள். நோட்டை அப்படியே மூடி சன்னதியிலேயே வைத்து விட்டு சங்கரநாராயணன் அருகில் வந்தாள். அவன் சோபாவில் கிடக்கும் விதமே அவளுக்கு அவன் மனநி லையைப் புரிய வைத்துவிட்டது.

"என்னங்க..."

"உம்..."

"எழுந்திருங்க... தலையக்கூட சீவிக்காம இது என்ன கோலம்?"

"ப்ச்ச்ச்ச்..."

"போதுங்க. நீங்களே மனசு விட்டா அப்புறம் நான் என்னங்க பண்ணுவேன்...?"

"இல்ல தேவகி. எனக்கு நம்பிக்கையே போயிடிச்சு... ப்ரியாவோட நிலையை நினைச்சா அப்படியே வயிறு எரியுது..."

"போதுங்க..... எனக்கு நம்பிக்கை இருக்கு. லட்சத்தி எட்டு தடவை 'இந்திராட்சி நமஹ'ன்னு இன்னிக்குதான் எழுதி முடிச்சேன். நீங்க வேணா பாருங்க..... நம்ப ப்ரியாவுக்கு நிச்சயம் ஒரு நல்ல வழி பிறக்கும். பிறக்கும் என்னங்க.... பிறந்தாச்சு!"

மிகுந்த நம்பிக்கையோடு பேசினாள் தேவகி. சங்கர நாராயணனால் அவள் அளவு நம்ப முடியவில்லை. மனது வெறுத்துப் போய் விட்டிருந்தான். உலகில் யார் யாருக்கோ எவ்வளவோ பிரச்சினைகள்..... ஆனால், அவர்களில் யாருக்குமே இல்லாதபடி அவனுக்கு மட்டும் அப்படி ஒரு பிரச்சினை...

ஒரு பெண்ணுக்கு சூரிய ஒளியே ஆகாது என்பது எவ்வளவு கொடுமை....? மீறி அதன் ஒளிக்கதிர்கள் மேலே பட்டால் தோல் அரிப்பு ஏற்பட்டு அப்படியே பாம்பு சட்டையை உரிப்பது போல் உரிக்க வேண்டி வந்துவிடும்.... ஒரு பெண் குழந்தைக்கு இப்படி இருந்தால் அதன் எதிர்காலத்தை எதை வைத்து தீர்மானிப்பது?

சங்கரநாராயணனுக்கு மகளை நினைத்தாலே கண்ணீர் துளிர்த்துவிடும். மனதும் பாரமாகி ஒரு மலையைச் சுமப்பது போல ஆகிவிடும். இதற்கு குழந்தையே இல்

லாமல் இருந்து விடுவது கூட நல்லது என்று எண்ணுகிற அளவிற்கு அவன் மனது போய்விட்டது.

சாதாரணமாக இப்படி ஒரு பிரச்சினை எனும் போதுதான் டாக்டர்களிடம் மட்டுமல்ல... எல்லா கோயில் குளங்க ளுக்கும் கால்கள் ஓடும். அதிலும் தேவகி பக்தியில் ஊறித் திளைப்பவள். திங்கள் சோமவார விரதம், செவ் வாய் முருகனுக்கு, புதன் விஷ்ணுவுக்கு என்று வரிசை வைத்துக் கொண்டு விரதமிருப்பாள். தன் ஒரே மக ளுக்கு இப்படி ஆகவும் ஓடினாள். ஊரில் ஒரு கோயில் பாக்கிவிடவில்லை. ஆனால் அப்போது இந்திராட்சி பற்றி அவளுக்குத் தெரியாது.

ஒருநாள் ஒரு வயதானவர் 'பசிக்கிறது, சோறு போடு என்று கேட்டு வீட்டு வாசலில் வந்து நின்றார். அப் போது தேவகியும் சரி, சங்கரநாராயணனும் சரி, வீட்டில் இல்லை. தனி அறைக்குள் ப்ரியா மட்டும்தான் இருந் தாள். அவள் காதில் அந்தப் பெரியவரின் குரல் பரிதாப மாக விழுந்தது. பொறுத்துப் பொறுத்து பார்த்தவளுக்கு அறைக்குள் அடைந்து கிடக்கவும் வெறுப்பாக இருந்த தால், கதவைத் திறந்து கொண்டு வெளியே வந்து விட் டாள். நேராக சமையல் கட்டுக்குச் சென்றவள் அங்கி ருந்த சோற்றை அப்படியே எடுத்து வந்து வாசலில் நின்று கொண்டிருந்த பெரியவருக்குப் போட்டாள். அப்போது உச்சி வேளை... சூரிய வெயில் மேலே படவும் மயக் கமே வந்துவிட்டது. அந்தச் சமயமாகப் பார்த்து காய்கறி வாங்கப் போயிருந்த தேவகியும் வந்துவிட்டாள். ப்ரியா வெளியே நிற்பதைப் பார்த்து பதறிப் போனாள். அவளை அப்படியே வாரிக் கொண்டு உள்ளே ஓடினாள்... அவ்வ ளவையும் பார்த்துக் கொண்டிருந்த அந்த பெரியவருக்கு மனது சங்கடப்பட்டது. அப்படியே நின்று விட்டார். பிறகு

அப்படியே திண்ணையிலும் அமர்ந்து விட்டார். நெடு நேரம் கழித்துதான் தேவகியே அவரையும் பார்த்தாள்.

"அட, என்ன இது? அதான் சாப்பாடு போட்டாச்சுல்ல... போக வேண்டியதுதானே... இப்படி இங்கையே உக் காந்தா என்ன அர்த்தம்?"

"அது இல்லம்மா... அந்தக் குழந்தைக்கு என்ன? அதுக்கு ரொம்ப பெரிய மனசு. ஆனா உடம்புக்குத்தான் ஏதோன்னு தெரியுது..."

"ஆமா... அதைத் தெரிஞ்சுகிட்டு நீங்க என்ன பண்ணப் போறீங்க? எல்லாம் நாங்க செஞ்ச பாவம்."

"உண்மைதான்மா. பாவத்துக்கு ஈடா புண்ணியம் செய் துட்டா சரியாகிட்டு போயிடுது..."

தேவகி அந்தப் பதிலால் விருட்டென்று நிமிர்ந்தாள்.

ஆமாம்மா.... தீராத பிரச்னைன்னு இந்த உலகத்துல எதுவுமே கிடையாது. என்னைத் தெருவுல போற ஒரு பரதேசியா நினைக்காதே. எனக்குப் பசின்ன உடனே சோறு கொண்டு வந்து போட்ட உன் பெண்ணோட மன சுக்கு நான் பதில் நன்றி காட்ட விரும்பறேன்.

நான் வாழ்க்கைய வெறுத்தவன். கிட்டத்தட்ட ஒரு யோகி. எனக்கு நாளைன்னு ஒண்ணு கிடையாது. என் வரைல எல்லாமே நடக்க நடக்க நாராய ணன் செயல்ன்னு சொல்வாங்களே... அந்த மாதிரிதான். என் அனுபவத்துல நான் எவ்வளவோ விஷயங்களைப் பார்த்துட்டேன். நம்ம பெரியவங்க நாம நல்லா இருக்க நிறைய விஷயங்களைச் சொல்லிவிட்டுப் போயிருக்

காங்க. உன் பெண்ணுக்கு என்ன பிரச்னைன்னு சொல்லு. நான் எனக்குத் தெரிஞ்ச வழியைக் காட்றேன்.

அவர் அன்று அப்படி கனிவாய்க் கேட்கவும்தான் தேவகியும் அவளுடைய நோயைப் பற்றி சொன்னாள். அடுத்த நொடியே அவரிடம், 'சூரியக் கோளாறா? என்பதுதான் கேள்வியாகியது.

"ஆமாம். சூரியக் கோளாறுதான்..."

"சூரியன்தான் ஒருத்தரோட ஆக்க சக்தி, புகழ்னு பல விஷயங்களுக்குக் காரணமானவன். எப்பவோ யார் வரைலையோ அந்த ஆக்க சக்தி, புகழைக் கெடுத்த தோட விளைவு இந்த நோய். விதை ஒண்ணு போட்டா சுரை ஒண்ணு முளைக்காது. ஆகையால் சூரியக் கோளாறைச் சரிசெய்ய இந்த மண்ணுல இந்திராட்சின்னு ஒரு சக்தி இருக்கு. அதுவும் மலை மேல் கோயில் கொண்டு இருக்கு. போ... போய் அவள் கால்ல விழு! அவளோட காலடி குங்குமத்தைக் கொண்டு வந்து தினமும் உன் மகளுக்கு வை. அவ்வளவு ஏன்... உன் மகளுக்கு இந்திராட்சின்னும் ஒரு பெயரை வை.

இந்திராட்சிங்கற பெயரை சூரியக் கோளாறால எதுவும் செய்ய முடியாது. அந்தப் பெயரை தினசரி ஆயிரம் தடவை எழுது. ஒரு லட்சம் தடவை நீ எழுதி முடிக்கும் போதே, நீ எழுதியதும் உன் பக்தியும், அதன் வேகமும் பல அதிசயங்களுக்குக் காரணமாகிவிடும். அதை நீ பார்ப்பே. ஒண்ணு மட்டும் நிச்சயம். உன் மகள் நிச்சயம் குணமாகி நல்லபடி ஆயிடுவா. இப்ப நான் சொல்றதை ஏதோ தெருவுல போற ஒருத்தன் சாதாரணமா சொல்லிட்டுப் போறான்னு மட்டும் நினைக்காதே. நான்

சொல்ற அவ்வளவும் தேவ ரகசியம்... என்று அவர் எழுந்து போய்விட்டார்.

தேவகியும் அவர் கூறியதை அசைபோட்டாள். பிறகு இந் திராட்சியைச் சரண் புகுந்துதான் பார்ப்போமே என்று அவள் ஆலயத்துக்குப் போய் குங்குமம் கொண்டு வந்து தினமும் ப்ரியாவுக்கு வைத்துவிட ஆரம்பித்தாள். அதன் தொடச்சிதான் லட்சம் முறை இந்திராட்சி நாமாவையும் அவள் எழுதும்படி செய்துவிட்டது. ப்ரியாவிடம் மட்டும் பெரிதாக ஒரு மாற்றமும் இல்லை. சங்கரநாராயணனும் கூட வெறுத்துப் போய்தான் கிடக்கிறான்.

ஆனால் தேவகி நம்பிக்கை இழக்கவில்லை. லட்சம் முறை அவள் பெயரை எழுதிய நீண்ட அந்த நோட்டுடன் இதோ இந்திராட்சியை வணங்கிட கல்யாணி மலைக் குப் புறப்பட்டுவிட்டாள்.

கையில் பூஜைக்கு உரிய பிரசாதத்துடன் அவள் கிளம் பவும் சங்கரநாராயணன் அவளை முறைப்பாகப் பார்த் தான்.

"குழந்தையைப் பார்த்துக்குங்க... நான் கோயிலுக்குப் போய்விட்டு வந்துடறேன்."

"ஏ தேவகி... எதை வெச்சு நீ இன்னும் அந்த சாமியை நம்பறே?" என்று அவனும் ஆவேசமாகப் பாய்ந்தான்.

"என் நம்பிக்கை மேல எனக்கு நம்பிக்கை இருக்குங்க. ஒரு விஷயத்துல இறங்கிட்டா அதுல கடைசிவரை போகணும். தப்போ, சரியோ முடிவு வரை போயிட்டு தான் நிக்கணும். நானும் கடைசி கட்டத்துக்கு வந்துட் டேன். எனக்கு ஒரு பதிலை அவ சொல்லித்தான் தீர

ணும், சொல்லுவா..." என்று பொட்டில் அடித்த மாதிரி ஒரு பதிலைக் கூறிவிட்டு தேவகி விறுவிறுவென்று கிளம்பி விட்டாள்.

# 5

வைரங்களில் கறுப்பு வைரம் கூட உண்டு. இது மிக மிக அபூர்வமானது! கிரேக்கர் கள் காலத்தில் அவர்களது இஷ்ட தெய்வங்களில் அசுர சக்தி படைத்த ஒரு தெய்வச் சிலையின் கண்ணிரண் டும் கறுப்பு வைரத்தால் தான் அமைந்திருந்ததாம்... அதைக்கூட ஒரு துணியால் கட்டித்தான் போட்டு வைத் திருந்தார்களாம். எதிரிகள் படை எடுத்து வரும் சமயம் மட்டும் அந்தக் கட்டை நீக்கி விடுவார்களாம். அந்த தெய்வத்தின் பார்வை பட்டு எதிரி அழிந்து விடுவான் என்று நம்பியதே காரணம்.

அதே போலவே அதன் கட்டவிழ்க்கப்பட்ட காலங்களி லெல்லாம் எதிரிகள் அழிந்தும் போயினர். பெரிய அள வில் மழையும் பொழிந்து ஊரே வெள்ளக் காடாகியது. இதற்கு வைரத்திற்கான சக்தியே காரணம் என்பது ரத் தின ஆய்வாளர்கள் கருத்து!

கல்யாணி மலை மேல் அம்பாரமாய் மழை மேகங் கள் பெரிதாகவும் இல்லாமல் சிறியதாகவும் இல்லாமல் மழை தூறிக் கொண்டே இருந்தது. கிரீடத்து வைரம் திருடுபோய் விட்டதால், அது தெரிந்த பக்தர்கள் கூட்டம் அங்கங்கே திட்டுத் திட்டாகத் தேங்கியிருதனர். பெரிய அளவில் போலீஸ் கூட்டம் வேறு.

மலை முழுக்க சுற்றி வளைத்தும் அவர்கள் வரையில் திருடன் யார் என்பதே தெரியவில்லை. கோயில் குருக் கள் ஒரு மாதிரி மயக்கம் நீங்கி எழுந்திருந்தார். ‘கர்ப்

பக்கிரகத்துக்குள் இருட்டாக இருந்ததால் சரியாக முக ஜாடை தெரியவில்லை. இருந்தாலும் நேரில் பார்த்தால் அடையாளம் காட்டுவேன்' என்று போலீசிடம் சொல்லி யிருந்தார். அதைக் கேட்ட ருத்ராவிடம் மட்டும் ஒரு சிறு குழப்பம்.

'அவன் ஒரு பிராம்மண இளைஞனைப் போல வந்தி ருக்கிறான். பேசியிருக்கிறான். ஆனால், சரியாக முக ஜாடை தெரியவில்லை என்றால் என்ன அர்த்தம்.'

அவரோடு விசாரணை நடக்கும்போது பிச்சைமுத்து சன்னதிக்கு வெளியில்தான் நின்றிருந்தான். கொஞ்ச மும், பயமோ தயக்கமோ இன்றி அதேசமயம் இப்படி நடந்து விட்டதே என்று கவலைப்படுபவன் போலவும் இருந்தான். எச்சரிக்கையாக, தன் முகத்தை குருக்கள் பார்த்து விடாதபடி திரும்பி நின்று கொண்டு, முதுகைக் காட்டிக் கொண்டிருந்தான். ருத்ரா அவன் மேலும் அவ் வப்போது ஒரு பார்வை வைத்திருந்தார்.

சற்றுத் தொலைவில் கூர்மையாக நடப்பதையும் கவ னித்தவாறு மாணிக்லாலும், ஸ்ரீதரனும்! ஸ்ரீதரனுக்கு அங்கு நடப்பது எதுவும் புரியவில்லை. வைரம் திருட்டுப் போன ஒரு கோயிலில் எதற்காக மாணிக்லால் இருக்கி றார் என்பதும் அவனுக்குத் தெரியவில்லை.

"ஜீ... நாம இன்னும் எவ்வளவு நேரம் இங்கு இருக்கப் போறோம்?" என்று கேட்டே விட்டான்.

"உனக்கு அவசரம்னா நீ போ ஸ்ரீதரா... நான் இங்கேதான் இருக்கப் போறேன். வைரம் கிடைக்கற வரை இங்க

இருந்து வரமாட்டேன். என்று சற்றுக் கடுமையான குர லில் சொன்னார்.

"ஐயோ ஜீ... உங்களை விட்டுட்டு நான் மட்டும் போவேனா? ஆனா எனக்குள்ள வேற சில சந்தேகங் கள்..."

"அது என்னன்னு சொல்லு..."

"திருடன் யார்ன்னு தெரியாத நிலையில வைரம் மட்டும் எப்படி ஜீ திரும்பக் கிடைக்கும்?"

"உனக்குத் திருடனைத் தெரியாது. ஆனா எனக்குத் தெரியுமே..."

"ஜீ..."

"ஆமாம். அவன் பெரிய கில்லாடி. அவன் இங்கதான் இருக்கான்."

"ஜீ... அவனைத் தெரியுமா உங்களுக்கு?"

"தெரியாம எப்படி இங்கதான் அவன் இருக்கான்னு சொல்வேன்..."

"அது... அது... அந்த பிச்சமுத்துங்கறவன்தானே?"

"வெச்சுக்கோ. அவனாகூட இருக்கலாம்..."

"என்ன ஜீ... நீங்களா இப்படிப் பேசறது? உங்க வரைல சந்தேகமாவே எப்பவும் பேச மாட்டீங்களே?"

"இப்பவும் நான் சந்தேகமால்லாம் பேசல. ஒரு விஷயம் தெரிஞ்சுக்கோ. இங்க இப்ப ஒரு நாடகம்தான் நடந்து கிட்டிருக்கு. இதோட டைரக்டர் யார் தெரியுமா?"

"டைரக்ஷனா? ஜீ என்ன சொல்றீங்க நீங்க?"

"பைத்தியக்காரா... டைரக்டர்னா சினிமா டைரக்டர்தான் உங்களுக்கெல்லாம் ஞாபகத்துக்கு வரும். ஆனா, நான் சொல்றது இங்க அந்த அம்பாளை..."

"அப்ப அம்பாள்தான் இங்க நடக்கற சம்பவங்களுக்குக் காரணமா?"

"ஆமாம். நடக்கறதை வேடிக்கை பார்க்கற சாட்சிகள் நாம இரண்டு பேரும்..."

அவர்கள் பேசிக் கொண்டே இருக்கும் போது, கல் படி களில் தாவி ஏறிக் கொண்டு ஓடி வந்து கொண்டிருந்தது மோப்ப நாய் சாண்டி. அதைப் பார்க்கவும் பிச்சைமுத்து வுக்கே கடுக்கென்றது.

ருத்ராதான் ஒரு என்கொயரி இருக்கிறது என்று அவ னையும் மலைக்கே வரச் சொன்னவர்... அப்படியே அவர் பார்வை மாணிக்லால் மற்றும் ஸ்ரீதரன் மேலும் ஊர்ந்தப டியே இருந்தது.

நடுவில் பூஜைக்கான மணி சப்தம்!

நசுங்கிவிட்ட கிரீடத்தைத் தட்டி சரி செய்து இந்திராட் சிக்கு அணிவித்திருந்தார்கள்.

"திருட்டுப் போனதுக்காக ஆத்தாளுக்கான ஆறுகால பூஜையும் எக்காரணம் கொண்டும் நிக்கக் கூடாது. அது பாட்டும் ஒரு பக்கம் நடக்கட்டும்" என்று எல்லா பெரிசுக ளும் கூடி எடுத்த முடிவுதான் அந்த மணி சப்தம். ஓரளவு கூட்டமும் சன்னதிக்குள் நின்று கொண்டிருந்தது. அவர் கள் அவ்வளவு பேரையும் பரிசோதிக்க வேண்டும் என் பதோடு, மற்ற விஷயங்களுக்காகவும் வந்திருந்த சாண்டி என்கிற அந்த நாயை மொத்த பேரும் படு மிரட்சியோடு பார்த்தனர்.

அதற்கு கோச்சாக உள்ளவனிடம் கூட அடங்காமல் அது படிகளில் ஏறி கோயில் பகுதிக்குள் நுழைந்த விதமே படு மிரட்டலாக இருந்தது. 'ஹ... ஹ...' என்று இளைப்பெ டுத்த நாக்குடன் அது முண்டிக் கொண்டு ஓட, போலீஸ் காரரால் கூட அதை இழுத்துப் பிடித்து நிறுத்த முடிய வில்லை.

நாய் வருவதை பிச்சைமுத்துவும் பார்த்து விட்டான். அவன் பார்ப்பதை மாணிக்லாலும் கவனித்தார். பிச்சை முத்து அடுத்த நொடியே யாரும் எதிர்பார்த்திராத ஒரு செயலைச் செய்ய ஆரம்பித்தான். அவனாக முந்திக் கொண்டு முன்வந்து நாயிடம் தன் பாக்கெட்டில் இருந்து பிஸ்கெட்டை எடுத்துப் போட்டான். அதைப் பார்த்த போலீஸ்காரர் அடித் தொண்டையில் இருந்து கத்தி னார்.

"ஏய்... என்ன பண்றே? போலீஸ் நாய்க்கு பிஸ்கட் போட் றியா நீ? இடியட்..." என்றார். அதற்குள் அந்த நாய் அவன் மேல் ஆசையாகப் பாய்வது போல பாய்ந்து அவனைப் பற்றியது.

"சார்... சார்... விடுங்க சார்... நாயுங்கன்னா எனக்கு ரொம்ப இஸ்டம் சார்... எப்பேர்ப்பட்ட நாயும் என்கிட்ட விளையாடும் சார்..." என்று போலீஸ்காரரிடம் சாதார ணமாகப் பேசினான். அதற்குள் குருக்களைக் குடைந்து கொண்டிருந்த ருத்ராவும் அவர்களிடம் வந்து விட்டார்.

"வாட் நான்சென்ஸ்... இங்க என்ன கலாட்டா?"

"அது வந்து சார்... இந்த ஆள் நாய்க்கு பிஸ்கெட் போட் டான். அதான் போடக் கூடாதுன்னு சொல்லிகிட்டிருந் தேன்."

"ஓகே.. ஓகே.... வந்த வேலையப் பாருங்க... கமான் க்விக்" -ருத்ரா நாயையும், போலீஸையும் வழிப்படுத்தி விட்டு, திரும்பி பிச்சைமுத்துவைப் பார்த்தார். அந்தப் பார்வையில் ஆயிரம் அர்த்தங்கள்.

அவனுக்கும் புரிந்தது.

"சார்... அப்படியெல்லாம் பார்க்காதீங்க. நீங்க என்னை சந்தேகப்பட்டா கைது பண்ணி இழுத்துக்கிட்டு போய் உள்ற கூட போடுங்க. ஆனா இப்படி சந்தேகப் பார்வை மட்டும் பார்க்காதீங்க..." என்றான்.

அவர் உடனே ஒரு ஜோக் கேட்டது போல ஒரு சிரிப்பு சிரித்தார். மாணிக்லால் பார்த்துக் கொண்டேயிருந்தார். கூடவே ஸ்ரீதரன்.

ருத்ரா அடுத்து மாணிக்லாலைத்தான் நெருங்கினார்.

"நீங்கதான் மாணிக்லாலா?" - நேராக பெயரைச் சொல்லி கேட்கவும் மாணிக்லாலுக்கே திகைப்பு.

"ஆமாம். உங்களுக்கு என்னைத் தெரியுமா இன்ஸ்பெக் டர்...?"

"தெரிஞ்சிகிட்டேன். வடநாட்டுல... ஐ மீன் மும்பைல இருந்து இந்த கோயிலுக்கு தரிசனம் செய்ய வந்திருக் கீங்க... இல்ல?"

"ஆமாம். பரவால்ல. விட்டா நான் என்ன தொழில் செய் வேன்னு கூட சொல்வீங்க போல இருக்கே?"

"ஓ... சொல்லலாமே... நவரத்ன வியாபாரி. இந்த இந்தி யாவுல உங்க அளவுக்கு ஜெம்மாலஜி சைன்ஸ் தெரிஞ் சவங்க கிடையாது. லண்டன்லயும், அமெரிக்காவுல கலி போர்னியா யுனிவர்சிடியிலையும் ஜெம்மாலஜி படிச்சி ருக்கிற நீங்க டாக்டர் பட்டம் வாங்கறதுக்காக ஜெம்மா லஜில தீசீஸ் கூட எழுதியிருக்கீங்க. இன்ஃபாக்ட் உங்க ளுக்குக் கொஞ்சம் ப்ளாக் மேஜிக்கும் தெரியும்..."

ருத்ரா பிளந்து கட்டினார். மாணிக்லால் மட்டுமல்ல, ஸ்ரீதரனும் ருத்ராவைப் பார்த்து வியந்துதான் போனான்.

"உங்க போட்டோவை மும்பை போலீசுக்கு ஈமெயில் மூலமா பாஸ் பண்ணி உங்களப் பற்றிக் கேட்டோம். மும்பைல உள்ள வாக்காளர் பட்டியல்ல நேஷனல் ஐடென்டிடி கார்டுக்காக ஒரு போட்டோ எடுத்திருப் பாங்க. அதோட நாங்க அனுப்பின போட்டோ எதோடை யாவது ஒத்துப் போகுதான்னு கம்ப்யூட்டர் மூலமாவே செக் பண்ணினோம். அதை வெச்சு உங்க அட்ரஸ் தெரிய வந்தது. அதுவே நீங்கள் ஒரு பாப்புலர் ஃபி கர்னு போலீஸ்க்கு சொல்லாம சொல்லிடுச்சு. அதன் பிறகு பாம்பே ஷேர் மார்க்கெட்ல இருக்கற சிலர்கிட்

டையும் கோல்டு மார்க்கெட்ல இருக்கற சிலர்கிட்டையும் உங்களைப் பற்றி மேலும் தகவல் சேகரிச்சு எங்களுக்கு அனுப்பி வெச்சிருக்காங்க, உங்க மும்பை போலீஸ்.... பத்து வருஷத்துக்கு முந்தி இப்படி ஒரு அசைன் மென்டை முடிக்க குறைந்தபட்சம் பத்து, பதினைந்து நாட்கள் ஆகும். இப்ப பத்து, பதினைந்து மணி நேரம்னு அது சுருங்கிடிச்சு"

ருத்ரா, மாணிக்கலால் பற்றித் தெரிந்து கொண்டதை விலாவரியாகக் குறிப்பிடுவதில் ஒரு பொருள் ஒளிந்தி ருப்பது போல இருந்தது. சாதாரணமாக எந்த போலீஸ் காரர்களும் தங்களது முயற்சிகளின் ரகசியத்தைப் போட்டு உடைக்க மாட்டார்கள்.

மாணிக்லால் முகத்தில் ஒரு பெருமிதம்.

"இதை எல்லாம் என்கிட்டேயே கேட்டிருக்கலாம். நான் சொல்லிருப்பேன்..." - என்றவர் 'என் போட்டோ உங் களுக்கு எப்படிக் கிடைத்தது?' என்று கேட்கத் தவற வில்லை. பாக்கெட்டில் இருந்து உடனேயே ஒரு கேமரா செல்போனை எடுத்து அவர் எதிரில் போன் செய்வது போல முயற்சி செய்து, அப்படியே க்ளிக்கி திரையில் அவர் முகத்தை உடனே வரவழைத்து பதிலை வார்த் தைகளில் கூறாமல், 'இப்படித்தான்' என்றார்.

அவர் அப்படிச் சொன்ன நொடிகளில் நாயானது கருவ றைக்கு முன்னால் தொடங்கி ஓட ஆரம்பித்து, நேராக பிச்சமுத்துவை நெருங்கி அவன் மேல் தாவிப் பாய்ந்தது. அவனும், "என்ன, பிஸ்கட் வேணுமா?" என்று கேட்டு அதை டபாய்க்கப் பார்த்தான். ஏ.எஸ்.ஐ. செல்லமணி, அவனை உடனே நெருக்கிப் பிடித்து, "டேய்! உண்மை

யைச் சொல்லு.... நீ தானே வைரத் திருடன்....?" - என்று கேட்க, "சார்... சார்... நான் திருடன் துணி மாத்தின இடத்துக்குப் போய் அதையே உங்க போலீஸ்காரர் ஒருத்தருக்கு அடையாளம் காட்டுனவன். இங்க இப்ப கொஞ்சம் முந்திகூட பிஸ்கட் போட்டேன். அந்த நாய் என்னை பாசமா கவ்விப் பிடிச்சதை நீங்க தப்பா எடுத்துக்கறீங்க சார்..." என்று பயங்கரமாகச் சமாளித்தான்.

பார்த்துக் கொண்டே இருந்த ருத்ரா, "செல்லமணி... அவன் சொல்றதுதான் சரி. நாயை ரைட் பண்ணுங்க...." என்று பலமாக எல்லோருக்கும் கேட்கும்படி குறிப்பிட்டார். ருத்ரா அப்படி குறிப்பிடுகிறார் என்றால், அதற்குக் காரணம் இருக்க வேண்டும் என்பது செல்லமணிக்கும் தெரிந்திருக்க வேண்டும். அடுத்த நொடியே நாயை அவனிடம் இருந்து பிரித்து இழுத்துச் செல்லத் தொடங்கினார்.

அவன் 'அப்பாடா' என்று பெருமூச்சு விட்டான்.

ஞாபகமாக குருக்கள் கண்ணில் படாதபடி ஒரு கல் தூணை ஒட்டி நின்று கொண்டான். ஏனோ நாயோடு சேர்ந்து ஓட அவனுக்குப் பிடிக்கவில்லை. அவனுக்குத் தெரியும்.... நாய் அந்த வைரம் கிடைக்கும் சுனை வரை போகும். பிறகு திரும்பி வரும் என்று....

ருத்ரா அவனைப் பார்த்தும் பார்க்காதவராகவே மாணிக்லாலிடம் பேசிக் கொண்டிருந்தார்.

"மாணிக்லால்... நீங்க ஒரு ஜெம்மாலஜிஸ்ட். காணாம போயிருக்கிறதும் ஒரு காஸ்ட்லி வைரக்கல். சரியா நீங்க வந்திருக்கற அன்னிக்கே திருட்டுப் போயிருக்கு. ஒரு

மாங்கா மடையன் கூட கூட்டிக் கழிச்சு உங்களுக்குத் தொடர்பு இருக்கலாம்னு யோசிப்பான். ஆனா டெஃப னட்டா நான் அப்படி யோசிக்க மாட்டேன். ஏன்னா மும் பைல உங்களை எல்லாரும் ஒரு நல்ல கேரக்டராதான் பாக்கறாங்கன்னு தகவல் வந்திருக்கு. இன்ஃபாக்ட் நீங்க பலர் வரைல கடவுள் போலன்னும் கேள்விப்பட்டேன். உங்க கிட்ட நான் ஒண்ணு கேக்கலாமா?"

- ஒரு விளக்கம் அத்தோடு ஒரு கேள்வி என்று ருத்ரா கொக்கி மாட்டியது மாணிக்லாலை விட, ஸ்ரீதரனை மிக வும் நெருடியது.

"இன்ஸ்பெக்டர் சார்... ஜீ நீங்க சொன்ன மாதிரி ஒரு கட வுள் தான். சென்னைல என்னைப் போல எவ்வளவு பேர் வாழ்க்கைல விளக்கேத்தி வெச்சுருக்கார் தெரியுமா?" என்று உடனேயே வக்காலத்து வாங்கினான்.

"ஐ.சீ... ஆமா, நீங்க...?"

"என்ன சார்... இவரோட ஜாதகத்தையே புட்டு வெச் சிருக்கீங்க. என்னைத் தெரியலியா... அதுலையும் நான் ஒரு சென்னைவாசி..."

"அதனாலதான் எங்க போயிடப் போறீங்கன்னு ஃப்ரீயா விட்டுட்டேன். அதனால் என்ன... இப்ப சொல்லுங்க..." என்ற ருத்ரா, பதில் கூறிய மாதிரியே தெரியவில்லை. லேசாக ஸ்ரீதரன் கன்னத்தில் ஒரு அறை அறைந்த மாதிரி இருந்தது.

"என் பேர் ஸ்ரீதரன். நான் ஒரு பேங்க் எம்ப்ளாயி. சென்னை நங்கநல்லூர்ல வீடு இருக்கு. ஜீ எனக்கு ஒரு மும்பை நண்பர் மூலமா அறிமுகம் ஆனார். என் வாழ்க்

கைல எவ்வளவோ தீர்க்க முடியாத பிரச்சனைகள். அதை எல்லாம் தீர்த்து வைத்தவர் ஜீ தான்..."

ஸ்ரீதரன் சொல்லி முடிக்க, ஒரு தெற்றுச் சிரிப்பு சிரித்தார் ருத்ரா. அது மாணிக்லாலை இகழ்கிற மாதிரி கூட இருந்தது.

"என்ன சார் சிரிக்கறீங்க..... எங்க ஜீ இப்ப மனசு வெச்சாலும் உங்களை இங்க இருந்து ஓட வெச்சுடுவார் தெரியுமா?"- ஸ்ரீதரன் சட்டென்று கோப வயமானான்.

அவன் மூக்கு நுனியும் அவன் கோபம் நிஜம் என்பது போல சிவப்பு வண்ணத்துக்கு மாறியது.

"ஸ்ரீதரா... எப்பவும் என் பெருமைகளை, என் எதிரில் பேசக் கூடாது. இவர் என்னை பெருசா நினைக்கணும்னு எல்லாம் எதிர்பார்க்காதே..." என்று மாணிக்லாலும் ஸ்ரீதரனைச் சமாதானம் செய்யப் பார்த்தார்.

அதற்கும் ருத்ராவிடம் சிரிப்புதான்!

பார்வை என்னவோ மலைப்படிகளில் இறங்கிச் சென்ற நாய் மேலேயே இருந்தது. நாயும் திரும்பி வந்து கொண்டிருந்தது. மாணிக்லாலும் கூட பார்த்தார்...

செல்லமணி அருகில் வந்து, "சுனை வரை போச்சு சார். டிரெஸ் கிடந்த புதர் கிட்டையும் போச்சு. அப்புறமா அடிவாரம் வரை போனுச்சு. ஆனா அங்கிருந்து விலகி வேற எங்கையும் போகலை..."

"அப்ப திருடன் இந்த கல்யாணி மலையை விட்டு வெளியவே போகலை. அப்படித்தானே?"

"கிட்டத்தட்ட அப்படித்தான் சார்..."

"சரி, நீங்க போங்க... பக்தர்கள் வந்தா சாமி தரிசனம் பண்ணட்டும். யாரையும் ரொம்ப டிஸ்டர்ப் பண்ணி கஷ் டப்படுத்தாதீங்க. குருக்களையும் போய் வேலையைப் பார்க்கச் சொல்லுங்க..." என்றார். அப்படியே கல்தூண் மறைவில் நின்று கொண்டிருந்த பிச்சைமுத்துவைக் கைதட்டி அழைக்க, அவனும் நெளிந்தபடியே வந்தான்.

"தம்பி... நீ போகலாம். ஒரேயடியா ஊரை விட்டே ஓடிப் போயிடாதே. எப்ப வேணா கூப்ட்டு விடுவேன்."

"அப்ப இன்னும் உங்க சந்தேகம் நீங்கலயா சார்..."

"திருடன் பிடிபட்ற வரை அது நீங்காது. இதோ மும் பைல இருந்து வந்திருக்கற இவரையே நான் குடை குடைன்னு குடையும்போது நீ எந்த மூலைக்கு...?"

- என்று கேட்க, அவனும் மாணிக்லாலை ஒரு அதிர்ச்சிப் பார்வை பார்த்துக் கொண்டே படிகளில் இறங்கிச் செல் லத் தொடங்கினான்.

ருத்ராவும் திரும்பவும் மாணிக்லால் பக்கம் திரும்பினார். மீண்டும் ஒரு சிரிப்பு. மாணிக்லாலும் பதிலுக்குச் சிரித் தார்.

"உங்களை இவர் கடவுள்ங்கறாரு. ஸோ, யு ஹேவ் சம் எக்ஸ்ட்ரா பவர்... குட்! உங்க பவரை வெச்சு திருடன் யார்னு சொல்ல முடியுமா?"

"ருத்ரா கேலியாகத்தான் கேட்டார்."

"முடியும்..." மாணிக்லாலின் உடனடி பதில் ருத்ராவை ஊசி போலக் குத்தியது.

"முடியுமா?"

"நிச்சயமா முடியும். அவ்வளவு ஏன்... திருடன் யார்னும் தெரியும். நான் இப்ப அடுத்து என்ன நடக்கும், அது எப்படி நடக்கும்கற எண்ணத்துல ஒரு பார்வையாளனா தான் இங்க நிக்கறேன்..."

"என்ன சொல்றீங்க.... அடுத்து திருடன் அந்த வைரத் தோட தப்பிச்சு ஓட முயற்சி செய்வான். நீங்க அவனைத் தேடிப்போய் அந்த வைரத்தை ஒரு விலை பேசி வாங் கிக்கலாம்னு நினைக்கறீங்களா?"

மாணிக்லால் இந்த முறை பலமாகவே சிரித்துவிட்டார்

"என்ன மிஸ்டர் மாணிக்லால் என் சிரிப்புக்குப் பதில் சிரிப்பா?"'

"இல்ல சார்... உங்க யூகத்தை நினைச்சேன். சிரிப்பு வந் துடுச்சு..."

"அப்ப திருடன் யார்னு தெரிஞ்சும் வேடிக்கை பார்க்க காரணம்?"

"நான் ஒரு ஜெம்மாலஜிஸ்ட். குறிப்பா வைரத்தை ஒரு சக்தி மிகுந்த அம்சமாவே பார்க்கறவன். எப்பவும் எங் கையும் நல்ல வைரங்கள் யாரும் திருடல்லாம் முடியாது. அதுதான் உரிய மனிதர்கள்கிட்ட போய்ச் சேரும். எல் லோராலையும் வைரங்களை வெச்சுக்கவும் முடியாது.

ஏன்னா அதுக்கு அவங்க ஜாகதத்துல இடம் இருக்க ணும்..."

"வாட் டு யூ மீன்?"

"ஒரு வைரம் தான் விரும்பற மாதிரிதான் நடந்துக் கும். அதோட சக்தி மனித இனத்தை ஆட்டி வைக்கும். ஆனா அதை யாராலையும் எதுவும் செய்ய முடியாது..."

"என்ன உளர்றீங்க...? வைரம்கறது ஒரு விலை மதிப்பில் லாத கரி. அவ்வளவுதான்... அதுக்கு புத்தி, மனசுன்னுல் லாம் கிடையாது..."

"அது எனக்கும் தெரியும். ஆனா ஒண்ணு... நம்ம புத்தி, மனசு இரண்டையும் மிஞ்சின ஒரு அம்சம் அதுகிட்ட இருக்கு... இன்ஃபாக்ட் நம்ம அறிவுத் திறனை வெச்சு அதை மட்டமா எடைபோட முடியும். அவ்வளவுதான்.... அதோட சக்தியைப் புரிஞ்சுக்குற சக்தி நம்ம மூளைக் குக் கிடையவே கிடையாது."

"நீங்க என்னதான் சொல்ல வர்றீங்க?"

"நான் இந்த கல்யாணி மலை இந்திராட்சி வைரத்தை, அதோட சக்தியை எடை போட்டுப் பார்க்க வந்திருக் கேன், ஒரு சக்தி என் கனவுல தோன்றி தள்ளிவிட்டது. அதான் மும்பைல இருந்து இங்க வந்திருக்கேன். நான் வரவும் நாடகம் தொடங்கவும் சரியா இருக்கு..."

"நாடகம்னு நீங்க எதைச் சொல்றீங்க?"

"வைரத் திருட்டைத்தான். இவ்வளவு நாள் இல்லாம இப்ப மட்டும் ஏன் திருடு போகணும்? இதுதான் என்

முதல் கேள்வி. அதுக்கு முந்தி இங்க ஒரு உயிர் போயி ருக்கு. அதனால கோயில்ல தீட்டு சூழ்ந்திருக்கு. பூஜை தடைபட்டிருக்கு. வைரம் போன நொடி இதெல்லாமும் நடந்துருக்கு. வைரம் கிரீடத்துல இருந்தவரை இந்த கோயிலோட சக்தி முழுவீச்சோட செயல்பட்டிருக்கு. இப்ப சக்தியே இல்லைன்னு கூட சொல்வேன்..."

"மிஸ்டர் மாணிக்லால்... வாட் டு யூ மீன். இந்தத் திருட்டு பத்தி அதாவது இங்க திருடப் போறாங்கன்னு உங்க ளுக்கு முதல்லையே தெரியுமா?"

"சத்தியமா தெரியாது சார்... ஆனா ஒரு மகத்தான அனு பவம் எனக்கு ஏற்படப் போகுதுன்னு தெரியும். ஒரு விஷ யம் மட்டும் சொல்றேன்.... இந்திராட்சி வைரத்தை யாரா லையும் திருட முடியாது சார். அதைத் திருட ஒருவன் இனிமே பிறந்து வந்தாதான் உண்டு..."

"இப்ப திருடு போயிருக்கே... அதுக்கு என்ன சொல் றீங்க?"

"இதுதான் ஒரு நாடகம்னு சொன்னேனே..."

"உங்க நாடக கருத்து ஒரு பக்கம் இருக்கட்டும்... அந்தத் திருடன் யார்? அதை முதல்ல சொல்லுங்க..."

"கொஞ்சம் பொறுங்க... சொல்றேன்..."

"ஏன் பொறுக்கணும்? குற்றவாளிகள் விஷயத்துல பொறுமையா இருக்கறது போலீஸை முட்டாளாக்கி டும்..."

"இந்த வைர விஷயத்துல அப்படி எல்லாம் ஆகாது. அது எப்படிப் போச்சோ அப்படியே திரும்பி வரும். அது வந்து திரும்ப கிரீடம் ஏறும் வரை நானும் இந்த ஊரை விட்டுப் போகமாட்டேன். கவலைப்படாதீங்க..."

"நீங்க உங்க நம்பிக்கையைச் சொல்றீங்க... நான் நம்பிக் கைகளைப் பரிசீலிக்க முடியாது. திருடன் யார்னு சொல் லுங்க. இல்லேன்னா உங்களை நான் இப்பவே இங் கையே அரெஸ்ட் பண்ண வேண்டியிருக்கும்..."

"பண்ணினாலும் பிரயோஜனம் இல்லை. அவன் ஒரு வேளை உங்களுக்குக் கிடைச்சாலும் பிரயோஜனம் கிடையாது. ஏன்னா, அவன் திருடின வைரம் அவ னையே கூட ஏமாத்தற சக்தி உடையது..."

"போதும் மிஸ்டர் மாணிக்லால். யார் இந்தத் திருடன்?"

ருத்ரா கர்ஜனையாகக் கத்தலுடன் கேட்டார்.

"சரி இன்ஸ்பெக்டர்... சொல்லிட்றேன். நீங்க சந்தேகப் பட்ற அதே பிச்சைமுத்துதான்... இப்ப யாரை நீ போன்னு சொன்னீங்களோ... அவனேதான்!"

"அப்ப அவன் தப்ப முடியாது. ஏன்னா அவனை இரு பத்து நாலு மணி நேரமும் நோட் பண்ணச் சொல்லி ஒருத்தனை நியமிச்சிருக்கேன். அவன் திருட்டுத்தனமா எது செய்தாலும் எனக்குத் தகவல் வந்துடும்..."

என்ற ருத்ரா, அப்படிச் சொல்லிக் கொண்டிருக்கும் போதே அவர் செல்போன் கூப்பிட்டது.

"ருத்ரா ஸ்பீக்கிங்..."

"சார்... அவன் அந்த சுனைகிட்ட போறான் சார்..."

"அப்ப சுனைலதான் மேட்டர் இருக்கு... நாயும் அங்கே தானே போச்சு...?"

"ஆமாம் சார்..."

"விடுங்க... அவன் சுனைல என்ன பண்றான்னு பார்த்துச் சொல்லுங்க. ஸ்ட்ராங் எவிடென்ஸ் எப்ப கிடைச்சாலும் அரெஸ்ட் பண்ணிடணும்..."

என்றபடியே கட் செய்தார். மாணிக்லால் முகத்தில் திரும்பவும் சிரிப்பு.

"என்ன மாணிக்லால் ஜீ... சும்மா சும்மா சிரிச்சா என்ன அர்த்தம்? உங்களுக்கு காக்கிச்சட்டையைப் பார்த்தா அவ்வளவு மட்டமாவா தோணுது?"

"சத்யமா இல்லை மிஸ்டர் ருத்ரா.... எனவே உங்க கேள்விக்கு நான் பதில் சொல்லிட்டேன். இனி என்ன? போங்க... போய் அந்தத் திருடனைப் பிடியுங்க... வைரம் கிடைக்குதா, வேற என்ன கிடைக்குதுன்னு பாக்க றேன்."

மாணிக்லால் சொன்னது ருத்ராவை உசுப்பி விட்டு விட் டது.

"நீங்க பேசறத பார்த்தா நாங்க ஏமாறப் போறோம்கற மாதிரி ஒரு தொனி தெரியுதே?"

"நிச்சயமா... இதை நான் என்கிட்ட இருக்கற விசேஷ சக் தியைப் பயன்படுத்திச் சொல்றேன்."

"அது எப்படி? உங்களுக்கு பிளாக் மேஜிக் தெரியும்னு சொல்லியிருந்தாங்களே... அதை வெச்சா?"

"பிளாக் மேஜிக் ஒரு சப்ஜெக்ட். நீங்க கூட ஒரு நல்ல குருவைத் தேர்வு செய்து அவர்கிட்ட கத்துக்கலாம். ஆனா விசேஷ சக்திங்றது பிரபஞ்ச ஞானம் சார்ந்தது. அது மாயம் இல்லை... மந்திரம் இல்லை... கிட்டத்தட்ட அது ஒரு சைன்ஸ்னுகூட சொல்வேன்."

"ரொம்பவே நீங்க குழப்பறீங்க..."

"ஆரம்பம் குழப்பமாதான் இருக்கும். புரிஞ்சுக்கறதும் கஷ்டம்தான். ஆனா புரிஞ்சுக்கிட்டா அப்புறம் இந்த உலக இயக்கமே உங்களுக்கு ஒரு சாதாரண விஷயமா யிடும்..."

"அப்படியா?"

"நிச்சயமா... ஒரு கெடிகாரம் நான்ஸ்டாப்பா ஓடிக் கிட்டி ருக்கு. ஒரு கார் சாலைல வேகமா ஓடுது. ஒரு விளக்கு எரியறது. கேமரா மூலமா படம் எடுக்கறதுன்னு நம் மைச் சுத்தி நூறு நூறு விஷயங்கள்... இதுல எதுலையுமே நமக்கு எந்த வியப்பும் கிடையாது. ஏன்னா இதெல்லாம் இயங்கற விதம் நமக்குத் தெளிவாகவே தெரியும். நம்ம அறிவுக்கும் புரியும். எதுவும் புரியாதவரைதான் ஆச்சரி யமும் அதிர்ச்சியும் தரும். புரிஞ்சுட்டா அது சாதாரண ஒண்ணாயிடும்..."

"பயங்கரமான விளக்கமா இருக்கே? ஓ கே நீங்க இங்க தானே இருக்கப் போறீங்க?"

"நிச்சயமா... காணாம போன அந்த வைரத்தை நான் என் கண்ணால பார்த்த பிறகுதான் இங்க இருந்து கிளம்பு வேன். அதுவரை போகமாட்டேன். நீங்க போய் உங்க ட்யூட்டியைச் செய்யுங்க..."

மாணிக்லால் பேச்சோடு இன்ஸ்பெக்டர் ருத்ராவுக்கு மலைப்படிகளைக் காட்டினார்.

"வெரி இன்ட்ரஸ்ட்டிங்..." என்றபடியே இன்ஸ்பெக்டர் ருத்ராவும் நடந்தார்.

# 6

இந்தியாவில் இருந்து பிரிட்டிஷ் அரசால் கொண்டு செல்லப்பட்ட மகத்தான வைரம் கோஹினூர். இது எங்கே இருக்கிறதோ அங்கே இது பிளவுகளை உண்டாக்கும் என்பது நவ ரத்ன ஆராய்ச்சியாளர்கள் சிலரது கருத்து. ஓரளவுக்கு இதில் உண்மையும் இருக்கிறது. கோஹினூர் வைரம் இந்திய மண்ணில் இருந்தவரை இந்திய நாடு பல நாடு களாக இனம், மதம், மொழி இவைகளால் பிரிந்துதான் கிடந்தது.

எப்போது அது இங்கிருந்து கடத்தப்பட்டதோ, அப் போதே பிரிவினை ஆபத்து நீங்கி இந்தியா ஒருமித்த நாடாகிவிட்டது. அதேசமயம் அது பிரிட்டிஷ் அரசைப் பிளவுபடுத்தி பலவீனப்படுத்தி விட்டது என்பார்கள்.

கோஹினூர் நமது நாட்டுக்குச் சொந்தமானதுதான். ஆனாலும், அதை இங்கே கொண்டுவர யாரும் பெரிய முயற்சிகள் எடுக்காததற்கு அதன் மேல் உள்ள பயமே காரணம் என்பது சிலர் கருத்து.

இதில் எது உண்மை என்று காலத்திற்கே வெளிச்சம்!

சில போலீஸ்காரர்கள் மட்டும் மலைக்கோயில் சன்னதி முன் நின்றபடி இருக்க, பெரும்பாலோர் மோப்ப நாயைப் பின்தொடர்ந்து சென்றுவிட்டனர். அதுவரை மிகுந்த சோகத்தில் இருந்த குருக்கள் மெல்ல மாணிக்லாலை நெருங்கி வந்தார். நெற்றிக்கு மேல் கையைக் கூரை

போல வைத்து கூர்ந்து பார்த்தார். மாணிக்லால் சிரித்தார். ஸ்ரீதரனுக்குக் கொஞ்சம் துருதுருவென்றிருந்தது.

"நீங்க யாரு?"

"ஏன் சாமி கேக்கறீங்க... என் பேர் மாணிக்லால். மும்பைல இருந்து வந்திருக்கேன். நான் ஒரு நவரத்னக் கல் வியாபாரி..."

"இங்க அம்பாளோட வைரத்தைப் பார்க்க வந்தேளாக்கும்?"

"ஆமாம். இந்திரன் கொடுத்த வைரமாச்சே... எப்படி இருக்குன்னு பாக்கற ஆசை. அதோட ஒரு சக்தியும் பிடிச்சு தள்ளிச்சு. அதான்..."

"அப்படின்னா...?"

"'இப்ப இங்க திருட்டுப் போயிருக்கு இல்லையா... இதெல்லாம் விதிப்படி நடக்க வேண்டிய விஷயங்கள்னு சொல்ல வந்தேன்..."

"ஆமாம்... நானும் அப்படித்தான் நினைக்கிறேன்..."

குருக்கள் மாணிக்லால் எதிர்பார்க்காத ஒரு பதிலைச் சொல்லி அதிர வைத்தார்.

"விதின்னு நான் நினைக்கறதுல நிறைய நியாயங்கள் இருக்கு. நீங்க நினைக்கறதுதான் புதிரா இருக்கு..."

"ஒரு புதிரும் இல்ல. என் தலைமுறைகள்தான் இந்தக் கோயிலுக்கு குருக்களா இருந்திருக்காங்க. நான்

அவங்கள்ல ஒருத்தன். எனக்குத் தெரிஞ்சு இந்த வைரம் இதுக்கு முந்தியும் இரண்டு தடவை காணாம போயிருக்கு... அதைக் 'கோயிலொழுகு'ங்கற இந்தக் கோயிலுக்கான ஏடுகள்ல என் முன்னோர்கள் எழுதியே வெச்சிருக்காங்க. அதுவும் இதே மாதிரி பார்த்திப வருஷத்துலதான் காணாம போயிருக்கு. எப்படிக் காணாம போனதோ, அப்படியே திரும்ப வந்துருக்கு. மற்ற நாட்கள்ல ஒரு படையே வந்து கோயிலைச் சுற்றி வளைச்சாலும் அம்பாளோட வைரத்துக்கு ஆபத்து வராதுன்னு உறுதியாச் சொல்வேன்..." என்று குருக்கள் ஒரு புதிய தகவலைச் சொல்லி மாணிக்லாலுக்கு இன்ப அதிர்ச்சியளித்தார்.

"குருக்களே.... நான் சகுனங்களை வெச்சுதான் காணாம... இல்லயில்ல... அது திருடப்பட்டதை முன்கூட்டியே சொன்னேன். நீங்களோ கோயில் ஏடு சொல்றதாவே சொல்றீங்க. அதுவும் இப்படி ஒரு பார்த்திப வருஷத்துலன்னு ஒரு புதுத் தகவலே சொல்றீங்க. நீங்க சொல்றத பார்த்தா, பார்த்திப வருஷத்துக்கும் அந்த வைரத்துக்கும் ஏதோ கனெக்ஷன் இருக்கற மாதிரி இல்ல"

"அதுல என்ன சந்தேகம்? நான் அதை ஒரு ஜடப்பொருளாகவே பார்க்கலை. அது ஒரு சக்திப் பெட்டகம். அதுக்கு மூளை இருக்கு, உணர்ச்சி இருக்கு, மனசும் இருக்குங்கற மாதிரிதான் நான் நினைக்கறேன்..."

"அப்படிக் கிடையாது. அதோட கதிர்கள் நம்மைப் போன்ற மனித மனங்களைத் தாக்கும் போது, நாம நடந்துக்கற விதம், வைரத்தை நாம் அப்படி நினைக்க வைக்குது..."

"இருக்கலாம்.... என்னோட அபிப்ராயப்படி அந்த வைரம் இன்னிக்கெல்லாம் கிடைக்காது. எப்படியும் இரண்டு மூணு நாள் ஆகும்... எது எப்படி இருந்தாலும் அது உத்ர நட்சத்திரம் வர்றதுக்குள்ள கிடைச்சுடும்..."

குருக்கள் சொன்னதை மாணிக்லாலும் கேட்டுக் கொண்டார். "அப்படியே, வா கீழே போவோம். அங்கு இப்ப நிறைய காட்சிகள் இருக்கு..." என்றார். ஸ்ரீதரனும் ஒரு அடிமை போல அவரைப் பின்தொடர்ந்தான்.

சுனை அருகில் பிச்சைமுத்து சுற்றிச் சுற்றிப் பார்த்தான்.

ஈ காக்கை இல்லை. அவனைப் பின்தொடர்ந்து வந்த போலீசும் அவனை ஒளிந்து கொண்டே கண்காணித்துக் கொண்டிருந்தது.

ஒரு பத்து நிமிடம் சுனைக்கு அருகில் காலை நீட்டி படுத்துக் கொண்டான். அவன் வரையில் எல்லாமே ஒரு கணக்கு. தப்பித் தவறி யாராவது பின் தொடர்ந்து வந்து 'இங்கு என்ன செய்கிறாய்? என்று கேட்டால், தூங்கத் தான் வந்தேன்.' என்று கூறி விடலாமென்பது, அப்போது அவன் நினைப்பு. படுத்துக் கொண்டே செல்போனை எடுத்து எண்களைத் தட்டி யாருடனோ தொடர்பு கொண்டான்.

"இந்த நிமிடம் வரை தப்பிச்சு ஓடிக்கிட்டிருக்கேன். வைரம் சுனைக்குள்ளதான் இருக்கு. நேத்து நான் போட்டது. இன்னிக்கு எடுக்கறது பெருசுல்ல... கரெக்டா கொண்டு கிட்டு போய் சேக்கணுமா? வேண்டாமா?"

"...."

"அப்படி சொல்லுங்க... போலீஸ்காரங்க என்னை எப் படியெல்லாம் குடைஞ்சாங்கன்னு நீங்க பார்த்திருந்தா தெரிஞ்சிருக்கும். நானா இருக்கவும் தப்பிச்சு ஓடிக்கிட் டிருக்கேன்..."

"..."

சுனைல இருக்கறத எடுத்து எப்படியாவது உங்க கிட்ட சேர்த்துடறேன். கவலையே படாதீங்க.... இங்க இப்ப ரொம்ப கெடுபிடியா இருக்கு. என்மேல ருத் ராங்கற இன்ஸ்பெக்டருக்கு ரொம்பவே சந்தேகம். அத னாலேயே என்னைக் கொஞ்சமும் சந்தேகப்படாதவர் போல போன்னு சொல்லிட்டாரு. இப்ப உங்ககூட பேசி கிட்டிருக்கற இந்த நேரத்துல கூட இந்த மலைல இருக் கற யாராவது ஒரு போலீஸ் என்னைப் பார்த்துகிட்டு இருக்கலாம். நானும் ஒவ்வொரு கட்டமா அவங்ககிட்ட இருந்து தப்பிகிட்டே இருக்கேன். இப்ப சுனைக்குள்ள இறங்கி வைரத்தை நான் வெளியே எடுக்கறது பெருசு இல்ல... அதோட மலையை விட்டு இறங்கி, நீங்க அனுப்பி வைக்கற கார்ல ஏறும்வரை எது எப்படி நடக் கும்னு சொல்லவே முடியாது..."

"....."

"சரி... புரியுது... கோடிக்கணக்கான ரூவா வருதுன்னா நான் போலீஸை எவ்வளவு வேணா சமாளிப்பேன். அவ் வளவு ஏன்? அவங்க என் நகக்கண்ல ஊசி ஏத்தறதுக்கு முந்தி, நான் எடுத்து ஏத்திக்கிட்டு அவங்களைத் திணற அடிச்சுடுவேன். ஒண்ணு மட்டும் உறுதி. என் கிட்ட இருந்து மட்டும் போலீஸ் வைரத்தை அடையவே முடி யாது. நீங்க தைரியமா இருங்க..."

பிச்சமுத்து பேசி முடித்தான். உடனேயே பேசிய நம்பரை மளமளவென டெலிட் செய்துவிட்டு, செல்லை பாக்கெட்டில் போட்டுக் கொண்டான். திரும்பவும் ஒரு பார்வை.... பிறகு ஒரு பாறை மேல் ஏறி நின்று பார்த்தான். அவன் பார்ப்பது தெரிந்து அவனைக் கண்காணிக்கும் போலீஸ்காரர் ஒரு பெரிய பாறை பின்னால் படுவேகமாக ஒளிந்து அவனை ஏமாற்ற முனைந்தார்.

பிச்சமுத்து யாரும் இல்லாததைப் பார்த்து சற்று ஆச்சரியப்படவும் செய்தான். ருத்ரா பற்றி தான் போட்ட கணக்கு ஒருவேளை தவறாகிவிட்டதோ என்றும் தனக்குள் கேட்டுக் கொண்டான். பிறகு பாறையை விட்டு இறங்கியவன் சுனை அருகே சென்று மெல்ல அதற்குள் இறங்கத் தொடங்கினான். எச்சரிக்கையாக உடைகளைக் கழற்றி, உள்ளேயே ஒரு பாறை மேல் வைத்தவன், போட்டிருந்த ஜட்டியைக்கூட அவிழ்த்து முழு நிர்வாணமானான். மீண்டும் அண்ணாந்து ஒரு பார்வை.... அடுத்த நொடி தண்ணீருக்குள் குதித்தான். மூழ்கினான். மூழ்கின இரண்டாவது நிமிடம் நீருக்கு மேல் வந்தவனின் கைகளில் கல்லைக் கட்டிப் போட்டிருந்த துணி சுற்றியிருந்த வைரக்கட்டு. அதை அப்படியே சுனைக்கு மேல் உள்ள பாறை மேல் வைத்தவன், மளமளவென்று பேண்ட் பாக்கெட்டில் இருந்த கர்ச்சீப்பை எடுத்து உடம்பை ஒத்தி ஓரளவு ஈரம் போக்கிக் கொண்டான். பின் கர்ச்சீப்பை ஒரு கல்லைக் கட்டி தண்ணீருக்குள் போட்டவன் மளமளவென்று உடைகளை உடுத்திக் கொண்டான். பேண்ட் பாக்கெட்டில் இருந்து சீப்பை எடுத்து சுனை நீரின் மேல் தடத்தை கண்ணாடி போல பார்த்து தலையை வாரிக் கொண்டான். வாரிக்கொண்டதை லேசாக கலைத்தும் விட்டுக் கொண்டான். அப்படியே வைரக்கட்டை எடுத்து அதைக் கட்டியிருந்த

துணியை அவிழ்த்து வைரத்தைத் தனியே எடுத்து பேண்டின் பெல்ட் ஹிப் பகுதிக்குள் செயற்கையாக உரு வாக்கியிருந்த சிறிய பாக்கெட்டுக்குள் தள்ளி சரியாக தொப்புளுக்குக் கீழே அது வந்து நிற்குமாறு செய்து கொண்டான். அது சற்று பிதுங்கலாக கண்ணைக் கொத் தியது. மீண்டும் அதைக் கட்டிய துணியைக் கல் லைக் கட்டி அது மிதக்காதபடி சுனைக்குள் போட்டவன் இரு கைகளையும் பரபரவென்று தேய்த்துக் கொண்டு சுனையை விட்டு வெளியே வந்தான்.

"சார்... சுனைக்குள்ள இறங்கிட்டு மேல ஏர்றான். பார்த்தா சுனைக்குள்ள மூழ்கின மாதிரியே தெரியல. ஆனா தலைல கிராப் மாறியிருக்கு..." என்று அடுத்த நொடியே செய்தியும் ருத்ராவுக்குப் போனது.

"விடு... அவன் எப்படியும் கீழே வருவான். நான் பார்த்துக் கறேன்" என்ற ருத்ராவின் பதிலையும் கேட்டுக் கொண் டார் அந்தப் போலீஸ்காரரர். அப்போது சற்றும் எதிர்பா ராதபடி அவரது செல்போன் கையில் இருந்து நழுவி கீழே விழுந்தது. அதை வேகமாக எடுப்பதற்காக, ஒளிந் திருந்த பாறையை விட்டு வெளியே வந்து அதை எடுத் துக் கொண்டு வேகமாகத் திரும்ப எத்தனித்தவரை பிச் சமுத்துவும் பார்த்துவிட்டான்.

"அடடா..." என்று நாக்கைக் கடித்துக் கொண்டான். போலீஸ் ஒளிந்தபடியே கவனித்திருக்கிறது. போக விட்டு பிடிக்கப் போகிறது என்பதை எல்லாம் நொடியில் புரிந்து கொண்டுவிட்டான்.

இப்பொழுது மாட்டினால் அவ்வளவுதான். வாய் வழியாக கைவிட்டு குடலுக்குள் கூட தேட ஆரம்பித்து விடுவார் கள். பயம் வந்து அவன் மார்புக்கூட்டைக் கவ்வியது.

'ச்சே... இப்படி பட்டப்பகலில் திருடத் திட்டமிட்டது தான் எவ்வளவு பெரிய தவறு.... என்று நொந்து கொண்டான்.

அடுத்து என்ன செய்வது என்று திட்டமிட்டபடியே நடந்து மலைப்படிகளையும் அடைந்தான். படிகளில் கூட்ட மில்லை. மெல்ல இறங்கியவன் கைகள் பேண்ட் ஹிப் பில் இருந்து அந்த வைரத்தை, நடந்து கொண்டே எடுத்து விட்டது. போலீஸ் ஒருவேளை இறுக்கிப் பிடித் தால் வைரத்தைத் தூக்கி எறிந்து விடவேண்டியது தான்.... வைரத்தோடு மட்டும் போலீஸ் வசம் அகப் பட்டால், வாழ்க்கையே அதன்பின் ஜெயிலுக்குள்தான்' என்றெல்லாம் கற்பனை செய்து பார்த்தவனுக்குள் மூளை துருதுருவென்று வேலை செய்தது.

அப்போது படி ஓரமாக குழந்தை பொம்மையையும் கற்பூ ரம் மற்றும் சாமி படங்களையும் போட்டுக் கொண்டு ஒரு வயதான பெண்மணி கடை பரத்திக் கொண்டிருந்தாள். அவளருகே சென்றவன்; அப்படியே அமர்ந்தான். இரு புறமும் இரண்டு போலீஸ்காரர்கள் அவனையே பார்த்த படி நடந்து வந்து கொண்டிருக்க, அவனது கையும் படு வேகமாக அங்கு கிடந்த பொம்மையை எடுத்துப் பார்ப் பது போல பார்த்து அதற்குள் வைரத்தை மிக வேகமாகப் பதுக்கியது.

எல்லாமே அசுர வேகத்தில் நிகழ்ந்தது. சட்டென்று பொம்மையைக் கீழே வைத்தவன், அப்படியே அமர்ந்து

அங்குக் கிடந்த மற்ற பொருட்களை ஏதோ வாங்குபவன் போல பார்த்து கடைக்காரனிடமும் பேச்சு கொடுத்தான்.

பின்னாலேயே போலீஸ்காரர் ஒருவர் வந்து நின்றார். நிழல் அவன்மேல் விழுந்தது. அவனும் திரும்பிப் பார்த்தான். அவர் இதழ்க்கடையில் ஒரு கேலிப் புன்னகை... உடனே அவன் எழுந்தான்.

"என்ன சார்... என்கூட ஏதாவது பேசணுமா?"

"இங்க என்ன பண்றே?"

"கடைல என்ன சார் பண்ணுவாங்க? பொம்மை வாங்கி நேர்த்திக் கடன் செலுத்தலாம்னு பாக்கறேன்..."

"நீயா?"

"ஏன் சார். நான் நேர்த்திக் கடன் செலுத்தக் கூடாதா?"

"அதுசரி... சுனைக் கிணறுகிட்ட என்ன பண்ணுனே?"

"தாகமா இருந்துச்சு. இறங்கி தண்ணி குடிச்சேன்."

"தண்ணி குடிச்சா தலை கிராப்பெல்லாம் மாறுமா என்ன?"

"குடிச்சுட்டு முகம் கழுவிட்டு அப்படியே தலையை அழுத்தமா தடவிகிட்டா மாறத்தான் செய்யும். இப்ப என்ன... என்னைச் சந்தேகப்பட்றீங்களா?"

"நீ வல்லாளகண்டன். திருநெல்வேலிக்கே அல்வா கொடுக்கறவன்..."

"சார்! அதிகம் பேசாதீங்க. உங்களுக்குச் சந்தேகமா இருந்தா பிடிச்சு உள்ற போடுங்க சார்... நான் அதுக் கெல்லாம் பயப்பட்றவன் இல்லை."

அவனிடம் அசாத்ய சமாளிப்பு. அப்போது அங்கே தேவகி வந்து நின்றதுதான் ஆச்சரியம்.

"சார்... கொஞ்சம் தள்ளி நில்லுங்க சார்... கடை சார்... வியாபாரம் நடக்கணும் சார்... கடைக்காரனின் கெஞ் சல். போலீஸ்காரரும் அவனுடன் சற்று தள்ளிச் சென் றார். தேவகி அந்த கடைக்காரனிடம் கற்பூரம் வாங்கி னாள். அப்படியே அந்தப் பொம்மையைப் பார்த்தாள்.

"என்னம்மா... நேர்த்தி கடன் பொம்மைம்மா. வாங்கி சாமி கணக்குல சேருங்கம்மா. குழந்தை இல்லாட்டி குழந்தை பிறக்கும். குழந்தைக்கு வியாதி வெக்கை இருந்தா நீங் கும்மா..."

அவன் அவளைப் புதியவள் போல நினைத்துப் பேசி னான். அவள் சிரித்தாள். அப்படியே அவனிடம், "ஆமா என்ன ஒரே போலீஸா இருக்கு?" என்று கேட்டாள்.

"உங்களுக்கு விஷயம் தெரியாதாம்மா?"

"என்ன?"

"மேலே ஆத்தாளோட கிரீடத்துல இருக்கற வைரம் திருடு போயிருச்சும்மா..." அடுத்த நொடியே அதைக் கேட்டு அப்படியே அடிவயிற்றில் கத்தி ஏறியது போல் அதிர்ந்தாள் தேவகி. அது அவளது அகண்ட விழிகளில் நன்றாகவே தெரிந்தது.

"நல்லதுக்கே காலமில்லம்மா... அந்த வைரத்தை வெச்சு தான் ஆத்தாளுக்கே மதிப்பு. இனி எங்க இருந்து கூட்டம் வரப் போகுது?" பாருங்க, இருக்கற ஒரு பொம் மையும் கூட விக்காம கிடக்கறத..."

அவன் புலம்பினான். ஆனால், அவளோ மௌனத் தில் நின்றுவிட்டாள். பிச்சமுத்துவோ போலீஸை உருட் டியபடி அவ்வப்போது அந்த பொம்மையைப் பார்த்துக் கொண்டிருந்தான். இடையில் வயர்லஸ் வழியாக, ருத்ரா அந்த போலீஸ்காரரைத் தொடர்பு கொண்டார்.

"அவனை அப்படியே நம்ம வேனுக்குக் கூட்டிகிட்டு வாங்க. நான் பார்த்துக்கறேன்..." என்ற அவரது பதில் அவன் காதிலும் ஒலித்தது. முகத்தில் உடனேயே பீதி.

"வா... உன்கூட இப்படியெல்லாம் பேசினா நீ வழிக்கு வர மாட்டே..." என்று அவனை இழுத்துச் செல்ல, தேவகி போகிறது என்று அந்த பொம்மையை வாங்கினாள்.

"எவ்வளவுப்பா?"

"பத்து ரூவாம்மா..."

"மண் பொம்மைக்கா இந்த விலை?"

"பத்து ரூவா மதிப்பு கூடவாம்மா உங்க நேர்த்திக் கடன் இருக்கக் கூடாது...? இன்னிக்கெல்லாம் ஒரு காபி அஞ்சு ரூவாம்மா... உங்களுக்குத் தெரியாததா...?"

அவள் ஒரு அலுப்புடன் அதை எடுத்து தனது வயர் கூடையில் வைத்தபோது உள்ளே குடுகுடுவென சப் தம். வைரம்தான் உள்ளுக்குள் உருண்டு புரண்டது.

"என்ன சப்தம்?"

"சப்தமா...? உள்ற ஏதாவது கல்லு துண்டு கிடக்கும். தொப்புள் ஓட்டைல கோரிக்கையை எழுதி வைக்க னுமில்ல. அது வழியா போயிருக்கும். கொண்டாங்க.... எடுத்துத் தரேன்..." அவன் கையை நீட்ட, "இருக்கட்டும் விடு..." என்று வயர் கூடைக்குள் வைத்துக் கொண்டு அப்படியே படி ஏறத் தொடங்கினாள்.

போலீஸ் வேனுக்குள் பிச்சமுத்து!

வேன் சீட்டில் அவனை நன்றாக அமரச் சொல்லிவிட்டு ருத்ரா அவன் எதிரில் ஒரு இஞ்செக்ஷன் சிரிஞ்சை எடுத்தபடி இருந்தார். அவர் செயலில் ஒரு அழுத்த மான நிதானம். அவன் கண்களிலோ பீதி. அருகில் ஒரு கான்ஸ்டபிள் கலர் கலராக சில மருந்து ஸ்ட்ரிப்ஸ்களை எடுத்து ருத்ரா அருகில் வைத்தபடி இருந்தார்.

"கான்ஸ்டபிள்... இந்த மருந்தை இவனுக்கு ஊசி வழியா போட்டா இவன் உண்மையைச் சொல்வான்னு நினைக் கறியா?"

"தெரியலியே சார்... ஆனா இவனுக்கு அண்ணனுங் கல்லாம் இந்த ஊசியால மனசுல இருக்கறதை அப் படியே கொட்டி இருக்காங்க. அதை வெச்சு பார்த்தா எனக்கென்னவோ இவனும் சொல்லிடுவான்னுதான் தோணுது..."

"சொல்லாட்டி இந்த ஆசிட் இஞ்செக்ஷனைப் போடு வோம். வெறி பிடிக்கும். துள்ளிக் குதிச்சு ஓடப் பார்ப் பான். சுட்டுடுவோம். கேட்டா, 'என்கவுண்ட்டர்'ன்னு சொல்லிடுவோம்..."

ருத்ரா சர்வ சல்லிசாகச் சொல்லச் சொல்ல, பிச்சமுத்து வுக்கு கை காலெல்லாம் நடுங்க ஆரம்பித்துவிட்டது.

"சார்ர்..." என்றான் தீனமான குரலில்.

"என்ன சார்....? போலீஸ்காரங்களை என்ன கேனப் பசங்கன்னு நினைக்கறியா நீ..?"

"அப்படி எல்லாம் இல்ல சார்..."

"ரொம்ப தைரியசாலி மாதிரி நடிச்சா, நீ யோக்யன்னு நாங்க நம்பிடுவோமா?"

"சார்! சத்யமா எனக்கு எதுவும் தெரியாது சார்..."

"அதை இந்த ஊசி போட்ட பிறகு சொல்லு பார்ப்போம்..." ருத்ரா அவன் எதிரில் ஊசி நுனியில் மருந்தைப் பீறிட விட்டார். அவன் குடலுக்குள் ஒரு நண்டு புகுந்த மாதிரி ஒரு அவஸ்தை.

பக்கவாட்டில் அப்போது ஒரு போலீஸ்காரர் பின்கதவைத் திறந்து கொண்டு, "சார்! எஸ்.பி சார் லைன்ல வெயிட் பண்றார் சார்..." என்றபடியே செல்போனை நீட்டினார். ருத்ராவும் அவசரமாக வாங்கிக் கொண்டு வேனைவிட்டு இறங்கினார். அந்த சிரிஞ்ஜ் இப்போது கான்ஸ்டபிள் வசம்... அவரோ அவனை முறைத்தபடி இருந்தார். வெளியே ருத்ராவும் எஸ்.பி.யும்.

"என்ன ருத்ரா...? கேஸ் எந்த அளவுல இருக்கு?"

"திருடன் கிடைச்சிட்டான் சார்.... ஆனா ஒத்துக்காம பாடா படுத்திகிட்டு இருக்கான்... நானும் என் வழக்க

மான ரூட்ல போய்கிட்டு இருக்கேன். இப்பதான் இஞ்செக்ஷனைக் கைல எடுத்திருக்கேன்."

"பீ கேர்ஃபுல்... இஞ்செக்ஷனால அவன் உயிருக்கு ஆபத்து ஏற்பட்டா, மனித உரிமைக் குழுவுல இருந்து கேஸ்ஃபைல் பண்ணி, தேவையில்லாம அவங்களுக்குப் பதில் சொல்ல வேண்டி இருக்கும்..."

"அவங்களுக்கெல்லாம் பயந்தா நாம ட்யூட்டியை எப்படி சார் பண்றது? பட்டப்பகல்ல ஒரு மனுஷனுக்குச் சாவை ஏற்படுத்தி, கோயிலை மூட வெச்சு, எவ்வளவு தூரம் பிளான் பண்ணியிருக்காங்க தெரியுமா?"

"ஐநோ... ஐநோ... அதுக்காக கண்டவங்க கேள்வி கேக்கற மாதிரியும் இருக்கக் கூடாது. அந்த திருடன் தான் திருடினான்கறதுக்கு எவிடென்ஸ் இருந்தா, என் கவுண்ட்டர்னு சொல்லிகூட கதையை முடிக்கலாம். கவனம்..."

"நீங்க கவலைப்படாதீங்க சார். நான் பாத்துக்கறேன்..."

என்ற பதிலோடு திரும்பிய ருத்ராவுக்கு அதிர்ச்சி காத்திருந்தது. போலீஸ் வேனில் இருந்து பிச்சமுத்து எகிறிக் குதித்துத் தப்பி ஓட ஆரம்பித்திருந்தான். பக்கத்தில் நின்றிருந்த கான்ஸ்டபிள், அவன் தள்ளி விட்டதில் தலை குப்புறக் கீழே விழுந்திருந்தார்.

"ஏய்..." ருத்ரா படுவேகமாக அவனைத் துரத்த, மற்ற போலீஸ்காரர்களும் அவன் ஓடுவதைப் பார்த்து துப்பாக்கியைத் தூக்க, ருத்ரா அலறினார்.

"நோ... யாரும் சுடாதீங்க... யாரும் சுடாதீங்க... என்று அலறிக் கொண்டே அவனைத் துரத்தினார். கோயிலுக்கு வரும் பாதை ஒரு கட்டத்தில் அப்படியே ஒடிந்து இடப் பக்கம் திரும்பியது. அவனும் திரும்பினான். ஆனால், அவனது துரதிர்ஷ்டம் எதிரில் ஒரு கார் போலீஸை நோக்கி வந்தபடி இருந்தது. அதன் நடு முகத்தில் படு வேகமாக மோதியவன் அப்படியே தூக்கி எறியப்பட்டான். ஆகாயத்தில் இரண்டு மூன்று காரணங்கள்... போவோர், வருவோர் எல்லாம் ஒரு சர்க்கஸ் காட்சியைப் பார்க்கின்ற மாதிரிதான் பார்த்தனர். அவனும் கரணமடித்து அப்படியே சொத்தென்று தரையில் விழுந்தான். விழுந்த வேகத்தில் அவன் தலை சிதறு தேங்காய் போல சிதறித் தெறித்தது.

ருத்ரா அப்படியே ஸ்தம்பித்தார். கைகளைக் குத்திப் பிசைந்து கொண்டார்.

# 7

இந்திய மண்ணில் 'குடும்ப வைரம்' என்கிற பெயரில் மட்டும் ஆயிரக்கணக்கான வைரங்கள் உள்ளன. அவைகளை ஒன்று திரட்டினால் அதன் மதிப்பு லட்சம் பில்லியன் டாலர்களைக் கடக்கும். ஒரே ஒரு முறை வாங்கப்பட்ட அந்த வைரங்கள் செண்டிமெண்டாக அந்தக் குடும்பத்திலேயே அப்படியே தங்கிவிடுகிறது. அதை விற்றால் தங்கள் குடும்பத்திற்கு ஏதாவது ஊறு நேர்ந்து விடும் என்று பயந்தே பலர் அதை விற்பதில்லை. அதை மிகப் பத்திரமாக பாதுகாப்பதாக நினைத்துக்கொண்டு ரகசியமான இடங்களில் வைத்து விடுகின்றனர். அப்படி வைத்தவர்கள் தங்கள் இறுதிக் காலங்களில் பேச்சு மூச்சற்றுப் போகும்போது அவர்களுடன் சேர்ந்து அந்த ரகசியமும் புதைக்கப்பட்டு விடுகிறது. அதுபோல வெளியே தெரியாதபடி ஒளிந்திருக்கும் வைரங்கள் மட்டுமே பல கோடி ரூபாய் மதிப்பு பெறும். அப்படி ஒளிந்து போன வைரங்கள் சில சமயங்களில் சில ஏழை, பாழைகள் கையில் சிக்கி அவர்கள் வாழ்வைத் தலைகீழாகப் புரட்டிப் போட்டுள்ளது!

கூடையில் பிரசாதம் மற்றும் பொம்மையுடன் சன்னதி முகப்பை தேவகி எட்டியபோது, அங்கே ஈ காக்கை இல்லை. படுவேகமாக பிச்சமுத்துவுக்கு ஏற்பட்ட கோரமான முடிவு தெரிந்து அவ்வளவு பேரும் மலையை விட்டுக் கீழே இறங்கிக் கொண்டிருந்தனர். குருக்களுக்குக் கூட ருத்ரா அழைப்பு வைத்திருந்தார்.

"சாமி... திருடனை போலீஸ் பிடிச்சிடிச்சு. அவன் தப்பிச்சு ஓடப் பார்த்திருக்கான். நம்ம ஆத்தா கார் ரூபத்துல வந்து தண்டனை கொடுத்துட்டா. ஆள் அவுட்டாம்! அவன்தான் உங்களைத் தள்ளி விட்டுட்டு உள்ள போய் திருடினவனான்னு தெரியணுமாம். இன்ஸ்பெக்டர் ருத்ரா உங்களை வேகமா வரச் சொன்னார்..." என்று அவருக்குச் சொல்லப்பட்டதன் எதிரொலி குருக்கள் சன்னதி கதவைப் பூட்டிக் கொண்டு திபுதிபுவென கீழே இறங்கிக் கொண்டிருந்தார்.

தேவகி முகத்தில் பலத்த ஏமாற்றம்!

அப்படியே தேங்கி நின்றாள். எல்லோரும் இறங்கிச் சென்றபடியே இருக்கிறார்கள். காவலுக்கு நிற்கும் இரண்டு போலீஸ்காரர்களை மட்டும் கடமை தடுத்து நிறுத்தியது. அவர்களைப் போலவே மலைக்கு மேலேயே தங்கிவிட்ட மாணிக்லாலும், ஸ்ரீதரனும் கூட அப்போது கீழிருந்து படி வழியாக மேலே ஏறி மேல்தளத்தில் உள்ள மண்டபம் நோக்கி வந்தபடியே இருந்தனர்.

போலீஸ்காரர்கள் இருவரும் அவர்களையும், தயங்கி நிற்கும் தேவகியையும் பார்த்து ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டனர்.

தேவகி முகத்தில் ஏமாற்றம். வீட்டை விட்டுக் கிளம்பியதில் இருந்தே தடைகள். அவள் கணவன் சங்கரநாராயணன் நம்பிக்கை இல்லாமல் பேசினான். லட்சம் முறை இந்திராட்சி நமஹ என்று எழுதியதற்கு நிச்சயம் ஒரு நல்ல பலன் கிடைக்கும் என்று நம்பியிருந்த அவளது நம்பிக்கையும் அப்படியே ஆட்டம் காண ஆரம்பித்தது.

அப்போது எதிரில் மாணிக்லால். அவரது பார்வை அவளை ஊடுருவியது. முகத்தில் சன்னமாய் சிரிப்பு வந்து ஒட்டிக் கொண்டது. ஸ்ரீதரன் மட்டும் அதில் நிறைய பொருள் இருப்பதாக நினைத்துக் கொண்டான்.

அவளுக்கு மாணிக்லாலைப் பார்த்தபோது, யாரோ ஒரு மகானைப் பார்க்கிற மாதிரி இருந்தது. தன்னையுமறியா மல் பிரசாதக் கூடையைக் கீழே வைத்துவிட்டு கைக ளைக் கூப்பி நமஸ்கரித்தாள்.

"உம்... அந்தக் கூடையைக் கீழே வைக்காதே... அதை முதல்ல கைல எடு..." என்றார் படுவேகமாக. அவளும் எடுத்தாள்.

"இந்தக் கூடையை எங்கேயும் வைக்காதேம்மா... உன் வீட்டுக்குப் போய் பூஜை அறைல வை..."

"ஏன் அப்படி சொல்றீங்க?" அவள் வாய் திறந்தாள்.

"பிரசாதக் கூடையைக் கண்ட இடத்துல வைக்கக் கூடாது. அது என்ன பொம்மை?"

"அம்பாளுக்கு நேர்த்தி கடன் செலுத்த..."

"ஓ.. உனக்குக் குழந்தை இல்லையா?"

"இருக்கா... ஆனா இருந்தும் இல்லாதவளா..." அவள் கண்களில் கண்ணீர் துளிர்ந்துவிட்டது.

"என்ன? குழந்தைக்கு ஏதாவது பிரச்சனையா?"

"ஆமாம். அவளுக்கு சூரியனே ஆகாது.... என்னன்னே தெரியாத ஒரு அலர்ஜி வியாதி வந்திருக்கு. பகல்ல தூங்கி இரவுல வாழற வாழ்க்கை அவளுடையது. லட் சத்துல ஒருத்தருக்கு இப்படி இருக்குமாம். டாக்டர்கள் சொன்னாங்க. உடம்புல எதிர்ப்பு சக்தி வளர வளர கொஞ்சம் கொஞ்சமாத்தான் சரியாகுமாம். உடம்புல சில சுரப்பிகள் செயல்படலையாம். அது செயல்படத் தொடங்கினாலும் சரியாயிடும்னாங்க. நானோ டாக்டர் களை நம்பறதுல பிரயோஜனம் இல்லைங்கற முடிவுக்கு வந்துட்டேன். உங்களைப் போல ஒருத்தர்தான் இந்த இந்திராட்சியை அடையாளம் காட்டினார். இவ பேரை லட்சம் தடவை எழுதினேன். ஒரு தவம் மாதிரி செஞ் சேன். நேத்துதான் எழுதி முடிச்சேன். இன்னிக்கு அந்த நாமாவளி நோட்டோட தரிசிக்க வந்தேன். ஆனா இங்க வந்தா வைரம் காணல... அது இதுங்கறாங்க... ஒரே ஏமாற்றமா இருக்கு..."

என்று மெல்லிய குரலில் சோகத்தைக் குழைத்தாள் தேவகி. மாணிக்லால் பார்வை மீண்டும் ஒருமுறை அந் தப் பிரசாதக் கூடை மேல் சென்றது. திரும்பவும் ஒரு சிரிப்பு சிரித்தவர், "எனக்கு இப்ப எல்லாம் விளங்கி டிச்சு... நான் ரொம்ப கொடுத்து வைச்சவன்..." என்றார்.

"நீங்க என்ன சொல்றீங்க?"

"நீ இந்தப் பிரசாதக் கூடையோட வீட்டுக்குப் போம்மா. இந்தப் பொம்மையை உன் பொண்ணு கைல கொடு. இன்னிக்கு ராத்திரி அவ இதைத் தன் பக்கத்துலயே வெச்சு படுத்துக்கட்டும். நாளைக்கு இதோட வா... அம் பாளோட திருவடில இந்தப் பொம்மையைச் சேர். உன் பொண்ணுக்குக் குணமாகறது மட்டுமல்ல... பல உண்

மைகளை இந்த உலகம் தெரிஞ்சுக்கும். குறிப்பா, நான் எதைத் தெரிஞ்சுக்கவும், எதை எதிர்பார்த்தும் மும் பைல இருந்து வந்தேனோ, அதுவும் நடந்துடும்..." என் றார்.

"இன்னிக்குத் தடைபட்டுடுச்சே..." அவள் மனது அதி லேயே போய் நின்றது.

"'இது தடை இல்லம்மா... இதுதான் உனக்கான விடை. நீ போ... நாளைக்கு வா. உனக்குப் புரியும்..." அழுத்தமாய் அவர் சொல்ல, அவளும் கூடையுடன் கீழ் இறங்க ஆரம் பித்தாள்.

ஸ்ரீதரன் மாணிக்லாலை ஒரு அர்த்தமுள்ள பார்வை பார்த்தான்.

"என்ன ஸ்ரீதரா?"

"என்னென்னவோ சொல்றீங்க.... மேலையும் கீழையும் ஏறி இறங்கிகிட்டு இருக்கோம். நாளைக்கு இவங்கள வர வேற சொல்லியிருக்கீங்க... உங்க திருஷ்டியில ஏதாவது தெரிஞ்சுதா ஜீ..?"

"ஆமாம்... இங்க இருக்கற தேவசக்தியும் வைரசக்தி யும் தன்னைச் சுத்தியுள்ள மனித சக்தியை நல்லாவே ஆட்டி. வெச்சுக்கிட்டு இருக்கு... தொலைதூரத்துல இருக்கற என்னையும் கூட அது விடலை. ஒரு உண் மையை உனக்கு நான் சொல்றேன். இந்த வைரத்தைப் பாக்கறது, இதோட சக்தியைச் சோதிக்கறது மட்டும் என் நோக்கமில்ல. முடிஞ்சா இதை என் வசப்படுத்திக்க கூட நான் ஆசைப் பட்டேன். நீ என்னை சென்னை விமான நிலையத்துல பார்த்தப்போ நான் ஒரு வியாபாரியா, வித்

தைக்காரனா மட்டும்தான் இருந்தேன். ஆனா, இந்த மண்ணை மிதிச்சதுல இருந்தே என்கிட்ட பெரிய மாற்றம். நான் என் வித்தையை இங்க கொஞ்சம்கூட பயன்படுத்தல. அதேசமயம் ஒவ்வொரு சிறு விஷயத்துக்கும் எனக்குக் காரணம் புரிஞ்சிடுச்சு..."

"ஜீ... அது என்ன காரணம்?"

"உனக்கு சொன்னா புரியுமாங்கறது எனக்குத் தெரியலை. ஒண்ணு மட்டும் உறுதி. நம்மைவிட காலம் ரொம்ப பெருசு... இயற்கை அதைவிட பெருசு.... நம்மால அதை, எந்த நிலையிலையும் புரிஞ்சுக்கவோ, இல்லை ஆட்டி வைக்கவோ முடியாது..." என்ற மாணிக்லால் மலைத் தளத்தின் ஒருமுனைக்குச் சென்று கீழே பார்த்தார். பரந்து விரிந்து கிடக்கும் வயற் காடுகள்.... காய்ந்து கிடக்கும் ஏரி, கிணறுகள்... அந்த கல்யாணி மலையைச் சுற்றிலும் அதுதான் காட்சி.

வானத்தையும் பார்த்தார்!

சூரியன் தெரியாதபடி மேகமூட்டம். மழை வருவது போலவும்... வராதது போலவும் இருவித நிலைகளில்...

"ஸ்ரீதரா... நாளைக்கு இதே நேரம் இந்த மொத்த ஏரி நிரம்பிடும். கண்ணுக்கு எட்டின தூரம் ஜலக்காடுதான். சமுத்திரத்துல இருந்து ஒரு பெரிய நீராழி புயல்ங்ற பேர்ல வானம் ஏறிடத் தொடங்கிடிச்சு. முப்பது வருஷத்துக்கு ஒருமுறை இப்படி ஒரு பிரளய மழை பெய்யும். மூன்று நாளைக்கு அந்த மழை நிற்காது. அந்தப் பெண்ணால் கூட மூன்று நாளைக்கு அவ விரும்பினாலும் இந்த மலைக்கு வரமுடியாது. நேற்று காலைல இருந்து

இன்னும் மூன்று நாளைக்கு அதாவது கிட்டத்தட்ட நாலு நாளைக்கு கோள்சாரப்படி கேது, சுக்ரன், சனிங் கற மூன்று கிரகங்களும் சமஅளவு சக்தியோடு ஒண்ணு சேருது... அப்படி சேர்ந்தா மழை... மழைன்னா சாதாரண மழை இல்ல... பெரிய புயல் மழை ஏற்பட்டே தீரணும். சூரியனும் அதனால இந்த பூமியில வராம போயிடும். இப்படி ஒரு இடைவெளியை இந்த மலை தெய்வமான இந்திராட்சியும் தனக்காகவும் பயன்படுத்திக்க சித்தமா யிட்டா..."

"என்ன சொல்றீங்கன்னே புரியலஜீ..."

"புரியாதுதான்.... ஒண்ணு மட்டும் நல்லா தெரிஞ் சுக்கோ. சூரியன் வர்ற நாள்ள... அதாவது அவன் ஒளி இந்தக் கோயிலை தீண்டற நாள்ல இங்கே வைரம் இருந்தே ஆகணும். அதோட ஒளி பட்டு வைரமும் பதில் ஒளியைப் பிரகாசிக்கச் செய்யணும். அதாவது தினம் சூரிய சுக்ர சேர்க்கை இங்க நிகழணும். இந்த நாலு நாளைக்கு சூரியன் வரப் போறதில்லை. அதாவது மழை காரணமாக அவனை கரிய மேகமான வடிவத்துல சனி மறைச்சுடுவான். அப்ப கீழே சில நாடகம் நடந்தாக ணும்..."

"நாடகம்னா?" இப்படிக் கேட்டது ஸ்ரீதரன் இல்லை... அங்கே அவரை நோக்கி வந்தபடி இருந்த ருத்ரா.

மாணிக்லாலும் புன்னகையோடு எதிர்கொண்டார். கூடவே குருக்கள்.

"என்ன இன்ஸ்பெக்டர்... என் பேச்சு உங்க காதுல விழுந்துச்சோ?"

"ஆமாம் சேட்ஜீ... நீங்க சொன்ன மாதிரியேதான் விஷயங்களும் போய்க்கிட்டு இருக்கு... நாங்க சந்தேகப்பட்ட நபர்தான் உண்மையான திருடன். ஆனா இப்ப அவன் உயிரோட இல்லை. அவனும் ரொம்ப புத்திசாலிதான்... இருந்தும் விதி அவனைவிட புத்திசாலியா இருந்து அவன் கதையை முடிச்சிடிச்சு..."

"தெரியும் இன்ஸ்பெக்டர்... நாடகத்துல அவன் மரணமொரு பகுதி..."

"அவனை நீங்களும் சரியாவே யூகிச்சீங்க... ஆனா உங்க சக்தியைப் பயன்படுத்தி அவனை எங்களுக்கு அடையாளம் காட்டியிருந்தா, இந்த சாவைத் தடுத்திருப்போம். வைரம் எங்க போச்சுன்னு தெரிஞ்சிக்க முடியும்..."

"நீங்க என்ன சொல்றீங்க...? நான் உங்களுக்கு உதவி செய்யலைன்னா?"

"நிச்சயமா..."

"தப்பு இன்ஸ்பெக்டர்... இந்த மலைல நான் எந்த நிலைலயும் என் ஜாலவித்தையையோ, மற்ற எந்த சக்தியையோ காட்ட விரும்பலை. தெய்வ சன்னதிக்குப் போகும் போது நான் பக்தன் மட்டும்தான். கோயிலுக்குப் போறவங்க எப்படி நடந்துக்கணும்னு விதிகள் இருக்கு... கோயில்ல கடவுளை விட யாரும் பெரியவங்க கிடையாது. யாரையும் இங்க பெருசா நினைச்சு விழுந்து கும்பிடக் கூடாது. அற்ப சக்திகளைப் பயன்படுத்தி எந்த சித்து விளையாட்டும் காட்டக்கூடாது..."

"இதெல்லாம் நீங்க என்னைச் சமாளிக்கறதுக்காக சொல்லப்படுறவை.... சட்டத்தை நிர்வகிக்கறவனா நான்

உங்களைப் பார்க்கும்போது, உங்க மேல எனக்குக் கோபம் தான் வருது..."

"அப்ப தாராளமா நீங்க உங்க கடமையைச் செய்யுங்க..."

"என் கடமை ஒண்ணுதான். உண்மை உங்களுக்கு ஏதோ ஒரு விதத்துல தெரிஞ்சிருக்கு. ஆனா நீங்க அதைச் சொல்ல மாட்டேங்கறீங்க. உங்களைச் சொல்ல வைக்கணும்..."

"சொல்றேன்... இன்னும் மூணு நாள் பொறுத்துக்குங்க."

"ஏன்? அதுக்குள்ள அந்த வைரத்தை இந்த மலையை விட்டுக் கடத்தி ரொம்ப தூரம் கொண்டு போய்ட திட்டம் போட்டிருக்கீங்களா?"

"இன்ஸ்பெக்டர்..."

"இப்படி கேக்காம இருக்க என்னால முடியாது சேட்ஜீ... உங்களைச் சந்தேகப்படாமலும் என்னால இருக்க முடி யாது..."

"உங்க எண்ணம் எனக்குப் புரியுது... கவலைப்படாதீங்க. அந்த வைரம் உங்களை, என்னை, ஏன் இந்தப் பூமி யில இருக்கற உயிரினங்கள் எல்லாத்தையும் விட ஆற் றல் அதிகம் உடையது. அது இந்த இந்திராட்சியை விட்டு எங்கேயும் போகாது. அப்படிப் போறதா இருந்தா அதுக்கு ஒரு சரியான காரணமும் இருக்கும்..."

"இதெல்லாம் உங்களைப் போல ஆன்மிகப் பார்வை பாக்கறவங்க சொல்ற ஒரு விதமான சமாதானம். அறிவு பூர்வமா யோசிக்கறவங்களால இதை எல்லாம் ஒத்துக்க

முடியாது. என் வரைல அந்த வைரம் ஒரு காஸ்ட்லியான பொருள். அதுக்குத் தனியா ஒரு சக்தி இருக்குங்கற தெல்லாம் கற்பனை... கட்டுக்கதை...!"

"சரி.... அப்படியே இருக்கட்டும். உங்களுக்கு என்ன செய்யணும்னு தோணுதோ அதை நீங்க செய்துக்க லாம்."

"உங்களைக் கைது செய்யறதுதான் இப்ப நான் செய்ய வேண்டியது..."

"தாராளமா... நாலு நாள் எங்க தங்கறதுன்னு ஒரு சிறு குழப்பமும் தேடலும் எனக்கு இருந்தது. இப்ப உங்க ளால அது நீங்கிடிச்சு..."

"என்ன, விளையாடுறீங்களா? அது என்ன நாலு நாள்?"

"சாரி.... மூணு நாள்தான்! அதுக்கப்புறம்தான் வைரம் கிடைச்சிடுமே..."

"அது என்ன மூணு நாள் கணக்கு? அப்ப கிடைக்கற வைரம், இப்ப கிடைக்கக் கூடாதா"

"அதுக்கு சில கடமைகள் இருக்கு... சிலரோட பக்திக்கு அது பதில் சொல்ல வேண்டி இருக்குதே..."

"விட்டா அந்த வைரம் பேசும்... டான்ஸ் ஆடும்... அவ்வ ளவு ஏன், அதுதான் கடவுள்னு கூட சொல்வீங்க போல இருக்கு..."

"ஒரு வகைல அதுதான் உண்மை. உங்களை என்னை, இந்த உலகத்துல இருக்கற எல்லாரையும் விட அது

மேலானது, நாம அவ்வளவு பேரும் ஒரு நாள் இல்லை ஒருநாள் சாம்பலாகப் போறோம். ஆனா அது சாம்ப லாகாம, கரியில இருந்து ஒளியோட உயிர்த்தெழுந்த ஒண்ணு.... இன்னும் லட்ச வருஷம் போனாலும் அது தன்னிலை மாறாம அப்படியே இருக்கும். நம்மால அதி கபட்சம் இன்னும் ஐம்பது வருஷம், இப்ப இருக்கற மாதி ரியே இதே உடம்போட இதுல எந்த மாற்றமும் இல்லாம இருக்க முடியுமா?"

"குழப்பறீங்களே சாமி... எப்படியோ, பேச கத்துகிட் டிருக்கீங்க.... எல்லா கேள்விகளுக்கும் எகணைக்கு மொகணை ஒரு பதில் ரெடியா இருக்கு உங்ககிட்ட... ஆனா ஒண்ணு! இதனால எல்லாம் என் மனசு சமாதா னமாயிடாது. எந்தக் காலத்துலையும் கல்லும் மண்ணும் தனி... மனுஷன் தனி... மனுஷன் மதிக்கிறதாலதான் அதுக்கு விலை, அவன் தூக்கி எறிஞ்சுட்டா அது வெறும் கல்லுதான்... தெரிஞ்சுக்குங்க..."

"அது தெரியும். ஆனா தூக்கி எறியலையே, தூக்கி எறிய முடியலையே... ஏன்?"

"எல்லாம் ஆசைதான்... பேராசைதான்..."

"கரெக்ட் அந்த ஆசைக்குக் காரணம் எதுன்னு தெரி யுமா?"

"எது?"

"ஆசைங்கற உணர்ச்சியை உருவாக்கித் தூண்டி விட் றதே வைரம்தான். உங்ககிட்ட ஒரு வைரம் இருந்தா, அதோட சக்திக்குத் தகுந்த மாதிரிதான் நீங்க யோசிப் பீங்க... பேசுவீங்க... நடந்துக்குவீங்க..."

"போதும் சேட்... அப்ப அந்த வைரத்துகிட்டயே இருந் தவர் இந்த குருக்கள். இவர் ஏன் ஆசைப்பட்டு அதை அபகரிக்க முயற்சி செய்யலை. தினம் நூறு நூறு பேர் வந்து திருடலை?"

"இவங்கல்லாம் ஆசைப்படலைன்னு உங்களுக்குத் தெரியுமா?"

"அப்போ?"

"அது தன் சக்தியை எல்லார் கிட்டையும்தான் காட் டியிருக்கு... சூரிய சக்தி மாதிரி, சந்திர சக்தி மாதிரி அது பொது... ஆனா நம்ம உடம்புல இருக்கற மற்ற சக்திகளோட சேர்ந்து, அந்தச் சக்தி என்னவாகுதுங் கறது ரொம்ப முக்கியம். உச்சி வெயில் வயசானவங் களை ரொம்ப பாதிக்கும். ஆனா வாலிப வயசுள்ளவங்க அதைச் சட்டையே செய்யாம வேலையைப் பார்த்து கிட்டு இருப்பாங்க. ஊர்ல பெய்யற ஒரு மழை சிலருக்கு சளி பிடிக்க காரணமாகுது. சிலருக்கு காய்ச்சல், சிலரோ அப்பத்தான் ரொம்ப ஏகாந்தமா ஜில்லுன்னு இருக்க றதா ஃபீல் பண்ணுவாங்க. உடம்பு வாகுன்னும் அதுக் குள்ள இருக்கற மத்த விஷயங்கன்னும் ஒரு கணக்கு இருக்குல்ல?"

மாணிக்லால் சொன்னது ருத்ராவை எரிச்சலில்தான் பிடித்துத் தள்ளியது.

"போதும் சேட்... இனி உங்க கூட நான் விவாதம் செய்யத் தயாரா இல்லை. அந்த வைரம் எங்க இருக்கு? சொல்வி டுங்க..."

"ஒரு சராசரி மனிதனா எனக்கு எதுவும் தெரியாது. ஆனா ஒரு வித்தைக்காரனா தெரியும். வித்தைக்கா ரனா இங்க வித்தையைப் பயன்படுத்த விரும்பலை..."

"உங்களைச் சொல்ல வச்சுட்டா..."

"தாராளமா என்ன செய்யணுமோ செய்யுங்க. ஏன்னா நடக்கற நாடகத்துல அதுதான் இங்க ரோல். உங்க ரோலை நீங்க செய்யுங்க. என் ரோலை நான் செய்ய றேன். எதுவா இருந்தாலும் மூணு நாள்... மூணே நாள்!"

"அப்புறம்?"

"எதுக்கும் அவசியம் இருக்காது. அந்த வைரம் தானா கிடைச்சுடும். அப்புறமா இன்னும் பல உண்மைகள் தெரிய வரும். ஒவ்வொரு அறுபது வருஷத்துக்கு ஒரு முறை இந்த கோயில்ல வைரம் காணாம போய் திரும்ப தானே கிடைச்சிருக்கு..."

"அப்படியா" ருத்ரா அதைக் கேட்டு அதிர்ந்தவர், கான்ஸ்டபிள்கள் இருவரை அழைத்து, மாணிக்லா லையும் ஸ்ரீதரனையும் பார்த்துக்கொள்ளச் சொல்லி விட்டு விறுவிறுவென்று கர்ப்பக்கிரகம் நோக்கி நடந் தார். குருக்கள் திரைச்சீலையை விலக்கி உச்சிகால பூஜைக்கு ரெடியாகிக் கொண்டிருந்தார். ருத்ரா அவரை வெளியே அழைத்தார்.

"சாமி..."

"இதோ வந்துட்டேன்..."

"உங்ககிட்ட சில விஷயங்கள் விசாரிக்கணும்..."

"இன்னுமா?"

"ஆமாம் இப்ப காணாம போயிருக்கற வைரம் இதுக்கு முந்தியும் காணாம போயிருக்கா?"

"அது... அது.... எதுக்குக் கேக்கறீங்க?"

"கேட்ட கேள்விக்கு பதில் சொல்லுங்க..."

"ஆமாம். சரியா அறுபது வருஷம் முந்தி இதே மாதிரி ஒரு பார்த்திப வருஷத்துல, இதே மாசத்துல இதே மாதிரி ஒரு நட்சத்திரத்துல காணாம போயிருக்கு..."

"அப்புறம் எப்படி கிடைச்சுது?"

"அதைத் திருடியவன் வைரத்தோட தப்பி ஓடும்போது, கீழே சில நூறு மீட்டர் தொலைவில இருக்கற கௌசிக நதில அதைத் தவற விட்டுட்டான் போல இருக்கு. மூணு நாள் கழிச்சு நாலாவது நாள் அந்த ஆத்துல இருந்து ஜலம் கொண்டு வந்து அம்பாளுக்கு அபிஷேகம் பண் ணினப்போ, அந்த ஜலத்துல இருந்து வைரம் புரண்டு அம்பாள் காலடில விழுந்தது. அப்புறமா அதை எடுத்து தங்க கிரீடத்துல பதிச்சதா என் அப்பா சொல்லியிருந் தார்..."

"மைகாட்... அதுக்கு முந்தியும் இதே மாதிரி நடந்தி ருக்கா?"

"ஆமா.... ஆனா அது எப்படின்னு தெளிவா தெரியல. ஒண்ணு மட்டும் தெரியும். வைரம்கறது சிவனோட நேத் ரம். அதாவது நெற்றிக்கண் மாதிரி. அது அப்பப்ப ஓடுற தீர்த்தத்துல, இல்ல தேங்கிக் கிடக்கற ஜலத்துல கிடக்

கணும். அப்படிக் கிடந்தா அதுக்குச் சக்தி அதிகமாகு மாம்னு கேள்விப்பட்டிருக்கேன்..."

"குருக்கள் சொன்ன அவ்வளவும் ருத்ராவை அப்படியே புரட்டிப் போட்டு விட்டது. வெளியே வந்தார். முகத்தில் மாணிக்லால் சொன்னதும், குருக்கள் சொன்னதும் முட் டிக் கொண்டது. இரண்டுக்கும் ஒரு ஒத்துமை இருக்கற மாதிரி தோன்றியது.

வானிலும் மழைத்தூறல் ஆரம்பமாகிவிட்டது.

"ஜீ... நீங்க சொன்ன மாதிரியே மழை வர ஆரம்பிச்சி டிச்சு..." என்றான் ஸ்ரீதரன். கூடவே இருந்த கான்ஸ்டபிள் கள் அதைக் கேட்டு சிரித்தனர்.

"ஏன் சிரிக்கறீங்க?" என்ற ஸ்ரீதரனை பதிலுக்குப் பார்த்த வர்கள், "இந்த மண்ணுக்கு மழை எல்லாம் வராது. வந் தாலும் சும்மா கொஞ்சம் பேஞ்சு சூட்டைத்தான் கிளப்பி விடும். இது மழை செத்த பூமி..." என்று எரிந்து விழுந்த னர்.

"மூணு நாள் கழிச்சு இப்படி பேசறீங்களான்னு பார்ப் போம்..." என்ற ஸ்ரீதரன், மாணிக்லாலை நம்பிக்கையுடன் பார்த்தான்.

மாணிக்லால் முகத்தில் ஒரு மோனத்தவம்!

# 8

வைரம் குறித்து எவ்வளவோ ஆராய்ச்சிகள்! எல்லாமே புதிர் நிரம்பியவை. எந்தப் புதிரையும் விடுவிக்க முடியவில்லை. அது சிலருக்குத் தான் ஒத்து வரும், சிலருக்கு சரிப்பட்டு வராது என் பதெல்லாம் கட்டுக்கதை என்பவர்கள் கூட வைரத் தைத் தைரியமாக வாங்கி விடுவதில்லை. இன்றும் பலர் வைரத்தை வாங்கி வீட்டில் வைத்துச் சோதித்துப் பார்த் துவிட்டு, பிறகுதான் பணம் தருகிறார்கள். பல கடைக் காரர்களும் இதற்கு அனுமதி தருகிறார்கள்.

வைரம் எப்பொழுதுமே ஒரு புதிர்தான்!

வீட்டுக்கு வெளியிலேயே வந்து விளையாடிக் கொண் டிருந்தாள் ப்ரியா. வானத்தையே அடைத்துக் கொண்டு மழை பெய்வதால் சூரியனுடைய தாக்குதல் இல்லை. எனவே அவளுக்கு மகிழ்ச்சியாக இருந்தது. அவள் விளையாட்டில் அந்தப் பொம்மைக்குப் பிரதான இடம் இருந்தது.

"உடைச்சிடாம இதை வெச்சு விளையாடணும். உன் வரைல இதுதான் இந்திராட்சி...." என்று தேவகி சொன் னதை மனதில் கொண்டு தன் விளையாட்டில் அந் தப் பொம்மையையே அம்பாளாக்கி விட்டாள் ப்ரியா. அதற்கு மஞ்சள் குங்குமம் வைத்து குட்டி பாவாடை தைத்துப் போட்டு, பூஜை செய்வது போல் எல் லாம் விளையாடினாள். சங்கரநாராயணனும் கவனித் தான். குழந்தை மகிழ்ச்சியாக விளையாடுவதால் மற்ற

விஷயங்கள் அவனுக்குப் பெரிதாகத் தெரியவில்லை. விளையாட்டு மும்முரத்தில் அவள் மாத்திரை கூட சரியாகச் சாப்பிடவில்லை.

வானமோ அடைத்துக் கொண்டு கொட்டியது.

மாணிக்லாலின் கணிப்பு வீண் போகவில்லை.

லாக் - அப்பில் அமர்ந்திருந்தாலும் ஸ்டேஷனில் ரேடியோ நியூஸ் கேட்டது அவர் காதில் விழுந்தது.

ருத்ராவிடமும் மாணிக்லால் மேல் காட்டம் குறைய ஆரம்பித்து விட்டது. அவர் சொன்னபடி மழை பெய்து திரும்பின பக்கமெல்லாம் தண்ணீர் காடாகி வருவதால் ஒரு அபிமானம் கூட ஏற்பட்டு விட்டது.

லாக் - அப் அருகே சென்ற ருத்ரா, "சேட்ஜீ" என்று ஸ்நேகமாகக் கூப்பிட்டார்.

"என்ன இன்ஸ்பெக்டர்..."

"உங்களை இப்படி உள்ள போட்டதுக்காக நான் ரொம்ப வருத்தப்பட்றேன்."

"நான் வருத்தமே படலை. எனக்கு இது எவ்வளவு பாதுகாப்பான இடம் தெரியுமா?"

"நான் இப்ப உங்களை ஒண்ணு கேக்க விரும்பறேன்..."

"கேளுங்க..."

"இப்படி பெரிய மழை பெய்யுங்கறது எப்படி உங்களுக்குத் தெரியும்?"

"ஜோதிடம் கத்துக்குங்க... உங்களாலையும் சொல்ல முடியும். எல்லாம் கோள்களை, அதோட சஞ்சாரங்களை வெச்சு சொல்ற விஷயம்தான்..."

"அப்ப இதுல எந்த மாயமந்திரமும் இல்லையா?"

"சேச்சே... புரிஞ்சா அது விஞ்ஞானம். புரியலைன்னா தான் அது மாயம், மந்திரம்..."

"உங்க பேச்சை நான் கணக்குல எடுத்துக்கறேன். இன்னியோட மூணு நாள் ஆயிருச்சு. நாளைக்கு உங்க வாக்குப்படி அந்த வைரம் கிடைக்கணும். கிடைச்சுடுமா?"

"நிச்சயமா... எப்ப இதெல்லாம் பிசகில்லாம நடக்குதோ, அப்ப அதுவும் நடந்துதான் தீரும்..."

"அப்படி நடந்தாதான் உங்களுக்கு விடுதலை..." ருத்ரா சொன்னதில் கொஞ்சம் சந்தேகம் தொனித்தது.

மாணிக்லால் சிரித்தார்.

மழை முதல் நாள் இரவே நின்றுவிட்டது. விடிந்த போது வானம் மூடியிருந்தது. ஆனால் துளிகூட தூறல் இல்லை.

தேவகி வெளியே வந்து எட்டிப் பார்த்துவிட்டு 'இனியும் பொறுக்கக் கூடாது' என்பது போல கல்யாணிமலைக்குக் கிளம்பத் தொடங்கினாள். ப்ரியா ஓடி வந்து தானும் வருகிறேன் என்றாள். அவளிடம் நல்ல துடிப்பு.

எல்லா குழந்தைகளையும் போலவே ஒரு சுறுசுறுப்பு. உடம்பிலும் எந்தவிதமான அரிப்போ, தோல் உரிதலோ இல்லை. சாதாரணமாக பால் வாசனையே பிடிக்காமல் அதை வேண்டாம் என்பவள், அன்று கேட்டு வாங்கிக் குடித்து தேவகிக்கு ஆச்சரியமளித்திருந்தாள்.

தேவகிக்கும் மகளோடு கல்யாணி மலைக்குப் போவது ஒரு வகையில் நல்லது போல தோன்றியது. பொம்மை பிரார்த்தனையை அவள் கையாலேயே செய்வது இன்னமும் விஷேசம் என்று கருதியவள், அவளையும் அழைத்துக் கொண்டாள்.

மலை அடிவாரத்தை அடைந்த போது கூட்டமே இல்லை. குருக்கள் கூட அப்போதுதான் மேலே ஏறிக் கொண்டிருந்தார். தேவகி வரவும், "வாம்மா.... மூணு நாள் மழைக்கு ஈ, காக்கா மலைப் பக்கமே வரலை. வைரம் திருடு போனதால் அம்பாளுக்கும் மதிப்பு போயிடுத்து போல..." என்றபடியே ஏறினார். தேவகியும் ப்ரியாவோடு ஏறினாள்.

அந்தப் பிஞ்சு படிகளில் துள்ளிக் குதித்து ஓடியது.

"அம்மா... நான் முன்ன போறேன்" என்று ஓட்டமெடுத்தது.

"பார்த்து ப்ரியா... விழுந்துடப் போற..." என்று கத்தினாள் தேவகி. மூன்று நாள் மழையில் மலைச் சுனை பெருகி வழிந்து படியில் தண்ணீர் ஓடியபடி இருந்தது. ப்ரியா அந்த தண்ணீரில் போய் தைய்யத்தக்க என்று குதித்தாள். அதை மொண்டு மொண்டும் குடித்தாள்.

பின்னாலேயே வந்த தேவகி பதறிவிட்டாள்.

"அந்த தண்ணிய குடிக்காதே... காய்ச்சல் வரும்....." என்றாள். குருக்கள் திருத்தினார்.

"பயப்படாதேம்மா... அது மலைச்சுனை. விஷேச சக்தி உள்ளது. காணாம போன வைரத்தைத் திருட்டுப் பய அதுல போட்டு வெச்சுருந்ததெல்லாம் போலீசுக்குப் பின்னாலதான் தெரியும். அது இப்ப சாதாரண தண்ணி இல்ல. சுக்ரனோட சக்தி இப்ப அதுல இருக்கு..." என்ற குருக்கள் குனிந்து அந்த தண்ணீரை எடுத்து தலையில் தெளித்துக் கொண்டே கடந்தார்.

உச்சியை எட்டி, சுற்றி ஒரு பார்வை பார்த்த போது, திரும்பின பக்கமெல்லாம் ஒரே தண்ணீர் காடு. இயற்கை நினைத்தால் எதுவும் நடக்கும் என்பதற்கு சான்றாக......

லட்சம் பேர் லட்சம் மோட்டார் போட்டு இறைத்தாலும் நிரப்ப முடியாத ஏரி, மூன்று நாளில் பெருகி வழிந்து பாய்ந்திருந்தது.

மெல்ல வானிலும் மேகம் விலகியபடி இருக்க சூரியக் கதிர் விழும் போல தெரிந்தது. தேவகிக்கு அந்தக் காட்சி பயமளித்தது.

"ஐய்யய்யோ... மேகம் விலகி சூரிய உதயம் ஆயிட்டா, என் பொண்ணுக்கு ஆபத்து. சீக்கிரம் பூஜை செய்யுங்க சாமி..." என்று அந்தப் பொம்மை உள்ள பிரசாதக் கூடையுடன் சன்னதிக்குள் புகுந்தாள். குருக்களும் மளமளவென்று கதவைத் திறந்து, திரையை விலக்கி, விளக்கை ஏற்றி செயல்படத் தொடங்கிவிட்டார்.

"ஏம்மா... ஏன் இவ்வளவு பதட்டப்பட்றே?"

"ஆமாம் சாமி... என் பொண்ணுக்கு சூரிய ஒளி பட்டா உடம்பு தோல் உரியும். தண்ணி வடியும். அதான் பயப்பட் றேன்..." என்றாள்.

"இங்க வந்துட்டேல்ல. எல்லாத்தையும் இவகிட்ட விட் டுடு. இவ பார்த்துப்பா" என்றவர், நேர்த்தி பொம்மையை எடுத்து அம்பாளின் காலடியில் வைத்தார். பின் தேங் காய் பழத்தை எடுத்து வைத்து, தேங்காயை உடைக்க இரும்புத் துண்டை தேடினார்.

அது பக்கவாட்டில் இருக்கவும், எடுத்து உடைக் கத் தொடங்க, அது சட்டென்று கையில் இருந்து நழுவி பொத்தென்று கீழே அம்பாள் காலடியில் உள்ள பொம்மை மேல் விழ, அடுத்த நொடியே பொம்மை நொறுங்கியது.

காத்திருந்தது போல வெளியே மேகமும் விலகிப் பிரிய, சூரியக் கதிர் முன்வாசல் வழியாக நேரே முதலில் எப் பொழுதும் காலில் படுவது போல் காலில் பட, உடைந்த பொம்மைக்குள் இருந்த வைரம் கண்ணைப் பறிப்பது போல ஜொலிக்க ஆரம்பித்தது.

குருக்களுக்கு அதைப் பார்த்த நொடியே மற்ற எல்லாமே விளங்கிவிட்டது.

"அம்மா தாயே.... உன் பொருளைக் திரும்பக் கொண்டு வந்து சேர்த்துட்டியா? இதுக்காகத்தான் வானத்தையும் நாலு நாளா மூடி வெச்சிருந்தையா?" என்று கேட்டு உணர்ச்சி மிகுதியோடு கைகளைக் கூப்பினார்.

தேவகி திருதிருவென விழித்தாள். குழந்தை ப்ரியாவோ துளியும் பயமின்றி சூரிய ஒளி மேலே பட நின்றாள். அவ

ளிடம் எந்த எதிர்ப்பான செயலும் இல்லை. தேவகியின் கண்ணில் இருந்து ஆனந்தக் கண்ணீர் ஊற்றெடுக்கத் தொடங்கியது.

குருக்கள் வைரத்தை எடுத்து அருகில் இருந்த தங்க கிரீடத்தில் கைகளாலேயே அழுந்தப் பதித்தார். அப்படியே, "ஓம் சக்தி!" என்றபடி அம்பாளின் தலையில் சூட்டினார்.

அப்படியே வைரம் கிடைத்துவிட்ட செய்தியைச் சொல்ல, வெளியில் ஓடினார்.

சூரிய ஒளியும் மெல்ல மேல் ஏறி கிரீடத்தில் பட்டு ஜொலிக்க ஆரம்பித்தது.

மகத்துவமான காட்சி... புதிரான செயல். தேவகி அப்படியே கண்களை மூடிக்கொண்டு லலிதா சகஸ்ரநாமத்தை நன்றியுடன் கூறத் தொடங்கிவிட்டாள்.

ப்ரியா வெளியே போய் சுதந்திரமாக வெயிலில் நின்று வெளி உலகைப் பார்த்துப் பரவசமடைந்தாள்.

சூரியனிடமும் ஒரே உற்சாகம்!

**(முற்றும்)**